www.gnanam.info
www.gnanam.lk

ஜனவரி 2022

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

260

விலை :
ரூபா 100/=

## 2022



பேரறிஞர்
பேராசிரியர் கலாநிதி
நா.சுப்பிரமணிய ஐயர்

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

ஒளி:22
சுடர்:08
260

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

**வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.**


## ஆசிரியர் குழு

**ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்**

**இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்**

**நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்**

**ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்**

## தொடர்புகளுக்கு

**தொ.பேசி.** ☞ 0094-11-2586013
0094-77-7306506
**தொ.நகல்** ☞ 0094-11-2362862
**இணையம்** ☞ www.gnanam.info
www.gnanam.lk
**தளம்.ஞானம்.இலங்கை**
**மின்னஞ்சல்** ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
**அஞ்சல்** ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka
**வங்கி விபரம்** ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(**மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்**)
**சந்தா விபரம்** ☞ Sri Lanka
**ஒரு வருடம்** :ரூ 1,000/=
**ஆறு வருடம்** :ரூ 5,000/=
**ஆயுள் சந்தா** :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |


*⊙ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்பு களின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
*⊙புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந் தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகிய வற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
*⊙பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*
*⊙படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

## இதழினுள்ளே.....




⊙ **கவிதைகள்**
*புலோலியூர் கு. சரவணன்* 09
*இனியவன் இசார்தீன்* 19
*ஜின்னாஹ்* 26
*கவிஞர் நிலா தமிழின்தாசன்* 26
*சாரிகொண்ட நரசிம்ம ராஜு / சோ.ப. (மொழிபெயர்ப்புக் கவிதை)* 36
*ஜெ.ஈழநிலவன்* 42
*மனோகரி ஜெகதீஸ்வரன்* 44

⊙ **சிறுகதைகள்**
*கே. எஸ்.சுதாகர்* 10
*ஏலையா க. முருகதாசன்* 20
*டாய் ஜீ / சு.முரளிதரன் (சீன மொழிபெயர்ப்புக் கதை)* 27
*வே. தில்லைநாதன் (குறுங்கதை)* 39

⊙ **கட்டுரைகள்**
*தமிழ்மணி அகளங்கன்* 05
*எம்.ஏ. நுஃமான்* 16
*பேராசிரியர் சபா ஜெயராசா* 23
*என். செல்வராஜா* 32
*புலேந்திரன் நேசன்* 37
*கலாபூஷணம் எஸ்.ஏ. நாகூர்கனி* 43
*தி. ஞானசேகரன்* 47

⊙ **நூல் அறிமுகம்**
*பரன்* 40

⊙ **பத்தி**
*பேராசிரியர் துரை மனோகரன்* 45

⊙ **சமகால கலை இலக்கிய நிகழ்வு**
*கலாபூஷணம் கே. பொன்னுத்துரை* 53

⊙ **வாசகர் பேசுகிறார்** 55

# ஆசிரியர் பக்கம்

## 2022 – ஈழத்துத் தமிழ் இலக்கிய எழுச்சி ஆண்டு

தமிழ் நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது அன்பு கனிந்த 2022 புதுவருட நல்வாழ்த்துக்கள்..!

சென்ற பல நூற்றாண்டுகளாக ஈழத்தில் தனித்துவமான தமிழ் இலக்கியப் பாரம்பரியம் ஒன்று இருந்துவந்துள்ளது. கிடைக்கப்பெறும் வரலாற்றுப் பதிவுகளின் முழுமையற்றதன்மை காரணமாக ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியானது காலத்துக்குக்காலம் மறைந்தும் துலங்கியும் காணப்பெற்றபோதும், கால இடைவெளிகளில் எமக்குக் கிடைக்கப்பெறும் ஈழத்து இலக்கிய நூல் களின் மூலமும் வரலாற்றுப் பதிவுகளின் மூலமும் ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தின் செழுமையை நாம் உணர்ந்துகொள்ளமுடியும். இதனை, **பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை** அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "அரசகேசரியிலிருந்து நமது கண்முன்னிருந்த கணேசையர் பரியந்தம் ஓரிலக்கிய வழி தொடர்ந்து வந்திருக்கிறதென்பது ஊகிக்கத்தக்கது. இந்த வழி இடையிடையே செடிகொடிகளில் மறைந்து தொடர்பு புலப்படாது போனாலும் வழியொன்று எவ்வாறோ தொடர்புற்று வந்திருக்கிறதென்பதற்குச் சான்றுகள் உண்டு."

இவ்வாறு பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்துவந்த ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியமானது 19ஆம் நூற்றாண்டிலே கோலோச்சி, தமிழ் உலகிற்கே வழிகாட்டியாக அமைந்தது. இதைப்பற்றி **கனக செந்தி நாதன்** அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "நாவலர் அவர்கள் 1822இல் பிறந்தார். குமாரசுவாமிப்புலவர் 1922இல் மறைந்தார். இவற்றிற்கு இடைப் பட்ட நூறு வருடகாலத் தமிழ்ச் சரித்திரத்திலே ஈழ நாட்டின் பங்கு பொன் எழுத்துக்களாலே பொறிக்கப்படவேண்டியது என்பதில் ஐயமில்லை. ஈழநாடு தமிழ் நாட்டுக்கே வழிகாட்டித் தலை நிமிர்ந்து நின்றது."

இந்த வகையிலே மலர்ந்திருக்கும் 2022ஆம் ஆண்டானது **ஈழத்து தமிழ் இலக்கியத்திலே முக்கியமான தொரு மைற்கல்லாக** அமைகின்றது. ஆறுமுகநாவலர் தொடங்கி **தமிழுக்குத் தொண்டாற்றிய** பல தலை சிறந்த தமிழ் அறிஞர்களை நினைவுகூரும் ஆண்டாக 2022ஆம் ஆண்டு அமைகின்றது.

01. **ஆறுமுக நாவலர்** பிறந்து 200ஆவது ஆண்டு நிறைவு (1822–1879)
02. **பிரான்சிஸ் கிங்ஸ்பெரி** பிறந்து 175ஆவது ஆண்டு நிறைவு (1847–1941)
03. **பாவலர் துரையப்பாபிள்ளை** பிறந்து 150ஆவது ஆண்டு நிறைவு (1872–1929)
04. **தி. த. கனகசுந்தரம்பிள்ளை** மறைந்து 100ஆவது ஆண்டு நிறைவு (1863–1922)
05. **அ. குமாரசுவாமிப் புலவர்** மறைந்து 100ஆவது ஆண்டு நிறைவு (1855–1922)
06. **ம. மு. உவைஸ்** பிறந்து 100ஆவது ஆண்டு நிறைவு (1922–1996)
07. **வண. ஞானப்பிரகாச சுவாமி** மறைந்து 75ஆவது ஆண்டு நிறைவு (1875–1947)
08. **ஆனந்த கே. குமாரசுவாமி** மறைந்து 75ஆவது ஆண்டு நிறைவு (1877–1947)
09. **கோ. நடேசையர்** மறைந்து 75ஆவது ஆண்டு நிறைவு (1887–1947)
10. **விபுலானந்த அடிகள்** மறைந்து 75ஆவது ஆண்டு நிறைவு (1892–1947)

பதிப்புத்துறை, பழந்தமிழ் இலக்கியம், நவீன இலக்கியம், இலக்கிய உரைகள், அகராதி முயற்சிகள், மொழிபெயர்ப்புகள், மொழியியல் ஆய்வுகள், தமிழியல் ஆய்வுகள், பண்டிதர் மரபு, பல்கலைக்கழக மரபு, கலைத்திறனாய்வு, சைவசமய இலக்கியம், இஸ்லாமிய இலக்கியம், கிறிஸ்தவ இலக்கியம், மலையக

இலக்கியம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த ஈழத்துத் தமிழ் அறிஞர் களை நாம் 2022ஆம் ஆண்டிலே நினைவுகூர்ந்து அவர்களின் தன்னலமற்ற தொண்டுகளை விதந்து, நன்றி பாராட்டி மகிழக்கூடிய சந்தர்ப்பம் எமக்குக் கிட்டியுள்ளது.

தமிழுக்கு தொண்டாற்றிய எமது முன்னோர்களை நினைவுகூர்ந்து அவர்கள் ஆற்றிய தமிழ்ப்பணிகளை ஞாபகப்படுத்தி அடுத்துவரும் தலைமுறையினருக்கு கடத்திச்செல்வது எமது கடமையாகும். அந்த வகையிலே 2022ஆம் ஆண்டை ஒவ்வொரு ஈழத்து தமிழ் அமைப்புக்களும் **ஈழத்துத் தமிழ் இலக்கிய எழுச்சி ஆண்டாகக்** கொண்டாடி, தமிழுக்குத் தொண்டாற்றிய முன்னோடிகளுக்கு எமது நன்றிக்கடனை செலுத்துதல் வேண்டும்.

இவ்வாறு நாம் எமது ஈழத்துத் தமிழ் அறிஞர்களைக் கொண்டாடும் இந்தத்தருணத்திலே எமக்கு முன்னோர்கள் கையளித்த இலக்கியச்செயற்பாடுகளை சென்ற நூறு ஆண்டுகளிலே நாம் எவ்வாறு கடத்தி வந்துள்ளோம், இனிமேல் நாம் எத்தகைய இலக்கியச் செயற்பாடுகளைத் திசைமுகப்படுத்தலாம் என்பதை யும் சிந்திப்பது அவசியமாகின்றது.

கனக செந்திநாதனின் கூற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு நோக்கினால், ஆறுமுக நாவலர் பிறந்த 1822ஆம் ஆண்டு தொடங்கி 100 ஆண்டுகள் கழிந்து சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், 1922ஆம் ஆண்டு இறந்தார். குமாரசுவாமிப் புலவர் இறந்த 1922ஆம் ஆண்டு தொடங்கி 100 ஆண்டுகள் கழிந்த பின்னர் தற்பொழுது 2022ஆம் ஆண்டு மலர்ந்துள்ளது. நாவலர் தொடங்கி சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் வரையிலான 100 வருடகால பொற்காலப்பகுதியின் பின்னர் ஈழத்துத் தமிழ் இலக்கியச் செயற்பாடுகள் கடந்த 100 ஆண்டுகளிலே எத்திசையிலே இயங்கி வந்துள்ளது? என்பதை நாம் எடுத்து நோக்கினால் ஒருபடி குறைந்திருப்பதை உணரமுடிகின்றது.

இதனை கனக செந்திநாதன் அவர்களே குறிப்பிடுகின்றார்.

> “பணவருவாயை நாடாமல், உண்மையான தமிழ் அபிமானத்தால் உந்தப்பட்டுச் சேவை செய்தோர் பலர். உபயோகமான – வாழ்க்கைக்கு வழிகாட்டியான – சமய நூல்களையும் இலக்கிய நூல் களையும் வெளியிட்டும், வசனத்தில் எழுதியும், ஆராய்ந்தும், உரையெழுதியும் அவர்கள் செய்த சேவைக்கும், இப்போதைய எழுத்தாளர்கள் செய்யும் இலக்கிய சேவைக்கும் உள்ள வித்தியாசம், மலைக்கும் மடுவுக்கும் உள்ள பேதம் போன்றது.”

(ஈழத்து இலக்கிய வளர்ச்சி – கனக செந்திநாதன் – 1964)

ஈழத்து கனக செந்திநாதன் அவர்களின் மதிப்பீடு இவ்வாறு இருக்கும்போது, இந்தியா – தமிழகத்தின் அளவுகோலும் இதையொற்றியே நிற்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. அதற்கு ஓர் உதாரணத்தை இங்கு காணலாம்.

> “இலங்கையில் செயல்படும் அண்மைக்கால தமிழியல் ஆய்வுகள் தொடர்ச்சி அறுபட்டு தத்தளிக்கிறது. முறையான பயிற்சி பெற்றவர்களோ குறிப்பிட்ட கருத்து நிலை சார்ந்து செயல்படுபவர்களோ அருகிப் போன சூழல் அங்கு நிலவுகிறது.”

(பேராசிரியர் வீ. அரசு (2013) – தமிழியல் ஆய்வின் கதை – மாற்றுவெளி ஆய்விதழ் 13)

சென்ற நூறு ஆண்டுகளிலே (1922–2022) ஆயிரக்கணக்கான இலக்கிய ஆளுமையாளர்கள், பல்லாயிரக்கணக்கான நூல்கள், பல நூற்றுக்கணக்கான அமைப்புக்கள், பல நாளிதழ்கள் – சஞ்சிகைகள் ஆற்றிய பணிகளை தராசின் ஒருபுறத்திலேயும் 19ஆம் நூற்றாண்டிலே தனிமனிதர்களாக நின்று சில ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் ஆற்றிய சேவைகளை தராசின் மறுபுறத்திலேயும் வைக்கும்போது சென்ற நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்ப் பணிகள் தாழ்ந்துப் போவதைக் காணலாம்.

முழுமையாக சென்ற நூறு ஆண்டுகளிலே ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் ஒன்றுமே செய்துவிடவில்லை என்று கூறிவிடமுடியாது. கீழைத்தேய கலைகளுக்கு தூதுவராகச் செயற்பட்ட ஆனந்த கே. குமாரசுவாமி, பன்மொழிப் புலவர் சா. ஞானப்பிரகாசர், தமிழ்த் தூது என அங்கீகாரம் பெற்ற தனிநாயகம் அடிகளார்,

முதல் தமிழ்ப் பேராசிரியரான சுவாமி விபுலானந்தர் ஆகியோரின் தமிழ் மற்றும் இலக்கியப் பணிகள் தமிழ் உலகத்துக்கு வழிகாட்டியாக அமைந்தன.

ஆனால், அச்செயற்பாடுகள் அனைத்தும் நூறு ஆண்டுகள் கழிந்த நிலையில் **ஒட்டுமொத்தமாக நோக்கும்போது** அங்கொன்றும்–இங்கொன்றுமாக, திட்டுத்திட்டாக – தலைதூக்கி துருத்திக்கொண்டு காணப்படுகின்றனவே ஒழிய, 19ஆம் நூற்றாண்டிலே ஈழத்தமிழர் அறிஞர்கள் செய்த பணிகளைபோல் நாமும் செய்துள்ளோம் என்று மார்தட்டி முன்நிற்கும் வண்ணம் அவை அமையவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

இதற்குக் காரணம் என்ன? **தன்னலமற்ற – நேர்மையான – ஆழ்ந்த நோக்கமுடைய – தொடர்ச்சி யான செயற்பாடுகளாக அவை அமையாமையே காரணம்** எனலாம்.

ஈழத்து அறிஞர்களை நினைவுகூரும் இந்த ஆண்டிலே இனிவரும் தமிழ் இலக்கியப் பாதையை திசைமுகப்படுத்த நாங்கள் என்ன செய்யலாம்? என்பதை இவ்விடத்திலே சிந்தித்தல்வேண்டும்.

இலங்கை இந்து சமய, கலாசார அலுவலகத்தின் முயற்சியால், இலங்கை அரசானது நாவலர் பிறந்து 200ஆவது ஆண்டு நிறைவான 2022ஆம் ஆண்டை, **நாவலர் ஆண்டு** எனப் பிரகடனப்படுத்தியுள்ளமை வர வேற்கத்தக்கது; பாராட்டலுக்குரியது.

அந்த வகையிலே ஈழத்துச் சித்தர் **யோகசுவாமி**கள் அவர்களின் அளப்பரிய வழிகாட்டல்களையும் நாம் இந்த இடத்திலே ஞாபகப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பல நூற்றுக்கணக்கான **நற்சிந்தனை**ப் பாடல்களையும் **அருள்மொழிகளை**யும் எமக்குத் தந்து வாழ்க்கைக்கு வழிகாட்டி நிற்கும் ஈழத்து தலைசிறந்த ஞானியான யோகசுவாமியின் 150ஆவது ஜயந்தி (யோகசுவாமி பிறப்பு ஆண்டு 1872) ஆண்டாகவும் இந்த ஆண்டு அமைகின்றது. இந்த ஆண்டிலே இந்து சமய, சைவ சமய, யோக சுவாமிகளின் அமைப்புக்கள் இந்த ஈழத்துச் சித்தர் சார்ந்த விழிப்புணர்வையும் சமூகத்தில் ஏற்படுத்தல் வேண்டும்.

அத்தோடு,

**(1)** தொண்டாற்றிய தமிழ் அறிஞர்களைத் தொடர்ச்சியாக நினைவுகூர்ந்து சமூகத்திலே தமிழ் உணர்வையும் இலக்கிய உணர்வையும் மேலிடச் செய்தல் வேண்டும்.

**(2)** தமிழ் இலக்கிய அமைப்புகள் ஒன்றுபட்டு தன்னலமற்ற உயரிய நோக்கத்துடன் இயங்குதல் வேண்டும்.

**(3)** அமைப்புக்கள், ஐந்து – பத்து வருட காலத்திற்கான தமிழ் இலக்கிய மேம்பாட்டு திட்டங்களை வகுத்து திசைமுகப்படுத்தி தொடர்ச்சியாக இயங்குதல்வேண்டும்.

மகாகவி பாரதியின் தீர்க்கதரிசன வரிகளை ஞாபகப்படுத்திக்கொண்டு 2022ஆம் ஆண்டினை நாம் அனைவரும் ஒன்றிணைந்து வரவேற்போமாக!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளி நாட்டோர் அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின் வாக்கினிலே ஒளி யுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்வார்,
தெள்ளூற்ற தமிழமுதின் சுவைகண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்.

❍❍❍

அட்டைப்பட அதிதி

# வித்யா பூஷணம், கலாரத்னா, இலக்கியப் பேரறிஞர் பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணிய ஐயர்



இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற தமிழ்ப் பேரறிஞர்களுக்குள்ளே பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் பெரிதும் மதிக்கத் தக்கவர், போற்றத்தக்கவர், என்பதற்கு இரண்டு கருத்துக்கள் இல்லை என்று உறுதியாகக் கூறலாம்.

பழந்தமிழ் இலக்கியம், நவீன தமிழ் இலக்கியம், சமயம் - தத்துவம், திறனாய்வு ஆகிய நான்கு துறைகளிலும் பெரும் ஆளுமை கொண்டவராக விளங்கும் இவரது இன்னொரு ஆளுமையாகச் சொல்லத்தக்கது இவரது சொற்பொழிவுத்திறன் ஆகும். இவற்றோடு இவரது விசேட ஆளுமையாகச் சொல்லத்தக்கது புராண இதிகாச அறிவின் ஆழம் எனலாம். இன்றும் புராண படனம் செய்கின்ற ஒரே பேராசிரியர் என்று இவரைத்தான் சொல்லலாம்.

**புராண படனம்**

இவர் தனது தமிழ்ப் புலமையை வளர்த்துக்கொண்டது கந்தபுராண படனத்தின் மூலமாகத்தான் என்று அடிக்கடி சொல்லுவார்.

ஒருவர் புராணப் பாடல்களை பொருத்த மான இசையோடு பாடி வாசிக்க, அதே இசையோடு பாடலின் பொருளை விளக்கமாகக் கூறுவதுதான் புராண படனம் என்று கூறப் படுகிறது. புராண படனம் செய்வது சாதாரண காரியமில்லை. நினைவாற்றல், கிரகித்தல் ஆற்றல், வெளிப்படுத்தும் திறன், மொழி ஆற்றல் என்பன இத்துறைக்கு அத்தியாவசியமானவை. அக்காலத்தில் நிகண்டு படிக்காமல் புராண படனம் செய்ய முடியாது. யாழ்ப்பாணத்தின் கல்வி மரபும், கலாசாரமரபும் புராண படனத்தோடு மிக மிக நெருங்கிய தொடர்புகொண்டவையாகும்.



**தமிழ்மணி அகளங்கன்**

ஆறுமுக நாவலரால் புத்துயிரூட்டப்பட்ட இப்பணி வன்னியிலும் பரவியிருந்தது.

இப் புராண படன மரபிலிருந்து உருவாகிய வர்தான் பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயர். வன்னியில் இதற்கு முதல் எடுத்துக்காட்டாக விளங்குபவர் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தான் என்று உறுதியாகச் சொல்லலாம்.

வன்னியின் முதல் தமிழ்ப் பேராசிரியர் என்ற பெருமையைப் பெற்றவர், பேராசிரியர் பொன். பூலோகசிங்கம் அவர்களே. இவர் வவுனியா மாவட்டத்தில் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் பிறந்து வளர்ந்தவர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் (அப்போதைய வவுனியா மாவட்டம்) பிறந்து வளர்ந்த முதலாவது தமிழ்ப் பேராசிரியர் என்ற பெருமையைப் பெற்றவர், பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயர் அவர்களே. பேராசிரியர் பொன். பூலோகசிங்கம் அவர்களின் மாணவனாக பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இவர் கல்வி கற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புராண படனத்தோடு தொடங்கிய பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயர் அவர்களின் தமிழ் இலக்கியப் பயணம் இவரைத் தமிழ்ப் பேராசிரியராக, தமிழ்ப் பேறிஞராக உருவாக்கி விட்டிருக்கிறது என்று சொன்னால் மிகையில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளிய வளையில் இருக்கும் கலியாண வேலவர் ஆலயத்தில் இவரது தந்தையார் நாகராஜா ஐயர் அவர்களும், இவரது மூத்த சகோதரர் நடராஜக்குருக்கள் அவர்களும் கந்த புராணம், பிள்ளையார் புராணம், திருவாதவூரடிகள் புராணம், சிவராத்திரி புராணம் முதலிய வற்றைப் புராணபடனம் செய்து பெரும் புகழ் பெற்றவர்கள்.

அவர்களோடு சேர்ந்து இவரும் புராண படனம் செய்யப்பழகி அத்துறையில் பெரும் வித்தகராக விளங்கினார். இப்போதும் கனடாவில் கந்தபுராண படனம் செய்துகொண்டிருக்கிறார். ''புராண போதகர்'' என்ற பட்டத்தையும் அங்கு பெற்றுள்ளார்.

இவர் புராண படனம் செய்யுங் காலங் களிலும் புராணங்களைப் படித்த நேரங்களிலும் தமிழ்க் கவிதை இலக்கியச் சுவையில் மூழ்கியவராகி பழந்தமிழ் இலக்கிய நூல் களைத் தேடித் தேடி வாசித்து மனனம் செய்து ரசித்து மற்றவர்களுக்கும் விளக்கிக் கூறுவதில் பெருவிருப்பமும், பெரும் மகிழ்ச்சியும் கொண்டிருந்தார்.

பின்பு பல்கலைக் கழகக் கல்வியினால் நவீன ஆய்வியல் துறைகளுடன் ஏற்பட்ட தொடர்பின் மூலம் சமயம், தத்துவம், இலக்கியம், மற்றும் கலைகள் சார்ந்த துறைகளை புறநிலையாக நின்று வரலாற்று முறையில் அணுகமுற்பட்டார். அவ்வகை அணுகுமுறையூடாக திறனாய்வுத் துறையிலும் பெரும் ஆளுமை பெற்றார்.

**பிறப்பு – கல்வி**

இந்தியத் தமிழகத்து தஞ்சாவூர்--திருச்சி பகுதிகளை பூர்வீகமாகக் கொண்ட ஜெகதீஸ்வர ஐயர் நாகராஜா ஐயர் —நீலாம்பாள் குடும்பத்தினர் 1930களில் இலங்கைக்கு வந்து வன்னியின் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளியவளையை வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்தனர். இவர்களது இரண்டாவது மகனாக 25-12-1942 அன்று இவர் பிறந்தார்.

முள்ளியவளை சைவப்பிரகாச வித்தியா சாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைக் கற்றார். அங்கே வன்னியின் மூத்த ஆளுமையாகக் கருதப்படும் கலாநிதி முல்லைமணி (திரு.வே.சுப்பிரமணியம்) அவர்களின் விருப்பத்துக்குரிய மாணவனாகக் கல்வி பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கலாநிதி முல்லைமணி அவர்களோடு பல பணிகளை பிற்காலத்திலே செய்து முல்லைத்தீவு மாவட்டத்தின் கலை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினை வழங்கினார்.

இவர் தனது சுய முயற்சியினால் படித்து பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் வாய்ப்புப் பெற்றார். 1969இல் தமிழ் சிறப்புப் பட்டம் பெற்று-B.A (Hons) இளங்கலைமாணிப் படிப்பைப் பூர்த்திசெய்தார்.

1968ஆம் ஆண்டில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் ஒரு கலைவிழா நடைபெற்றது. இலங்கை சாகித்திய மண்டலம் சார்பில் பிரதேச நிலையில் நடைபெற்ற அப்பெருவிழாவை முன்னின்று நடத்தியவர் கலாநிதி பொ.பூலோகசிங்கம் அவர்கள்.

அப்போது பேராதனை பல்கலைக்கழ கத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த திரு. நா.சுப்பிரமணிய ஐயர் அவர்களும் வந்திருந்தார். அப்போதுதான் நான் இவரை முதன் முதலில் சந்தித்தேன். அச் சந்திப்பு பின்னால் அவருக்கும் எனக்கும் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தியது.

இளங்கலைமாணிச் சிறப்புப் பட்டத்தைப் (B.A.Hons) பெற்ற இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் தற்காலிகத் துணை விரிவுரையாளராகப் பதவி பெற்றார். அக்காலத்தில்(1970 ---1972 இல்) முதுகலை மாணி (M.A) பட்டத்தையும் பெற்றார். முதுகலை மாணிப் பட்டத்துக்காக இவர் சமர்ப்பித்த ஆய்வு ஏடு ''ஈழத்துத் தமிழ் நாவல்கள்'' என்னும் தலைப்பிலமைந்ததாகும்.

பின்பு இவர் தனது ஆய்வேட்டின் தரவுகளையும் 1977 வரையான காலகட்டத் தரவுகளையும் உள்ளடக்கியதாக ''ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்'' என்ற பெயரிலான நூலை 1978இல் வெளியிட்டார். இந் நூல் புதுக்கிய பதிப்பாக 2009இல் இரண்டாம் பதிப்பைக் கண்டது.

**பணி நிலை**

1970—72, 75 காலப் பகுதிகளில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பேராதனை, மற்றும் வித்தியாலங்கார வளாகங்களில் தற்காலிகத் துணை விரிவுரையாளராகப் பணியாற்றினார். இடையில் ஓராண்டுக்காலம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சில மாதங்கள் வசதிக் கட்டணத்தில் கற்பிக்கும் ஆசிரியராக ஆசிரியப் பணி புரிந்தார்.

தனது பல்கலைக் கழக விரிவுரையாளர் கனவு கனவாகவே போய்விடுமோ என்ற அச்சத்தில் வாழ்ந்த அக்காலத்தில்(1975 ஆகஸ்ட்) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இளந்துணை நூலகர் (Junior Asst Librarian) பதவி பெற்று உள் நுழைந்தார். அக்காலத்தில்

நான் அப்பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொண்டிருந்தேன். எங்கள் அன்பு இறுகியது. இலக்கிய இரசனையை எனக்கு ஊட்டியவர்களில் இவர் மிக முக்கியமானவர் எனலாம்.

பல ஏமாற்றங்களின் பின் 1978 ஜனவரி மாதத்தில் தமிழ்த்துறைத் துணை விரிவுரையாளர் பதவி பெற்றார். பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் விருப்பத்துக்குரிய மாணவனாக விளங்கிய இவருக்கு அப்போது இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத் தலைவ ராகப் பணியாற்றிய பேராசிரியர் சு.வித்தியா னந்தன் அவர்கள் பதவி கொடுத்து அழகு பார்த்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் "தமிழ் யாப்பு வளர்ச்சி.- (கி.பி.11 முதல் கி.பி.19 இறுதிவரையான தமிழ் யாப்பு வளர்ச்சியை நுனித்து நோக்குவதாக அமைந்த ஆய்வு) என்ற ஆய்வுக்கட்டுரை மூலம் கலாநிதிப் (Ph.D) பட்டம் பெற்றார். இவ்வாய்வு தேர்வாளர்களால் மிகவும் விதந்துரைக்கப்பட்டது (Highly Commented) என்னும் சிறப்புடையது.

யாழ்ப்பாண வளாகம் பல்கலைக்கழகமாக மாறியபின்(1978) அங்கே தமிழ்த் துறையில் விரிவுரையாளராகவும் அத்துறைத் தலைவ ராகவும், இணைப் பேராசிரியராகவும் என 24 ஆண்டுகள் பணியாற்றி நாட்டுச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து 2002ஆம் ஆண்டில் விருப்பு ஒய்வு பெற்று தமிழகம் சென்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் தமிழ், இந்து நாகரிகம், நுண்கலைத்துறை சார்ந்த பாடத்திட்டங்களின் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தினார். முதுமாணி (M.A), முது தத்துவமாணி (M.Phil), கலாநிதி (Ph.D) பட்ட ஆய்வுகளுக்கு மாணவர்களை நெறிப்படுத்துவதில் ஈடுபட்டார். மாணவ கலை இலக்கிய செயற்பாடுகளுக்கு ஆலோசகராகவும் விளங்கினார்.

**படைப்பிலக்கியம்**

கவிதை இவருக்குப் பிடித்ததுறை எனலாம். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் (1969) இலங்கைப் பல்கலைக்கழக இந்துமாமன்றம் நடத்திய கவிதைப் போட்டியில் "பேராதனைத் திருமுருகன் ஆற்றுப்படை"என்ற இவரது கவிதை முதற் பரிசாகத் தங்கப் பதக்கம் வென்றது.

சிறுகதைகள் சிலவற்றையும் எழுதியுள்ள இவர் இலக்கியவரலாறு, திறனாய்வு, தத்துவம், சமயம், முதலானவை சார்ந்து பல ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளார். அத்தோடு பொது வாசிப்புக்குரியதாகவும் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

சிறந்த சமய இலக்கியச் சொற்பொழி வாளரான இவர் இலங்கை வானொலியிலும், கோயில்கள், பாடசாலைகள், கலை இலக்கிய நிகழ்வுகள், ஆய்வு மாநாடுகள், ஆய்வுக் கருத் தரங்குகள், கலைவிழாக்கள் என இலங்கையின் பல பாகங்களிலும் சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

சிறந்த திறனாய்வாளரான இவர் பல நூல் வெளியீடுகளில் விமர்சன உரை களையும் ஆற்றியிருக்கிறார். பல நூல்களுக்கு அணிந்துரையும், முன்னுரை, மதிப்புரை முதலானவற்றையும் எழுதியுள்ளார்.

**தமிழக ஆய்வுலகுடனான தொடர்பு**

1990களிலிருந்து சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் அன்னை தெரேசா பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம், ஆகியவற்றின் ஆய்வுநிலை சார்ந்த நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருகிறார்.

அத்துடன் இவற்றுட் பலவற்றின் உயர்பட்ட ஆய்வேடுகளின் வெளிநிலைத் தேர்வாளர்களில் ஒருவராகவும் பணியாற்றி வருகிறார். சென்னை ஆசியவியல் நிறுவனம் (Institute of Asian Studies) சார்பில் இயங்கும் திருக்குறள் தொடர்பான அனைத்துலக நிலை ஆய்வுமாநாட்டுச் (International Conference on Thirukkural) செயற்பாட்டுக்கான கனடாப் பிரதிநிதியாகவும், ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் 2016--2018 ஆம் ஆண்டுகளில் செயற்பட்டுள்ளார்.

**சமூகம் தழுவிய செயற்பாடுகள்**

பல்கலைக் கழக எல்லைக்கு அப்பாலும் சமூக மட்டத்தில் தனது செயற்பாடுகளை இவர் விரிவுபடுத்திக் கொண்டார்.

அந்த வகையில் யாழ் இலக்கிய வட்டத்தின் முக்கிய செயற்பாடுகளிலும் இவர் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் செயற்குழு உறுப்பின ராகவும், இலங்கை தேசிய சாகித்திய மண்டல தமிழிலக்கியக் குழுவின் துணைத் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

1980களில் யாழ்.மண்ணில் வலிகாமம் வடக்கு சூழல்சார் கல்வியாளர்கள் பலருடன் இணைந்து "கலை இலக்கியக் களம்" என்ற ஒரு அமைப்பைத் தொடக்கி வழி நடத்தி தமிழ்ப் பணி புரிந்திருக்கிறார், மாவிட்டபுரம் ஆதீனம், நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனம், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியவற்றின் செயற்பாடுகளில் இணைந்து பணியாற்றினார்.

**நூல்கள்**

இலக்கியம், வரலாறு, திறனாய்வு, சமயம், தத்துவம் சார்ந்த பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதிய இவரின் ஆக்கங்களாக நூல்வடிவம் பெற்றவை சிலவே.

1. ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம். (1978, புதுக்கிய இரண்டாம் பதிப்பு 2009)
2. இந்தியச் சிந்தனை மரபு (1993, இரண்டாம் பதிப்பு 1996) இவர் தமது துணைவியார் கௌசல்யாவுடன் இணைந்து எழுதிய இந்நூல்1993 இற்கான இலங்கை தேசிய சாகித்ய மண்டல விருது, மற்றும் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக்கழக விருது ஆகியவற்றைப் பெற்றதாகும். இந்நூல் சில பல்கலைக் கழகங்களில் பாட நூலாகப் பயன்பட்டு வருகின்றது.
3. தமிழ் ஆய்வியலில் கலாநிதி க.கைலாசபதி (1999)
4, நால்வர் வாழ்வும்—வாக்கும்(2002),வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சின் இவ்வாண்டுக் கான சிறந்த நூற்பரிசு, மற்றும் இந்தியாவின் State Bank of India விருது ஆகியவற்றைப் பெற்றதாகும்.
5. கந்தபுராணம் –ஒரு பண்பாட்டுக் களஞ்சியம்(2002), இவ்வாண்டுக்கான தமிழக சேக்கிழார் ஆய்வு மன்ற விருது பெற்றது.
6. கலாநிதி நா.சுப்பிரமணியனின் ஆய்வுகள்—பார்வைகள்—பதிவுகள். தொகுதி--1, தொகுதி—2 (2005)
7. காலத்தின் குரல் (2005)
8. திறனாய்வு நோக்கில் தமிழன்பன் கவிதைகள் (2005)

**சிறு பிரசுரங்கள்**

வீரகேசரிப் பிரசுர நாவல்கள்(1977), "க.பொ.இரத்தினம்". "தமிழிலக்கியத் திறனாய் வியலில் ஈழத்தின் முப்பெரும் ஆளுமைகள்" (அமுதுப்புலவர் நினைவுப் பேருரை.) ஈழத்துத் தமிழ் நாவல்கள் –நூல் விபரப் பட்டியல்.(1977)

**கனடாவில் இயங்குநிலை**

2002இல் தமிழகம் சென்ற இவர் 2005இல் கனடாவிற்குச் சென்றார். 20016 வரை ரொறன்ரோ ஸ்காபரோவில் வாழ்ந்தார். அங்கே தனது தமிழ்ப்பணியையும் இந்து சமயப் பணியையும் தொடர்ந்தார்.

புராண படனம், சமயச் சொற்பொழிவுகள், எனத்தொடங்கி இப்போது பல பணிகளைச் செய்துவருகிறார்.

தமிழில் இளங்கலை மற்றும் முதுகலை மாணிப் பட்ட கற்கை நெறிகளை முன்னெடுக்கும் செயற்பாடாக கனடா ரோறன்ரோ கனடாத் தமிழ்க் கல்லூரியின் உயர் கல்விப்பீடத்தின் தலைவராகவும், கனடா சைவசித்தாந்த மன்ற வெளியீடான "அன்புநெறி" இதழின் சிறப்பாசிரியராகவும் 2006 முதல் செயற்பட்டு வருகிறார்.

கனடியத் தமிழரின் வாழ்வியலிற் பயிலும் ஆங்கிலச் சொற்களுக்கான நேர்ப்பொருளைத் தரும் தமிழ்ச் சொற்களை ஆக்கும் முயற்சியில் சொல்லாக்கக்குழு என்ற வல்லுநர் குழுவில் இணைந்து 2008இலிருந்து அதன் சொல்லாக்கக் குழு உறுப்பினராகப் பணியாற்றிவந்துள்ளார்.

இவர் 2014இல் வைத்திய கலாநிதி இ.இலம்போதரன், மற்றும் எழுத்தாளர் "அகில்" ஆகியோருடன் இணைந்து "ரொறன்ரோ தமிழ்சங்கம்" என்ற அமைப்பை நிறுவி அவர்களோடு அதன் நிறுவக இயக்குநர்களில் ஒருவராகச் (Founder Director) செயற்பட்டு வருகிறார்.

2006 இலிருந்து ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை, கனடா வன்னித் தமிழ்ச் சமூக கலாசார அமையம் ஆகியவற்றிலும், 2012இலிருந்து கனடா இந்துக் குருமார் ஒன்றியத்திலும் காப்பாளராகத் திகழ்ந்து வருகிறார். அத்தோடு 2012இலிருந்து கனடா தமிழ் எழுத்தாளர்

இணையத்தின் ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார்.

2017இலிருந்து ஒஷாவா நகரில் வாழ்ந்து கொண்டிருக்கும் இவர். "கனடா வன்னியியல் ஆய்வுமன்றம்" என்ற அமைப்பின் இயக்குநர்களில் ஒருவராக திரு.த.சிவபாலு, திரு.சபா.இராஜேஸ்வரன் ஆகியோரோடு இணைந்து பணியாற்றிவருகிறார்.

2020இல் சிந்தனைக்களம் (இசை –நடனம்) என்ற அமைப்பை தனது துணைவியார் கலாநிதி கௌசல்யா, மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி (திருமதி) சுகன்யா அரவிந்தன் ஆகியோரோடு சேர்ந்து தொடங்கினார். இவர்கள் மூவரையும் நிறுவக இயக்குநர்களாகக் கொண்ட இவ் அமைப்பு தமிழரின் இசை, மற்றும் நடனம் ஆகியன தொடர்பான உயர்நிலைக் கலந்துரையாடல்களை மேற்கொள்வதை குறிக்கோளாகக் கொண்டது. கனடா, இலங்கை, தமிழகம், அவுஸ்ரேலியா உட்பட பன்னாட்டவரும் இணைந்து செயற்படும் இக்களத்தில் இதுவரை பன்னிரண்டு ஒன்று கூடல்கள் நிகழ்ந்துள்ளன.

இவரது துணைவியார் கௌசல்யா அவர்கள் இசைத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர் என்பதும் இவரது ஆய்வுப்பணிகளுக்கு முழுமையாக ஒத்துழைத்து வருகிறார் என்பதும் மகிழ்ச்சிக்குரியது.

**பட்டங்கள், கௌரவங்கள்**

1, வித்யா பூஷணம்-- நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்—1978- இலங்கை (சமயச் சொற்பொழிவாளர் கௌரவம்)

2. ஸ்ரீ வித்யா பூஷணம் –2006 (மேருபுரம் பத்ரகாளி அம்மன் தேவஸ்தானம் ---ரொறன்ரோ, கனடா)

3. இலக்கியப் பேரறிஞர் –2007 (கனடா ரொறன்ரோ வரசித்தி விநாயகர் ஆலயம்)

4. புராண போதகர் ---2008(கனடா இந்துசமயப் பேரவை –ரொறன்ரோ)

5. கலாரத்னா--2017 (இந்து குருமார் ஒன்றியம் -கனடா)

**விருதுகள்**

1. தம்பிமுத்துப்பிள்ளை கனகசுந்தரம்பிள்ளை நினைவு ஆய்வியல் பரிசு 1985 (இது கலாநிதிப் பட்ட ஆய்வை சிறப்புற நிறைவு செய்தவர்களுக்கு ஆண்டுதோறும் யாழ். பல்ககைக் கழகம் வழங்கும் பரிசாகும்..) 2. திருக்குறள் விருது (சென்னை) -(உலகத் திருக்குறள் உயராய்வு மையத்தால் திருக்குறட் புலமைக்காக ஆண்டுதோறும் வழங்கப் படுவது.) 3. தமிழர் தகவல் விருது---- 2007 (கனடா தமிழர் தகவல் இதழ்-ரொறன்ரோ), 4. கனடா இலக்கியத் தோட்ட விருது---2009 5. TAMIL MIRROR விருது--2015 (ரொறன்ரோ, கனடா). 6. உதயன் விருது—2017(கனடா-உதயன் இதழ்) 7. ஈரோடு தமிழன்பன் வாசகர் பேரவையின் வாழ்நாட் சாதனையாளர் விருது.2019 -வட அமெரிக்கா

தமிழகப் பல்கலைக் கழகங்கள் பலவற்றின் உயர் பட்ட ஆய்வேடுகளுக்கான வெளிநிலைத் தேர்வாளராகப் பணியாற்றிக்கொண்டு தமிழுக்கும் சமூகத்துக்கும் பயன்படும் வகையில் சிறப்பாக வாழ்ந்துகொண்டிருக்கும் இவர் கடந்த பதினாறு ஆண்டுகளுக்குமேலாக எழுதிவந்துள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை நூல்களாக்கும் முயற்சியில் தற்பொழுது கவனம் செலுத்தி வருகிறார். இவரது முயற்சி வெற்றிபெற வாழ்த்துவோம்.


இவர் தனது துணைவியார் மற்றும் மூன்று பிள்ளைகள், பேரப் பிள்ளைகளோடு இன்னும் சிறப்பான வாழ்வு வாழ்ந்து தமிழுக்குத் தொண்டாற்ற ஞானம் சஞ்சிகை சார்பில் வாழ்த்துகிறேன்.

❍❍❍

## புத்தாண்டே வருக

அறங்கள் மலர்ந்து அவனி சிறக்க
திறன்கள் விரிந்து தீமை யகற்ற
வயல்கள் விளைந்து வயிறு குளிர
அயல்கள் தோறும் அன்பு பெருக
முகக் கவசம் முற்றும் விலக்கி
அகங்கள் மகிழ்ந்து ஆனந்த மடைய
விசும்பில் இருந்து விலைவாசி இறங்கி
நசுங்கும் மக்கள் நன்மை பெற்றிட
புதுமை படைக்கும் புதிய ஆண்டாய்
மெதுவாய் வருக மேன்மை தரவே

**–புலோலியூர் கு. சரவணன்**



சிறுகதை

# பால் வண்ணம்




## கே. எஸ். சுதாகர்

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைச் சேர்ந்த கே. எஸ். சுதாகர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்றவர். தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார். ஞானம் சஞ்சிகைக்கு இவர் புதியவரல்லர். கடந்த பதினைந்து வருடங்களுக்குமேலாக ஞானம் சஞ்சிகையில் எழுதிவருகிறார். ஞானம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டிகளில் பத்துத் தடவைகள் பரிசு பெற்றிருக்கிறார். இவற்றைவிடவும் ஏனைய சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணைய இதழ்கள் நடத்திய போட்டிகளில் பதினெட்டுத் தடவைகள் பரிசு பெற்றிருக்கிறார். "எங்கே பொகிறோம்", (2007), "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்" (2014) ஆகியவை இவரது சிறுகதைத் தொகுதிகள். இவற்றில் சென்றிடுவீர் எட்டுத்திக்கும் என்ற சிறுகதைத் தொகுதி பன்னிரண்டு பரிசுச் சிறுகதைகளின் தொகுப்பாகும்.


நான் அவுஸ்திரேலியா வந்திருந்தபோது, நீ இங்குதான் இருக்கின்றாய் என்பதைத் தெரிந்துகொண்டேன். ஆனால் திருமணம் செய்யாமல், தனித்து இருக்கின்றாய் என்ற போது மனமுடைந்து போனேன். 'நான் உன்னைச் சந்திக்க விரும்புகின்றேன்' என்று தொலைபேசியில் கேட்டபோது தயங்காமல் 'தாராளமாக' என்றாய்.

ஏறத்தாழ முப்பது வருடங்களில் என்னை மறந்திருப்பாய் என நினைத்திருந்தேன்.

சிட்னி நகரின் மத்தியில், இருபத்திநான்கு தளங்கள் கொண்ட குடியிருப்பில், இரண்டு படுக்கை அறைகள் கொண்ட வீட்டில், "வாருங்கள்... வாருங்கள்.." என முகம் மலர வரவேற்றாள். என்னை அடிமுதல் நுனிவரை கணப்பொழுதில் அளவெடுத்தாள். வாழ்க்கையில் லௌகீக இன்பங்களை அனுபவித்து சருகாகிப் போய்விட்ட எனக்கு, அவளின் இளமைத் தோற்றம் வியப்பைத் தந்தது. பிக்ஸி ஹேர்கட்டுடன், பாவாடை சட்டையில் நின்றாள். அலங்காரங்கள் எதுவும் இல்லை. மாசுமறுவற்ற கனிந்த பழமொன்று, சுவைக்கப்படாமலே, காலத்துடன் தன்னளவில் சுருங்கிப் போயிருப்பதாக உணர்ந்தேன்.

வீடு பளிச்சென்று அழகாக இருந்தது. டாம்பீகமான பொருட்கள் எதுவும் இல்லை.

"நான் உங்களை மதியச் சாப்பாட்டிற்கல்லவா அழைத்திருந்தேன். நீங்கள் இரவுச் சாப்பாட்டிற்கு வந்திருக்கின்றீர்கள்..." இரண்டுமணி நேரம் தாமதமாக வந்துவிட்டதை இப்படி அழகாகச் சொன்னாள்.

"மன்னிக்க வேண்டும். அவுஸ்திரேலியா எனக்குப் புதிது. அக்காவின் கணவர் ரவுணுக்குள் கார் ஓடமாட்டார். என்னைத் தங்களுக்கு அருகேயுள்ள ஸ்ரேஷனில் இறக்கிவிட்டார். நான் றெயின் எடுத்து, றாம் எடுத்துவரத்

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை

அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி 2021

1ஆம் பரிசு



தாமதமாகிவிட்டது. ஒரு பேராசிரியைக்கு நேரம் பற்றிய கரிசனை என்னவென்று எனக்குத் தெரியும்...''

சிரித்துவிட்டு, ''அப்படியில்லை. நேரத் திற்குச் சாப்பிட வேண்டும். அதுதான். முதலில் சாப்பிடுவோம். பின்னர் கதைப்போம்.'' சாப்பாட்டு மேசைக்குக் கூட்டிச் சென்றாள். மேசையில் எனக்கு எதிராக நின்றுகொண்டு உணவு பரிமாறினாள்.

''நீங்கள் சாப்பிட்டு விட்டீர்கள்தானே?''

''அது எப்படி விருந்தாளியைவிட்டு நான் சாப்பிட முடியும்?'' தனக்கும் ஒரு பிளேற் எடுத்துக் கொண்டாள்.

விருந்தாளி... இன்று நான் ஒரு விருந்தாளி யாகிப் போனேன்... நான் சாப்பிடுவதை நிறுத்தி அவளையே பார்த்தபடி இருந்தேன்.

''பாக்கிறது இருக்கட்டும். முதலிலை சாப்பிடுங்கோ. பிறகு நிறையப் பாக்கலாம், கதைக்கலாம்.''

சாப்பிடும்போது பழைய நினைவுகள் வரவே புரைக்கடித்தது.

''மன்னிக்கவும். தண்ணீர் வைக்க மறந்து போனேன்'' எழுந்து சென்று இரண்டு கண்ணாடிக் குவளைகள் எடுத்துவந்து நீர் ஊற்றினாள். இதமான சுடுநீர். குடித்தும் புரை நிற்கவில்லை. எழுந்து வந்து, தன் இடது கையினால் என் தலையில் மெதுவாக மூன்று தடவைகள் தட்டினாள்.

''சாப்பாடு சரியில்லைப் போல... அதுதான்'' சொல்லிவிட்டு மறுகரையில் போய் இருந்து உணவருந்தத் தொடங்கினாள்.

சமையல் பிரமாதம் இல்லைத்தான். அதைச் சொல்ல முடியாது.

''சா...! தேவாமிர்தம்.... சமையல் பக்குவம் பிரம்மாதம்'' சொல்லியபடி மளமளவென்று சாப்பிட்டேன்.

சாப்பாட்டின் பின்னர் பழங்கள் வெட்டித் தந்தாள். சாப்பிட்டுக்கொண்டே கதைத்தோம். இடையே இரண்டு தொலைபேசி அழைப்புகள் அவளுக்கு வந்தன. அவளின் அப்பா நாளை ஞாயிற்றுக்கிழமை வருவதாகச் சொன்னார்.

''அப்பா வந்தால் இரண்டு மூன்று நாட்கள் என்னுடன் தங்கிச் செல்வார். மற்றும்படி அண்ணா குடும்பத்துடன் இருக்கின்றார்.''

எங்கள் நீண்ட உரையாடல் - பெரும்பாலும் அவளின் நண்பர்களைப் பற்றியும், என்னுடைய நண்பர்களைப் பற்றியுமாக அமைந்தது.

''என்னுடைய குடும்பம் பற்றிக் கேட்க மாட்டீரா?''

''இல்லை... நீங்கள் சொன்னால் கேட்பேன்.''

''மனைவி சமீபத்தில் இறந்து போனாள். இரண்டு பிள்ளைகள். திருமணம் முடித்து விட்டார்கள்.''

அவள் இருக்கையைவிட்டு எழுந்து மனதிற்குள் தியானித்துக் கொண்டாள்.

''மனைவியின் இழப்பிற்கு எனது ஆழ்ந்த கவலை. எப்படி இறந்தார்?''

''நிறைய வருத்தங்கள். எதுவென்று குறிப்பிட்டுச் சொல்லமுடியாது!''



'எல்லாம் கரைகண்டு, பிள்ளைகுட்டிகளையும் பேரப்பிள்ளைகளையும் கண்டு, மனைவியையும் இழந்த பின்னர் தான் என்னைச் சந்திக்க வந்தீர்களா?' என என்னைக் கேட்கவில்லை. என் மனைவியின் இழப்பிற்கு மௌன அஞ்சலி செலுத்துகின்றாள்.

திடீரென்று, ''உங்கள் வலது காலுக்கு என்னவாயிற்று? சாதுவா இழுத்து இழுத்து நடக்கின்றீர்களே!'' எனக் கேட்டாள்.

‘‘ஏன்....? அப்படிப் பெரிசா வித்தியாசம் தெரியுதா?’’ சிரித்தேன். என் சிரிப்புடன் அவளும் கலந்துகொண்டாள்.

‘‘இல்லை... முந்தி நான் சந்திச்சபோது இல்லைத்தானே! அதுதான் கேட்டேன்.’’

‘‘அதை விடுங்க... அது ஒண்டும் பெரிய குறையா எனக்குத் தெரியேல்லை...’’

‘‘சரி... இப்ப வேலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டீர்களா?’’

‘‘இல்லை... இன்னும் சில வருடங்கள் இருக்கு.’’

ஜன்னல் சீலையை விலத்தி வானத்தைப் பார்த்தாள். வானம் தன் அந்திம நேரத்திற்குப் போயிருந்தது. தூரத்தே நகரின் வண்ணமயமான காட்சி கண்ணுக்கு விருந்தானது. ‘சிட்னி துறைமுகப்பாலம்’, ‘ஒப்ரா ஹவுஸ்’ இரண்டும் பனிப்புகாரினுள் பொத்திப்பொத்தி முகம் காட்டின.

‘‘இரவு தங்கி காலை புறப்படுங்கள். அவசரம் ஒன்றும் இல்லைத்தானே?’’ அவளின் கேள்வி என்னைத் திடுக்கிட வைத்தது. அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தேன். என்னைப் பரீட்சைக்கு உட்படுத்தி சங்கடத்தில் ஆழ்த்திவிட்டாளே!

‘‘என்ன சத்தத்தைக் காணோம்... உங்கள் விருப்பம். நான் வற்புறுத்த மாட்டேன்.’’

‘‘இல்லை... அதற்குரிய ஆயத்தங்களுடன் வரவில்லையே!’’

‘‘ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். உங்களுக்குத் தேவையான சகலமும் என்னிடம் இருக்கின்றன.’’

நான் அக்காவுக்கு தொலைபேசினேன். ‘‘நான் இன்று இரவு வரமாட்டேன். காலையில் வருகின்றேன். நண்பருடன் தங்குகின்றேன்’’ சொல்லிவிட்டு அவளைப் பார்த்தேன். அவள் புன்முறுவல் செய்தாள்.

எங்கள் இருவருக்குமிடையேயான உரையாடல் மீண்டும் ஆரம்பமானது, நீண்டது. அவளின் கண்டுபிடிப்புகள், கற்பித்தல் முயற்சிகள் பற்றி விசாரித்து அறிந்து கொண்டேன்.

‘‘யூனிவசிட்டிக்கு நடந்து போக எனக்கு 6 நிமிடங்கள் போதும். நான் இருக்கும் இருபதாவது மாடியில் இருந்து கீழ் இறங்கத்தான் 2 நிமிடங்கள் தேவை.’’

அவள் தன் பல்கலைக்கழகப் புதினங்களையும், நான் என் தொழில் சார்ந்தவற்றையும் கதைத்து முடிக்க இரவாகிவிட்டது. கதைப்பதற்கு இனி எதுவும் இல்லையென்றபோது –

‘‘இங்கே நான் இருப்பதை எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?’’

‘‘அதுவா? இலங்கையில் கஸ்டப்படும் மாணவர்களுக்கு உதவும் அமைப்பைச் சேர்ந்த ஒருவர், அக்கா வீட்டிற்கு வந்திருந்தார். அவரின் பெயரை மறந்துவிட்டேன். அவருடன் கதைக்கும்போது அறிந்து கொண்டேன்.’’

அவள் சிரித்துவிட்டு, ‘‘நல்ல அமைப்பு. போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகின்றார்கள். போரினால் தந்தையை தாயை வாழ்வாதாரங்களை இழந்த பல மாணவர்கள் இருக்கின்றார்கள்’’ என அந்த அமைப்பைப்பற்றி நிறையவே சொல்லிச் சென்றாள். தான் அப்படிப்பட்ட மாணவர்களில் ஆறுபேருக்கு, அந்த அமைப்பினூடாக உதவி செய்கின்றேன் என்பதை மறைத்துவிட்டாள்.

உறங்கப் போகும் சமயத்தில் அணிவதற்கு மாற்று உடுப்புகள் தந்தாள். மருந்துகள் போட நீர் வேண்டும் என்று கேட்டபோது, தேநீர் தந்தாள். பல் துலக்க பிறஸ் – பேஸ்ற் என்று எந்தக் குறையும் வைக்கவில்லை. சுவாமி தரிசனம் செய்தபின், எனக்கும் திருநீற்றுக் குறியிட்டாள். ‘‘சரியான சுவாமி பக்தை போல..’’

திருநீற்றுக்குறி வாழ்க்கை நிலையற்றது, இருக்கின்ற காலத்தை நல்லவிதமாக வாழ்ந்து முடியுங்கள் என்பதைத்தானே சொல்கின்றது.

‘‘உங்களுக்குப் புது இடம் எண்டபடியாலை லைற்றைக் கொஞ்சம் தணிய வைச்சிருக்கிறேன். ஏதாவது தேவை எண்டா தயங்காமக் கதவைத் தட்டுங்கோ. எனக்குக் கொஞ்சம் லப்ரொப்பில் வேலை இருக்கு. குட் நைற்.’’

‘‘குட் நைற்.’’

எனக்கான அறைக்குள் நுழைந்து கொண்டேன்.

‘‘ஏதாவது போரடிச்சால் பாட்டுப் போட்டுக் கேளுங்கோ. என்னட்டைப் பழைய பாட்டுகள் தான் இருக்கு. அப்பா வாற நேரங்களில விரும்பிக் கேட்பார்’’ மறு அறையில் இருந்து குரல் வந்தது.

‘‘ஓ... இது அப்பாவின் அறையோ?’’ நான் மெதுவாகத்தான் கேட்டேன். ஆனாலும் பதில் வந்தது.

‘‘இப்போது உங்களின் அறை!’’

''ஓகே... ஒகே... தாங்ஸ்.''

அருகேயிருந்த பழைய காலத்து ரேப் றைக்கொட்டரைப் பார்த்தேன். அது நாம் இருவரும் முதன்முதலாக சந்தித்துக்கொண்ட காலத்திற்கு என்னை அழைத்துச் சென்றது.

உனக்கு ஞாபகம் இருக்கின்றதா?

முதன்முதலில் உன்னைச் சந்தித்த நாட்களில், 'நான் உன்னைத் திருமணம் செய்ய விரும்புகின்றேன்' என்று சொன்னபோது, நீ என்னை ஏறிட்டுப் பார்த்தாய். 'என்னில் என்ன இருக்கின்றது' என்பது போன்ற பார்வை. அப்போது உனக்கு பத்தொன்பது அல்லது இருபது வயதுதான் இருக்கும். இருப்பினும் திடீரென்று தயங்காமல், 'நான் படிக்க விரும்புகின்றேன்' என்று சொன்னாய்.

உண்மை. அப்போது நீ பல்கலைக்கழக அனுமதி பெற்று படிப்பதற்கான ஆயத்தங்களில் இருந்தாய். நான் படிப்பை முடித்து ஒன்றரை வருடங்கள் இருக்கும். நாட்டுச் சூழ்நிலை காரணமாக படிப்பைத் தொடரமுடியாமல், நான் வேலை செய்யும் இடத்தில் – எனது செக்ஷனில் செய்முறைப் பயிற்சிக்காக வந்திருந்தாய். உன்னுடன் மூன்று பெண்களும் ஒரு ஆணும் வந்திருந்தார்கள். பெண்கள் நிறையப் படிக்க வேண்டும், வாழ்க்கையில் அவர்கள் உன்னத நிலையை அடைய வேண்டும். அதில் எனக்கு மாற்றுக்கருத்து இருந்ததில்லை.

ஒன்றைக் கவனித்தீரா? நான் உன்னைச் சந்தித்து ஒரு மாதத்திற்குள்ளேயே உன் மீது கண் வைத்துவிட்டேன். உனது திறமைகள் கூட என்னை வியப்பில் ஆழ்த்தின. உன்னுடைய அகன்ற முட்டைக்கண்களில் சொக்கிவிட்டேன். 'நான் உன்னைக் காதலிக்கின்றேன்' என்று சொல்லாமல் 'திருமணம் செய்ய விரும்புகின்றேன்' என்றுதான் சொன்னேன். காதல் என்ற ஒன்றை நீ விரும்பமாட்டாய் என்பதை உனது நடவடிக்கைகள் மூலம் அறிந்துகொண்டேன். தினமும் திருநீற்றுக்குறியும் சந்தனப்பொட்டுடனும் திரியும் சாமியார் கோலம் உன்னுடையது. எனக்கும்கூட காதலில் அவ்வளவு அக்கறை கிடையாது. என் நண்பர்கள் 'நீ அழகில்லை. குட்டையான தோற்றம் கொண்டவள். நாகரீகமான ஆடைகள் அணியத் தெரியாது' என்றெல்லாம் என்னைக் கேலி செய்தார்கள்.

ஆனாலும் என்ன? உன் பதில் என்னை சிந்திக்க வைத்தது.

'நான் படிக்க விரும்புகின்றேன்'

என்னுடைய கேள்விக்கு 'நான் உங்களை விரும்பவில்லை' என்று சுருக்கமாகச் சொல்லி வெட்டியிருக்கலாம். பிரச்சினை அத்துடன் முடிந்திருக்கும். ஆனாலும் நீ அப்படிச் சொல்லவில்லை. 'காத்திருங்கள்' என்ற அர்த்தத்தில் நான் அதை எடுத்துக் கொள்வதா?

இடியப்பச்சிக்கலில் சிலகாலம் நான் உன்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டேன். எங்களுக்கான தொடர்பு சரிவராமல் போகக்கூடும் என்ற கணத்தில், ஞாபகத்திற்காக உன்னைக் கொண்டு ஒரு புத்தகத்தின் சில பக்கங்களைப் பிரதிபண்ணித் தரமுடியுமா என்று கேட்டேன். சுப்பீரியர் என்ற முறையில், கொஞ்சம் அதிகாரத்துடன் அப்படி நான் கேட்டதாக நீ நினைக்கக்கூடும். இருப்பினும் மறுக்காமல் மணிமணியான உன் கையெழுத்தில் எழுதித் தந்தாய்.

இருப்பினும் உள்மனதில் இருந்துகொண்ட மிருகமொன்று, இதையும் செய்து பார்த்துவிடு என்றது. ஒரு புரளியைக் கிளப்பி தீர்க்கமானதொரு முடிவை எடு என தினமும் என்னைத் தொந்தரவு செய்தது. ஒரு கடிதம் ஒன்றை எழுதி உன்முகவரியிட்டு அனுப்பி வைத்தேன். ஒருவேளை கடிதம் உன் கையில் கிட்டாமல், உன்குடும்பத்தில் வேறொருவரிடம் சிக்கிவிட்டால் என்னும் கள்ளநோக்கில் அதற்கொரு உபாயமும் செய்து வைத்தேன்.

'அன்பின் நண்பிக்கு,

உன் கடிதம் கிடைத்தது. உன் குடும்பம் பற்றிய தகவல்கள் எல்லாம் அறியத் தந்ததற்கு நன்றி. அண்ணா தங்கைகளின் மத்தியில் உன்னுடைய நிலைப்பாட்டையும் தெரிவித்திருந்தாய். பெற்றோரின் கண்டிப்பு பற்றியெல்லாம் எழுதியிருந்தாய்..'

இப்படியெல்லாம் கடிதத்தில் எழுதியிருந்தேன். பார்ப்பவர் கண்ணுக்கு, நீ எனக்கு முன்பு ஒரு கடிதம் எழுதியிருந்தாய் என்ற தோற்றம் கொடுக்கும் வகையில் அந்தக் கடிதத்தை வரைந்திருந்தேன். எப்படியோ அந்தக் கடிதத்தை நீயும் படித்திருப்பாய். ஆனாலும் எந்தவித பிரச்சினையும் உன்னால் கிளம்பவில்லை. என்னில் நீ கொண்டிருக்கும் மரியாதையை அது உணர்த்துவதாக நான் நினைத்தேன்.

'நான் எந்தவொரு கடிதமும் எழுதவில்லை' என்பதற்கு எத்தனை தெய்வங்களையெல்லாம்

நீ சாட்சிக்கு அழைத்திருப்பாய் என்பதை நான் அறிவேன். ஒரு பெண் இவ்வளவு நல்லவளாக இருப்பது என்பது என் நெஞ்சை மேலும் கிளறி உன்மேல் உன்மத்தம் கொள்ளவைத்தது. உன்னுடைய நோக்கம் எதுவெனத் தீர்க்கமாகத் தெரிந்ததும் விலகிக் கொண்டேன். உன் நோக்கம் பல்கலைக்கழகப் படிப்புடன் மட்டுப்படுத்துவதாக இருந்திருந்தால், காத்திருந்திருப்பேன். ஆனால் உனது 'வெளி' பெரியது என்பதைப் புரிந்து கொண்டேன்.

கடிதத்திற்கான பலன் கிட்டியபோது காலம் கடந்துவிட்டிருந்தது. எனக்குத் திருமணம் நிட்சயம் செய்யப்பட்டிருந்தது.

உன் அண்ணா 'எங்கள் இருவரினதும் எதிர்காலம்' குறித்து என்னைச் சந்திக்க விரும்பியபோது, நான் என் திருமணதிற்கான அழைப்பிதழை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் குடுத்துக் கொண்டிருந்தேன்.

இன்று?

நீ உனது நோக்கத்தை எட்டிவிட்டாய். ஆனால் அதுவே பூரணத்துவமான வாழ்க்கை என நீ நினைக்கின்றாயா? உனது திருமணத் தைத்தான் நான் சொல்கின்றேன். நிட்சயமாக உனது பெற்றோர்கள் உனக்கொரு திருமணத்தைச் செய்து வைக்கவே விரும்பியிருப்பார்கள். ஆனால் நீ... படிப்பை முடித்து, உன் நோக்கம் நிறைவேறியபின் அதற்கான காலம் கடந்துவிட்டிருந்ததை உணர்ந்திருப்பாய், அல்லது உண்மையிலேயே அப்படிப்பட்ட சிந்தனை உனக்கு இல்லாமலும் இருந்திருக்கலாம்.

நீ இத்தனை வருடங்களாக தொழிலும் வீடுமாக – தனியாக இருப்பதாக அறிந்தேன். அப்பாவுடன் இருந்திருக்கலாம். அவருக்குக்கூட கஸ்டத்தைக் குடுக்க நீ விரும்பவில்லை.

இவ்வளவும் அறிந்த பின்னரும், எப்படி உன்னைச் சந்திக்காமல் நான் இலங்கை திரும்புவேன். வாழ்க்கை மீண்டும் ஒருதடவை நம் சந்திப்பை விரும்பும்போது, நாம் ஏன் அதற்குத் தடையாக இருக்க வேண்டும்?

நீங்களும் சந்திப்பதை விரும்பியிருந்தீர்கள்.

○○○○○○

இரவு என்னால் நன்றாக உறங்க முடியவில்லை. மனசில் ஒரு கொந்தளிப்பு. இன்றைய நாளில் உன்னுடைய நிர்மலமான முகத்தின் வண்ணத்தை நான் பார்த்தேன். வெள்ளை மனதின் பேரழகைத் தரிசித்தேன். நான் நினைப்பது போல் அல்லாமல், அதற்கென்றொரு மறுபக்கம் இருக்கின்றதா? நான் வீட்டிற்குப் போவதற்கான சகல வழிகள் இருந்தும், இரவு இங்கே என்னை ஏன் தங்க வைத்தாய்? நான் கூட அதற்கொரு மறுப்பைச் சொல்லி நடையைக் கட்டியிருக்கலாம்.

நீ உன் வாய் திறந்து எதுவும் சொல்லாமல், எப்படி நான் உன்னைப் புரிந்து கொள்வது?

நான் தானே என் உட்கிடக்கையை முப்பது வருடங்களுக்கு முன்னமே சொல்லிவிட்டேனே! நீ கூட உன் பதிலை அறுத்து உறுத்துத்தான் சொன்னாய். 'நான் படிக்க வேண்டும்' அதன் விளக்கம், அதன் எல்லை இன்று கடந்துவிட்டதா?

ரேப் றக்கோடரின் சத்தத்தை மெதுவாகக் குறைத்து வைத்து, அதன் ஆளியை அமுக்கினேன்.

**"பால் வண்ணம் பருவம் கண்டு**
**வேல் வண்ணம் விழிகள் கண்டு**
**மான் வண்ணம் நான் கண்டு வாடுகிறேன்"**

ஆண்குரலைத் தொடர்ந்து பெண்குரல் சோடி சேர்கின்றது.

**"கண் வண்ணம் அங்கே கண்டேன்**
**கை வண்ணம் இங்கே கண்டேன்**
**பெண் வண்ணம் நோய் கொண்டு வாடுகிறேன்"**

ரேப் றக்கோடரை நிறுத்திவிட்டு, படுக்கை யில் இருந்து எழுந்து கொண்டேன். மெதுவாக அடியெடுத்து அவளின் அறை நோக்கிச் செல்கின்றேன். மணிக்கூட்டு முள்ளின் சத்தம் தவிர்ந்து வேறு எந்த ஒலிகளும் இல்லை. அவளின் அறைக்கதவு அகன்று திறந்தே கிடக்கின்றது. உள்ளே கட்டிலில் அமர்ந்தபடி மடிக்கணினியில் ஏதோ பார்த்தபடி இருந்தாள். படுக்கையின் மேல், முப்பது வருடங்களுக்கும் முன்னர் எடுத்த புகைப்படம் முட்டைக்கண் சிமிட்டுகின்றது. வேல் போல் புருவம் கொண்டு, மான் போல் மயக்கி, வண்ணங்கள் காட்டுகின்றது. அப்படியே மெதுவாகத் திரும்பி எனது அறை நோக்கி நகரும்போது,

"என்ன உறக்கம் வரவில்லையா? வாருங்கள். உள்ளே வாருங்கள்."

அவளின் கால்புறம் அசைந்து போர்வை விலகுகின்றது. கொலுசு வெண்ணிறத்தில் மினுக்குகின்றது.

அறையினுள் இரண்டுபக்கச் சுவர்களோரமும் புத்தக அலுமாரிகள் இருந்தன.

"உங்கள் புத்தகங்களை நான் பார்க்க லாமா?"

"தாராளமாக!"

ஒவ்வொரு புத்தகமாகப் பார்த்துக் கொண்டு வந்தேன். தலைப்புகளே புரியாத ஆங்கிலப்புத்தகங்கள், என்னை வியக்க வைக்கின்றன. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது நானே முதல்மாணவனாக வருவேன். பின் பல்கலைக்கழகம் சென்றபோது, என்னைவிடப் பல புத்திசாலிகள் இருந்ததைக் கண்டேன். இவளோ பல்கலைக்கழகத்திலேயே 'பொஸ்ற்' கிளாசில் தேறி, பி.எச்.டி வரைக்கும் சென்று இன்னமும் படித்துக்கொண்டே இருக்கின்றாள்.

இமைக்காமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்த அவள், "உங்களை ஒன்று கேட்கவேண்டும். முப்பது வருடங்களுக்கு முன்னர் நடந்தவை. அப்போது ஐ பி கே எவ் இருந்த காலம். நாட்டுச் சூழ்நிலை காரணமாக, நான் அப்போது வீட்டைவிட்டுப் பொதுவாக வெளியே எங்கும் செல்வதில்லை. அப்படி இருந்தும் என்னுடைய கிராமத்தில், இரண்டொரு தடவைகள் உங்களை நான் வீதியில் சந்தித்திருந்தேன். ஒரு தடவை என்னுடைய வீட்டுக்கு முன்னாலும்..."

"சந்தித்தீர்கள். சரி... ஏதாவது என்னுடன் கதைத்தீர்களா?"

"உங்களுக்கே தைரியம் இல்லை. நான் எப்படிக் கதைப்பதாம். இப்போது அதைப்பற்றி ஏன் கேட்கின்றேன் என்றால், உங்கள் கிராமத்திற்கும் எங்கள் கிராமத்திற்குமிடையே 15 கிலோமீட்டர்கள் இடைவெளிதான் இருக்கும். இடையே குறைந்தது ஆறு, ஐ பி கே எவ் காம்புகளாவது இருந்திருக்கும். அந்த இக்கட்டான நேரத்தில், எப்படி தைரியத்துடன் இவற்றையெல்லாம் தாண்டி வந்தீர்கள்? எத்தனை தடவைகள் அப்படி வந்திருப்பீர்கள்?"

"நாற்பது தடவைகள் வந்திருக்கின்றேன் என்றால் நீங்கள் நம்புவீர்களா?"

"நாற்பது?"

"நாற்பத்தோராவது தடவை புறப்பட்டேன். ஆனா உம்முடைய கிராமத்துக்கு வந்து சேரவில்லை. இடையிலை ஐ பி கே எவ் பிடித்துக் கொண்டார்கள். ஐந்துநாட்கள் காம்பில் வைத்திருந்தார்கள்."

"ஓ... மை கோட்" என்றபடியே மடிக் கணினியை மூடி வைத்தாள். என் கால்களைப் பார்த்தாள். கண்களை தன் இரண்டு கைகளினாலும் பொத்திக் கொண்டாள். நீண்ட நேரமாகத் திறக்கவேயில்லை. விரல் இடுக்குகளினூடாக கண்ணீர் கசிவது தெரிந்தது. அழுகின்றாளா? நிலைமையைச் சமாளிப்பதற்காக, நான் அவ்விடத்தை விட்டு விலகி அறைக்குள் வந்து படுக்கையில் சாய்ந்து கொண்டேன்.

ஒருவேளை நான் தான் அவளை ஏமாற்றி விட்டேனோ?

"நீங்கள் என்னுடன் வாழப் போகின்றீர்களா?" என்றொரு கேள்வி அவள் என்னைக் கேட்டிருந்தால் என் பதில் எதுவாக இருந்திருக்கும்? அல்லது நான் அப்படியொரு கேள்வியை அவள் முன் வைத்து, "நானும் உங்களைப் போல நிறைவான வாழ்க்கை தான் வாழ்ந்திருக்கின்றேன்" என்றொரு பதிலை அவள் சொல்லியிருந்தால் எப்படி இருந்திருக்கும்?

நூல் வேலியைத் தகர்த்து எறியும் எண்ணம் நம் இருவருக்கும் இல்லை. அதன்பின்னர் நாம் இருவரும் எதுவுமே பேசிக் கொள்ளவில்லை.

நிர்மலமான விடியல் வேளையில் அவள் என் கால்களைத் தட்டி "ரீயா கோப்பியா வேண்டும்?" என்றாள்.

நான், "உங்கள் விருப்பம்" என்றேன். அவள் சிரித்துவிட்டு "ரீ போட்டுக் கொண்டு வாறேன்" என்றாள்.

இயற்கை நம் இருவரையும் ஏன் இப்போதுகூடச் சேர்த்து வைக்கவில்லை? இருவருக்குமே எந்தவித கடமைகளும் இப்பொழுது இல்லைத்தானே!

வீட்டை விட்டுப் பிரியும்போது, அவள் என் கையை மெதுவாகப் பற்றியபடியே, "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றாள்.


நான் குனிந்து அப்படியே கையை உயர்த்தி, அவளது கை மணிக்கட்டில் முத்தமிட்டேன்.

"அவுஸ்திரேலியா வரும்போதெல்லாம் என்னை வந்து சந்தியுங்கள். மருந்துகளைத் தவறாது எடுங்கள். அடிக்கடி ரெலிபோனில் கதைப்போம்."

'லிப்ற்' இருக்குமிடம் வந்து வழியனுப்பி வைத்தாள்.

தொடர் மாடியை விட்டுக் கீழ் இறங்கியதும், அண்ணாந்து பார்த்தேன். ஓங்கி வானளாவி நிற்கும் இந்தக் கட்டடத்தில், அவளது குடியிருப்பு எதுவாக இருக்கும்? கண்கள் துளாவுகின்றன. 'உயர' என்பதைத் தவிர வேறென்ன சொல்லமுடியும்!

❍❍❍



# பாரதியின் நந்தலாலா

## மூன்று பாடபேதங்களும் மூன்று மொழிபெயர்ப்புகளும்

நந்தலாலா பாரதியின் மிகச் சிறந்த பாடல்களுள் ஒன்று. அது வெளிப்படுத்தும் உணர்வும், அதன் தாளமும், இசையும், அற்புதமான கவித்துவமும் யாரையும் கவர்வன. பல இசைக் கலைஞர்கள் அதைப் பாடியும் இருக்கிறார்கள். யேசுதாசின் பாடல் எப்போதும் என் காதில் ஒலிக்கும். இன்று நமக்குக் கிடைக்கும் இப்பாடலின் இறுதி வடிவம் இது.

**காக்கைச் சிறகினிலே நந்ததலாலா– நின்றன்**
**கரியநிறம் தோன்றுதையே நந்த லாலா**
**பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா – நின்றன்**
**பச்சைநிறம் தோன்றுதையே நந்தலாலா**
**கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா – நின்றன்**
**கீதம் இசைக்குதடா நந்தலாலா**
**தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா – நின்னைத்**
**தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா**

பாரதியின் மறைவின் பின்னர் 1922ல் பாரதி ஆச்ரமம் மூலம் பாரதியின் மனைவி செல்லம்மாள் பாரதி வெளியிட்ட சுதேச கீதங்கள் இரண்டாம் பாகத்தில் இதன் முதல் மூன்று கண்ணிகளே இடம்பெற்றிருந்தன என்றும், பின்னர் பாரதி பிரசுராலயம் வெளியிட்ட பதிப்பிலேயே கடைசிக் கண்ணி உட்பட முழுப் பாடலும் இடம்பெற்றதாகவும் கால வரிசையில் பாரதி பாடல்கள் (2012 பக். 1039) தொகுப்பை வெளியிட்ட சீனி விசுவநாதன் குறிப்பிட்டுள்ளார்.


பாரதி இதனை ஒரு தனிப்பாடலாக எழுதியதாகத் தெரியவில்லை. முதலில் இது பாரதியின் சந்திரிகையின் கதையில்தான் முக்கியமான சில வேறுபாடுகளுடன் இடம்பெற்றுள்ளது. சந்திரிகையின் கதை 1920ல் சுதேசமித்திரனில் தொடராக வெளிவந்ததாகத் தெரிகிறது. அதற்கு முன்னரே இக்கதையும் பாடலும் எழுதப்பட்டிருக்கலாம்.

சந்திரிகையின் கதையில் குழந்தை சந்திரிகையைப் பார்த்து, "குழந்தாய் உனக்குப் பாடத் தெரியுமா" என்று கேட்கிறார் கோபாலய்யங்கார். தெரியும் என்கிறாள் சந்திரிகை. "எங்கே ஒன்று பாடு கேட்போம்" என்கிறார் போபாலய்யங்கார். "அத்தை எனக்குக் கற்றுத்தந்த நந்தலால் பாட்டுப் பாடலாமா" என்று சந்திரிகை கேட்கிறாள். அய்யங்கார் பாடச் சொன்னதும் சந்திரிகை பாடுகிறாள்.

**பார்க்கு மரத்திலெல்லாம் நந்தலாலா – நின்றன்**
**பச்சைநிறந் தோன்றுதடா நந்தலாலா**
**காக்கைச் சிறகினிலே நந்தலாலா– நின்றன்**
**கரியவிழி தோன்றுதடா நந்த லாலா**
**கேட்கு மொலியி லெல்லாம் நந்தலாலா – நின்றன்**
**கீத மிசைக்குதடா நந்தலாலா**
**தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா– நின்னைத்**
**தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா**

குழந்தை பாடிய முறையையும் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் எதிர்வினையையும் பாரதி பின்வருமாறு விபரிக்கின்றான்.

"இந்தப் பாட்டை மிகவும் மெதுவாக, ஒவ்வொரடியையும் இரண்டுதரம் சொல்லி இசை தவறாமல், தாளம் தவறாமல், கந்தர்வக் குழந்தை பாடுவதுபோல் அக்குழந்தை மிக அற்புதமாகப் பாடி முடித்தது. கோபாலய்யங்காருக்கு மூர்ச்சை போட்டுவிடத் தெரிந்தது. அவர் தம்முடைய ஜன்மத்தில் இவ்வித சங்கீதம் கேட்டதில்லை. கற்பனையில் எட்டியதில்லை."



எம். ஏ. நுஃமான்

''இதுதான் சுவர்க்கம்'' என்று கோபாலய்யங்கார் சொன்னார்.

''எது'' என்று பந்துலுவின் மனைவி கேட்டாள்.

''இந்தக் குழந்தையின் பாட்டு'' என்று அய்யங்கார் சொன்னார்.

''ஸங்கீதமா? கவிதையா? இந்தக் குழந்தையின் குரலா? இவற்றுள் எது சுவர்க்கம் போலிருந்தது'' என்று பந்துலுவின் மனைவி கேட்டாள்.

அதற்கு கோபாலய்யங்கார் – ''மூன்றும் கலந்து சுவர்க்கம் போன்றிருந்தது. விசேஷமாக, இதன் குரல் மிகவும் தெய்வீகமானது. குரல்கூட அவ்வளவில்லை. இந்தக் குழந்தை பாடிய மாதிரியே ஆச்சரியம்'' என்றார்.

இந்த விபரணம் தன்பாடல் மீது பாரதிக்கு இருந்த சுயமதிப்பீட்டையும் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

பாரதி இக்கதைக்காகவே இப்பாடலை எழுதினாரா, அல்லது தான் ஏற்கனவே எழுதிவைத்திருந்த பிரசுரமாகாத பாடலை இக்கதையில் முதல்முதல் பயன்படுத்தினாரா என்று தெரியவில்லை. இப்போது கிடைக்கும் பிரதியிலிருந்து இதில் பல முக்கியமான வேறுபாடுகளைக் காண்கிறோம். முதல் இரண்டு கண்ணிகளும் வரிசை மாறி இருக்கின்றன. கரிய நிறம் என்பது கரிய விழி என்று மாறியிருக்கிறது. முதல் இரண்டு கண்ணிகளிலும் தோன்றுதையே என்று இருப்பது ஏனைய கண்ணிகளில் இருப்பதுபோல் தோன்றுதடா என்று மாறியிருக்கின்றது. இன்றும் பலர் இவ்வாறு எல்லா அடிகளிலும் தோன்றுதடா என்று பயன்படுத்துவதைக் காண்கிறோம்.

பாரதியார் சரித்திரம் எழுதிய பாரதியின் மனைவி செல்லம்மாள் பாரதி, இப்பாடலின் தோற்றம் பற்றி வேறொரு சம்பவத்தைக் கூறுவதோடு, இப்பாடலின் வேறொரு வடிவத்தையும் தருகிறார். அவர் சொல்லும் சம்பவம் வருமாறு

''உற்சவ காலங்களில் தினம் காலையில் ஒருபாகவதரின் தலைமையில் பஜனைக் கோஷ்டி உஞ்சவிருத்தி செய்வது வழக்கம். வழக்கமாகப் பாடும் பஜனைப் பாடல்கள் அநேகமாகத் தெலுங்கும் ஸம்ஸ்கிருதமும்தான். பாரதியாரும் அவர்களுடன் சுற்றுவதுண்டு. தினமும் பாட்டுச் சொல்லிக்கொடுக்கும் பாடகருக்கு ஒரு மாதமாகப் பாடித் தொண்டையும் கட்டிவிட்டது. பாடிய பாட்டுக்களையே தினந்தோறும் பாடும் விரயம் ஏற்பட்டுவிட்டது. உடனே பாரதி ''நான் சொல்லிக்கொடுக்கிறேன் புதுப்பாட்டு'' என்று ''கோவிந்த கிருஷ்ண பாஹி, யதுவீரா! ராஜகோபால கிருஷ்ண பாஹி யதுவீரா'' என்ற பஜனைப் பாட்டு மெட்டில்

**பார்க்கு மரத்திலெல்லாம் நந்தலாலா – நின்றன்**
**பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா**
**கேட்கு மொலியி லெல்லாம் நந்தலாலா – நின்றன்**
**கீத மிசைக்குதடா நந்தலாலா**
**தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா – உன்னைத்**
**தீண்டு மின்பம் தோன்றுதையே நந்தலாலா**
**காக்கைச் சிறகினிலே நந்ததலாலா– நின்றன்**
**கரியநிறம் தோன்றுதையே நந்த லாலா**

என்ற பாட்டை அப்படியே ஆசுகவியாகச் சொல்லவும் கோஷ்டியினர் சந்தோஷத்தோடு (தமிழ்ப் பாடலாகையால்) அர்த்தந் தெரிந்து உரக்கப் பாடலாயினர். அவர்கள் இரண்டு பர்லாங் தூரத்தில் வரும்போதே பாட்டின் கோஷம் கேட்கவாரம்பித்தது. ''இதென்ன, இன்று புது தினிசாயிருக்கிறதே பஜனை என்று பார்த்ததும், பின்புதான் காரணம் தெரியவந்தது. மந்திர சக்தி கொண்ட பாரதி வாக்குக்கு மனிதர்கள் மனதில் ஊடுருவிப்பாயும் சக்தி இருப்பதை அன்று அனைவரும் கண்டனர். (பாரதியார் சரித்திரம், சந்தியா பதிப்பகம் (2002).

பாரதி இப்பாடலை ஆசுகவியாய்ப் பாடினார் என்பது இங்கு செல்லம்மாள் கூறும் புதுச் செய்தி. இச்சம்பவம் நிகழ்ந்த காலம் பற்றிய குறிப்பு எதுவும் நூலில் இல்லை. ஆனால் அத்தியாய வைப்புமுறையைப் பார்க்கும்போது, பாரதி பாண்டிச்சேரியிலிருந்து வந்து சிறைமீண்டு கடையத்தில் வசித்த காலத்தில் இது நிகழ்ந்திருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது. ஏற்கனவே சந்திரிகை கதையில் பயன்படுத்திய பாடலை பாரதி இச் சந்தர்ப்பத்தில் பாடியிருக்கலாம். பாடலின் வரிசை முறை இதில் பெரிதும் மாறியிருப்பது கவனிக்கத்தக்கது.

பார்க்கும் மரங்களெல்லாம் முதல் கண்ணியாகவும், கேட்குமொலியிலெல்லாம் இரண்டாம் கண்ணியாகவும் தீக்குள் விரலைவைத்தால் மூன்றாம் கண்ணியாகவும், காக்கைச் சிறகினிலே நாலாம் கண்ணியாகவும்

வரிசை மாறியுள்ளது. இது செல்லம்மாளின் நினைவுப் பிசகினால் ஏற்பட்டதாகவும் இருக்கலாம். தோன்றுதடா, தோன்றுதையே என்பதிலும் மாற்றத்தைக்காணலாம். நின்னை என்பது உன்னை என்றும் மாறியிருக்கிறது.

பாரதியின் ஒரு பாடலுக்கு எத்தனை பாடபேதம் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. இந்தப் பாடபேதங்கள் எவ்வாறு இருந்தாலும், இன்று நமக்குக் கிடைக்கும் இறுதி வடிவமே சிறப்பானது என்று தோன்றுகிறது. பழகிப்போன பாடம் என்பது மட்டும் இதற்குக் காரணம் அல்ல. கவிஞனின் பக்தி உணர்வு படிப்படியாக வளர்ந்து ''தீக்குள் விரலை வைத்தால்'' என்ற இறுதிக் கண்ணியில் அதன் உச்சம் பெறுவதை உணரமுடிகின்றது. சந்திரிகையின் கதையிலும் இது இறுதிக் கண்ணியாகவே இடம்பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. அவ்வகையில், கவித்துவ நோக்கில் இதையே இறுதி வடிவமாகக் கொள்வதில் பிரச்சினை இல்லை.

*2*

பாரதியின் இப்பாடலை அதன் உணர்வுடனும் கவித்துவ வீச்சுடனும் பிறிதொரு மொழியில் பெயர்ப்பது சிரமமான காரியம் என்பது தெளிவு. ஆயினும் இப்பாடலுக்குப் பல ஆங்கில மொழிபெயர்ப்புகள் உள்ளன. அவற்றுட் சிலவற்றை இணையத்தில் காணலாம். எனக்குப் பார்க்கக் கிடைத்த மொழிபெயர்ப்புகளுள் மூன்றை மட்டும் நான் இங்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

முதலாவது மொழிபெயர்ப்பு சுபஷிறி கிருஷ்ணஸ்வாமி, கே. சிறிலதா ஆகியோருடையது. இம் மொழிபெயர்ப்பு லட்சுமி ஹோஸ்றோம், சுபஷிறி கிருஷ்ணஸ்வாமி, கே. சிறிலதா ஆகியோர் தொகுத்த The Rapids of a Great River – the Penguin Book of Tamil Poetry (2009) என்ற நூலில் இடம்பெற்றுள்ளது. அது வருமாறு.

**Nanda Lala**
*I see, O Nanda Lala,*
*in the wings of a crow,*
*your dark sheen.*
*In every tree, O Nanda Lala*
*your green tinge.*
*Your melody echoes, O Nanda Lala,*
*in every sound I hear.*
*Like brushing a finger against a flame,*
*O Nanda Lala*
*the thrill of touching you, O Nanda Lala*

இந்த மொழிபெயர்ப்பில் கவிதையின் சாரம் வந்திருக்கின்றதே தவிர அதன் சத்து – வளம் - வரவில்லை என்றே சொல்ல வேண்டும். ஒருகையில் இதைச் சுருக்கிய நேர்மொழிபெயர்ப்பு எனலாம். கவிதையின் சந்த லயத்தை மொழிபெயர்ப்பில் கொண்டுவருவது சிரமம் எனினும் மொழிபெயர்ப்பாளர்கள் அதற்கு முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. இக்கவிதையின் உயிர்போன்ற கடைசிக் கண்ணி மொழிபெயர்ப்பில் உயிர்பெறவில்லை.

இரண்டாவது மொழிபெயர்ப்பு பி. ஆர். ராமச்சந்தருடையது (P.R. Ramachander). இவர் பாரதியின் சுமார் நாற்பது கவிதைகளை மொழிபெயர்த்திருப்பதாகத் தெரிகிறது. அவற்றை இணையத்தில் காணலாம். அவருடைய மொழிபெயர்ப்பு வருமாறு
*Oh Lord who is the darling of Nanda,*
*I see in the black of the feathers of the crow*
*Your colour of black, Oh darling lord*
*In whichever tree I see, oh darling lord*
*I see your green colour, oh Lord*
*In whichever song I hear my darling lord,*
*I am able to hear your music only, my lord*
*And if I keep my finger inside a raging fire,*
*I only feel that sweet sensation of touching you.*

மூலக்கவிதையில் திரும்பத் திரும்ப விழிக்கப்படும் நந்தலாலாவை மொழி பெயர்ப்பாளர் darling lord ஆக்கிவிட்டார். அதன்மூலம் கிருஷ்ணனுடைய அடையாளமே இம்மொழி பெயர்ப்பில் இழக்கப் படுவதோடு, வைஷ்ணவ பக்திமரபின் சுவடும் இழக்கப் பட்டுவிடுட்டது எனலாம்.

மூன்றாவது மொழிபெயர்ப்பு ஏ. கே. ராமானுஜனுடையது. இம்மொழிபெயர்ப்பு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைககழகம் வெளியிட்ட பாரதி பாடல்கள் ஆங்கில மொழிபெயர்ப்பில் (1989) இடம்பெற்றுள்ளது. அது வருமாறு
*In the black feather of the crow*
*Nanda lala, one sees*
*The dark clour of your skin,*
*Nanda Lala*
*Whatever trees one sees,*
*Nanda Lala, one sees*

*The green of your body,*
*Nanda Lala*
*In all the sounds one hears,*
*Nanda Lala, one hears*
*The sound of your music,*
*Nanda lala*
*And when one puts a finger in a flame*
*Nanda Lala, one feels*
*The thrill of your touch,*
*Nanda lala.*

ராமானுஜனின் இந்த மொழிபெயர்ப்பு நான் பார்த்த மொழிபெயர்ப்புகளுள் சிறந்தது என்பது என் அபிப்பிராயம். மூலத்துக்கு நெருங்கிய மொழிபெயர்ப்பாக இதைக் கருதலாம். கவிதையின் உணர்வை மட்டுமன்றி அதன் சந்த லயத்தையும் மொழி பெயர்ப்பில் கொண்டுவருவதில் அவர் பெரிதும் வெற்றிகண்டுள்ளார் என்பதில் ஐயமில்லை. மூலத்தில் இருப்பதுபோல் ஒவ்வொரு அடியிலும் நந்தலாலா என்ற சொல் மீட்டிவருவது மூலத்தின் ஓசை நயத்தை மொழிபெயர்ப்பிலும் பேணுவதற்கு உதவுகிறது எனலாம்.

எனினும், இதில் உள்ள மிக முக்கியமான பிரச்சினை பாடல் முழுவதும் படர்க்கை இடத்தில் மொழிபெயர்க்கப் பட்டிருப்பதாகும். மூலத்தில் தன்மை இடப்பெயர் இல்லை எனினும் தமிழ் வாசகர் யாரும் இதனைப் படர்க்கை இடத்தில் புரிந்துகொள்ள மாட்டார் என்றே நினைக்கிறேன். முதல் இரண்டு மொழிபெயர்ப்புகளில் மட்டுமன்றி, நான் பார்த்த ஏனைய பல மொழிபெயர்ப்புகளிலும் இப்பாடல் தன்மையிலேயே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதுதான் இயல்பானதும் கூட.

தமிழ் பக்திப் பாடல் மரபை நன்கு அறிந்த ராமானுஜன் இதை ஏன் படர்க்கையில் மொழிபெயர்த்தார் என்பது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. இம் மொழிபெயர்ப்பில் அவர் பயன்படுத்தியுள்ள one sees, one hears, one feels என்பவற்றை முறையே I see, I hear, I feel என்று மாற்றிக்கொள்வதோடு, when என்ற கால இணைப்பிடைச் சொல்லுக்குப் பதிலா if என்ற நிபந்தனை இணைப்பை மாற்றிக்கொண்டால் இம்மொழிபெயர்ப்பு மூலத்துக்கு மிகக் கிட்டிய மொழிபெயர்ப்பாக இன்னும் செழுமையும் முழுமையும்பெறும் என்பது என் கருத்து.

○○○

# இதுதான் இலங்கை அரசாங்கம்

இது
பிள்ளைகள் விளையாடும்
பட்டம் அல்லது பம்பரம்

இது
பட்டமென்றால்
பார்வைக்குப் பறப்பது போலொரு
பாசாங்குதான்
கயிற்றை கை விட்டாலும்
கை விடாவிட்டாலும்
கடைசியில்
காற்றின் கலவரத்தில்
கீழே வீழ்ந்துதானே ஆகவேண்டும்

இது
பம்பரமென்றால்
இந்த பம்பரத்தின் ஆட்டம்
துள்ளாட்டம் போலொரு
தள்ளாட்டம்தான்
அதுதான்
அதன் நொண்டி நடனம்

இன்றைய
காலத்தின் வயிற்றில்
கருக்கொண்டிருப்பது
ஞானத்தின் சூல்தான்
ஆனால்
சத்தியத்தின் நெற்றிக்கண்
குருடல்ல என்பது
பிரசவத்தில் தெரிந்து விடும்

- அமெரிக்காவிலிருந்து இனியவன் இசார்தீன் -

அவசரமாக வெளிக்கிட்டு வேகமாக கதவுவரையும் போன தர்சினியை “எங்கை அவசரமாகப் போகிறாய்” எனக் கேட்ட தாயின் குரல் தடுத்து நிறுத்துகின்றது.

“சகானா அவசரமாகக் கதைக்க வேணுமாம் வரச்சொன்னவள், அதுதான் போய்க் கொண்டிருக்கிறன்” என்று போன போக்கில் சொல்லிக் கொண்டே தர்சினி பேருந்து நிலையத்தை நோக்கி வேகமாக நடக்கிறாள்.

தன்னை அவசரமாக வரச்சொன்ன சகானா வின் குரலில் வழமைக்கு மாறான பதட்டமும் சோகமும் இருப்பதை கைத்தொலை பேசியில் பேசிய தொனியிலிருந்து அறிந்து கொண்ட தர்சினி நிலைகொள்ளாமல் தவித்தாள்.

தர்சினியும் சகானாவும் அவர்கள் இருவரும் வசித்து வந்த ஆன்ஸ்பேர்க் நகரில் ஒரே வங்கியில் வேலை செய்பவர்கள். அதனால் சகானாவின் குணத்தை அவள் அறிந்து வைத்திருந்தாள். சகானா எளிதில் உணர்ச்சிவசப்படுபவள், வேகமாக கோபப் படுபவள். பலமுறை அது அவளுக்குப் பாதமாகவே முடிந்திருக்கிறது. என்னவாக இருக்கும், அவசரமாக கதைக்கவேணும் என்று ஏன் வரச் சொன்னவள் என அவளுடன் பழகி வரும் நாட்களில் ஏற்பட்ட நிகழ்வுகளையும் நினைவுக்கு கொண்டு வந்து அதுவாக இருக்குமோ இதுவாக இருக்குமோ என எண்ணியவாறு பேருந்து நிலையத்திற்கு வந்தவள் புறப்பட கதவு பூட்டிய நிலையில் ஆயத்தமாயிருந்த பேருந்தின் சாரதிக்குக் கையைக் காட்டி நிறுத்தும்படி செய்து வேகமாக ஏறி மூச்சு வாங்கியபடி இருக்கையில் அமர்கிறாள்.

“நான் வந்து கொண்டிருக்கிறேன்” எனக் குறுஞ்செய்தியை அனுப்பிய தர்சினி யன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு என்ன நடந்திருக்கும் என்ற பதட்டத்துடன் அவள் வரச்சொன்ன இடத்தில் உள்ள பேருந்து நிலையத்தில் இறங்கியவள், இறங்கிய இடத்தில் உள்ள கடைத்தொகுதி செயற்கைக் குளத்தின் படிக்கட்டில் சகானா உட்கார்ந்திருப்பதைக் கண்ட தர்சினி வேகமாக அந்த இடத்திற்கு போய்ச் சேருகிறாள்.

அவளின் தோளில் கைவைத்தபடியே சகானாவின் அருகில் உட்காருகிறாள். தனது தோழியைக் கண்டதும் சகானா குமுறி அழுதபடி அவளின் தோளில் சாய்ந்து விம்மி விம்மி அழுகிறாள்.

“என்னடி சொல்லு ஏன் அழுகிறாய்” என்று சொல்லியவாறு அவளின் தலையை நிமிர்த்துகிறாள் தர்சினி.

தான் இனி உயிரோடை இருக்கமாட்டன் எனச் சொல்லியவாறு தனது கைத்தொலைபேசியில் தனது பெயரில் இருக்கும் முகநூலைக் காட்டுகிறாள சகானா.

அவளது பெயரில் அவளின் அரைகுறை நிர்வாணப்படங்கள் இருக்கின்றன. வெவ்வேறு இளைஞர்களைக் கட்டியணைத்தபடி... !

அதிர்ச்சியடைந்த தர்சினி “என்னடி இதெல்லாம்” என்று கேட்டாள்.

“என்னுடைய படத்தை எங்கிருந்தோ எடுத்து யாரோ எனது பெயரில் முகநூ லைத் திறந்து இப்படிச் செய்திருக்கிறார்கள்” என அழுதவாறு சொல்கிறாள் சகானா. படங்களுக்குக் கீழ் ஜேர்மன் மொழியிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும் மிக மோசமான அருவருக்கத்தக்க சிலேடையான கருத்துக்கள் இருந்தன.

“இது உன்னுடைய படமா”

“ என்னுடைய முகத்தை எடுத்து யாரோ கிராபிக்கில் இதைச் செய்திருக்கிறார்கள். ஆனால் எந்த வித்தியாசமும் தெரியாமல்



சிறுகதை

# அவள்



ஏலையா க.முருகதாசன்

செய்திருக்கிறார்கள், இந்தப் படங்களை அழிப்பதற்கு நான் எவ்வளவோ முயற்சித்தும் முடியாமல் போய்விட்டது. அப்பா அம்மாவிற்கு இன்னும் தெரியாது, தெரிந்தால் என்ன நடக்குமோ தெரியவில்லை”

“நான் உனக்குக் கனநாளாய்ச் சொன்ன னான் தெரியாதவர்களை முகநூலில் இணைக்க வேண்டாம் என்று. நிறைய லைக்குகள் கிடைக்க வேண்டுமென்ற பேராசையாலை உனக்கு யாரென்று தெரியாதவர்கள் எல்லாரையும் இணைத்ததால் இப்ப பார் எங்கை போய் முடிந்திருக்குது என்று.... பொலிசிலை போய் அறிவித்தாயா”

“இல்லை”

“சரி வா என்னுடன், பொலிசிலை போய் முறைப்பாடு கொடுத்தால் அவர்கள் யாருடைய கொம்பியூட்டரிலிருந்து இந்த முக நூல் செய்யப்பட்டது என்று கண்டுபிடித்துச் சொல்வார்கள் வா” என தர்சினி சகானாவின் கையைப் பிடித்து எழுப்புகிறாள்.

“வேண்டாம் வேண்டாம் அது எல்லாருக்கும் தெரியவந்திடும் வீட்டுக்கும் தெரிந்திடும்” என அவளைத் தடுக்கிறாள் சகானா.

மீண்டும் அவள் பக்கத்தில் உட்கார்ந்த தர்சினி, “உன்னட்டை ஒரு விசயம் கேட்கிறன் மறைக்காமல் சொல்லு, உன்னை யாரையாவது காதலித்து நீ அவனை வேண்டாம் என்று அவனுக்கு சொல்லியிருக்கியா” எனக் கேட்க, கொஞ்சம் தடுமாறிய சகானா “இல்லை இல்லை அப்படி யாரையும் நிராகரிக்கவில்லை” என்கிறாள்.

சகானாவின் பதிலில் திருப்திப்படாத தர்சினி, “நீ எதையோ மூடி மறைக்கிறாய் முகமே காட்டுது” எனச் சொல்ல, “சொன்னால் நம்பு அப்படி ஒன்றும் இல்லை” என்கிறாள். சகானா.

“மனதைப் போட்டுக் குழப்பாதை, கோபத்தைக் குறைத்துக் கொள், உணர்ச்சி வசப்படாதை உன்னுடைய குணம் எனக்குத் தெரியும், வீட்டிலை போய் அமைதியாக இரு. இதை யார் செய்தது என்பதைக் கண்டுபிடித்துவிடலாம்” எனச் சொல்லியவாறு அவளையும் அழைத்துக் கொண்டு பேருந்தில் ஏறி இருவரும் போகிறார்கள். சகானா தான் இறங்க வேண்டிய இடம் வந்ததும் இறங்கி தனது வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

தர்சினிக்கு, தான் வேலைபார்க்கும் வங்கிக்கு செல்லவேண்டி இருந்தது. அங்கு சென்றுவிட்டுத் தாமதாகவே தனது வீட்டை அடைந்தாள். வீட்டின் கதவைத் திறந்ததும் தாய் பதட்டத்துடன் “சகானாவைச் சந்திச்சியா” எனக் கேட்டாள்.

“ஓமம்மா”

“அங்கை ஏதோ பிரச்சினையாம் சகானாவை தகப்பன் அடிக்கப் போக அவள் கோபத்திலை நிலம் கழுவிற தண்ணியை எடுத்துக் குடிச்சிட்டாளாம். ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனவை ஒரு ஆபத்தும் இல்லையாம்” என்றாள் தாய்.

“யாரம்மா சொன்னது”

“பக்கத்து வீட்டு சகுந்தலா சொன்னவள்”

அதிர்ச்சியடைந்த தர்சினி, வந்த வேகத்திலே சகானா இருக்கும் ஆஸ்பத்திரிக்கு ஓடுகிறாள்.

மயக்கமடைந்த நிலையில் இருக்கும் சகானாவை ஆஸ்பத்திரியில் பார்த்திட்டு வந்த தர்சினி அமைதியாக இல்லை.

தனது தோழியின் தற்கொலை முயற்சிக்கு யார் காரணமாக இருக்கும் என்று எண்ணிய படியே இருந்தாள். அன்றிரவு தனது லப்ரப் பழுதடைந்துவிட்டதால் தனது அண்ணனின் கொம்பியூட்டருக்கு முன்னால் இருந்து, ஒரு ஆய்வுக்கட்டுரையை பதிவு செய்வதற்காக பதியாத பென்றைவ் இருக்குதா என ஒன்றை எடுத்து கொம்பியூட்டரில் பொருத்தி கிளிக் செய்தவளுக்கு பெரும் அதிர்ச்சி. சகானாவின் முகநூலில் இருந்த அவளின் அரைகுறை நிர்வாணப் படங்கள் அத்தனையும் இருந்தன. சகானாவின் போலியான முகநூலின் விபரங்கள் எல்லாம் இருந்தன. அதிர்ச்சியடைந்த தர்சினி கோபத்தின் உச்சிக்கே போய்விட்டாள்.

வேகமாக கூடத்திற்கு வந்த தர்சினி அங்கே தாயும் தகப்பனும் தனது அண்ணனும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பதைத் கண்டதும் “டேய் நீதானா அந்தக் கேவலமான வேலையைச் செய்தனி” என்று கோபத்துடன் அண்ணனின் சட்டையைப் பிடித்துக் கொண்டே, அவன் முகத்துக்கு நேரே பென்றைவ்வைப் பிடித்தபடி “இதிலை என்ன இருக்கு சொல்லடா” பல்லை நெருமினாள்.

அண்ணா அண்ணா எனப் பாசமாக அழைப்பவள் பத்திரகாளியாக டேய் என்று சொல்லி நின்றதைப் பார்த்து தகப்பனும் தாயும் திகைத்து நிற்க, சகானாவின் அரைநிறை



தங்கச்சி இருக்கிறாள் அதை நினைச்சியா, சகானாவுக்கு உன்னிலை விருப்பமில்லையென்றால் விட வேண்டியதுதானே. கட்டாயப்படுத்தி காதலை வரவழைக்க முடியாது. சகானாவின் அப்பா அம்மா எங்களுடைய குடும்ப நண்பர்கள்." என்றார் தந்தை

"அவர்கள் வீட்டுக்கு எப்படி மனப்பாரம் இல்லாமல் போக முடியும். அவர்கள் எங்கள் வீட்டுக்கு வரும்போது தடுமாற்றமில்லாமல் சிரித்த முகத்துடன் வாங்க வாங்க

நிர்வாணப் படங்களைப் போட்டு முகநூல் செய்தவன் இவன்தானப்பா, அவள் தற்கொலை செய்யப் போனதற்கும் இவன்தானப்பா காரணம், இவன்தான் போலி முகநூலுக்கு காரணம் என்று அவளுக்குத் தெரிய வந்தால் இனி எப்படி அவளின்ரை முகத்திலை விழிப்பன் என விக்கி விக்கி அழுது கொண்டே எல்லாவற்றையும் சொன்னாள் தர்சினி

"ஏனடா, இந்த வேலையைச் செய்தனி" என அடிக்க கையோங்கிய கணவனைத் தாய் தடுத்து, "சொல்லடா ஏன் இப்படிச் செய்தனி, நீதான் இதைச் செய்தனி என்று மற்றவை அறிந்தால் எங்களைக் காறித் துப்புவினமே, சொல்லடா ஏன் செய்தனி? எனக் கேட்டாள்

அவன் தலையைக் குனிந்தபடியே, "அவளை நான் விரும்பினன், அதை அவளிட்டைச் சொன்னன், அதற்கு அவள் "உன்னிலை எனக்கு விருப்பமில்லை என்றாள், அதுதான்..."

"அதற்காக இப்படிக் கேவலமாகவா செய்வாய், இது பாரதூரமான குற்றம். அவை பொலிசிலை அறிவித்தால் பொலிஸ் இப்படிச் செய்தவை நாங்கள்தான் என அறிந்தால் எங்கடை மானம்மரியாதை எல்லாமே போயிருக்கும். உனக்கும் ஒரு

என்று எப்படிக் கூப்பிட முடியும். வாழ்நாள் பூராவும் சகானாவின் அப்பா அம்மா முன்னால் கூனிக் குறுக வைத்துவிட்டாயே" என்று தாய் அழுதழுது கண்ணீர் வடித்தாள்.

இனி எப்படி அந்தக் குடும்பத்துடன் கதைக்க முடியும் எனக் கொலைக் குற்றவாளி போல நடுங்கி நின்றனர் தாயும் தகப்பனும் தர்சினியும்.

"என்னுடைய கண்ணுக்கு முன்னாலை இப்ப எல்லாத்தையும் அழி... இப்ப அழிக்க வேணும்.." என்று ஆவேசமாகக் கத்தினார் தந்தை.

"எனது அண்ணன்தான் இதையெல்லாம் செய்தான் என்று எப்படி என் தோழிக்குச் சொல்வேன், அவளைப் பார்க்கும் போதெல்லாம் எப்படி நேர்கொண்டு பயமற்று தடுமாற்றமில்லாமல் பார்ப்பேன், வேலை நேரத்தில் அவளோடு எப்படி என்னால் இயல்பாக கதைக்க முடியும் என தவித்து அண்ணனைக் காட்டிக் கொடுப்பதா அல்லது தோழிக்காக நிற்பதா...."

கண்ணீர் வழிய சோபாவில் ஒருக்களித்துப் படுத்திருந்தாள் தர்சினி.

○○○

**அன்புடையீர்**

**ஞானம் பிரதம ஆசிரியர் தி. ஞானசேகரனின் 80ஆவது அகவையை முன்னிட்டு ஞானம் சஞ்சிகை நடத்தும் மாபெரும் இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் தற்பொழுது பரிசீலனையில் உள்ளன. விரைவில் முடிவுகள் அறிவிக்கப்பெறும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். – ஆசிரியர்**

# கலையாக்கமும் தேய்வியம்பலும்



பேராசிரியர் சபா ஜெயராசா

கலைப்படைப்பில் ஒரு சொல்லையோ, சொற்றொடரையோ, ஓர் அணியையோ ஓர் அடையாளத்தையோ அல்லது ஒரு படிமத்தையோ அளவுக்கு அதிகமாக மீள மீளப் பயன்படுத்தும் பொழுது அது நைந்து விடும் நிலையை எட்டுதல் 'தேய்வியம்பல்' (CLICHE) எனப்படும். கலைச்சுவை அதனால் வீழ்ச்சியடைவதுடன், வாசகருக்கும் பார்வை யாளருக்கும் சலிப்பையும் எரிச்சலையும் ஏற்படுத்திவிடும். திறனாய்வாளரும் மொழியிய லாளரும் அறிகை உளவியலாளரும் பல நிலைகளிலே இத்துறையில் ஆய்வுகளை மேற் கொண்டு வருகின்றனர்.

ஒரே தடத்தில் மட்டுப்பாடுகளுடன் இயக்கப் படும் சிந்தனை, விரிவுபெறாத அறிகைக் கட்டமைப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாட்டின் மட்டுப்பாடு, மொழிவறுமை முதலியவற்றால் தேய்வியம்பல் தோற்றம் பெறுகிறது.

பிரஞ்சுக் கவிஞர் ஜெராட் நேர்வல் தேய்வியம்பல் பற்றிய தமது மனப்பதிவை பின்வருமாறு வெளிப்படுத்தினார்.

“பெண்களை ரோஜா மலருக்கு முதலில் ஒப்புமையாக்கியவர் கவிஞர். இரண்டாம் நிலையில் அதனைத் தொடர்ந்து தொடர்ந்து பயன்படுத்தி இலக்கியம் படைப்போர் அறிவு நிலையில் முட்டாள்களாவர்”

ஒரே நகைச்சுவையை பலநூறு மேடை களிலே அளிக்கைசெய்வோர் உள்ளனர். பேச்சுக்கலையில் ஒரே சொல்லையோ ஒரே தொடரையோ மீள மீளப் பயன்படுத்தும் பொழுது, கேட்போர் சலிப்படைந்துவிடுவர். என்பதைக் கருத்திற் கொள்ளாத பேச்சாளரும் உளர். கற்பித்தற் கலையில் இதே நிலைவரம் வகுப்பறையிலே நிகழும்பொழுது மாணவர் கற்றலில் பின்னசைவு (RETARD) ஏற்படுகின்றது.

இத்துறையில் ரொபேட் ஜே.லிப்டன் என்ற உள மருத்துவர் பல ஆய்வுகளை மேற்கொண்டு, கூர்நிலையான கருத்துக்களை முன்வைத்துள்ளார். “சிந்தனையை மேல் நோக்கி நகர விடாது தடுத்துவிடும் தேய் வியம்பல்”, “உற்றறிதலை நிறுத்திவிடும் தேய்வியம்பல்”, “திறனாய்வு நோக்கை சிதறடித்துவிடும் தேய்வியம்பல்” என்றவாறான கருத்துக்கள் அவரால் முன்வைக்கப்பட்டுள்ளன.

கலைஇலக்கியத் துறைகளில் காணப்படும் தேய்வியம்பல் தொடர்பான பட்டியலாக்கம் வளர்ச்சியடைந்த மொழிகளில் உருவாக்கப்பட்டு வருகின்றது. சொல்புதிது, சுவைபுதிது என்ற நிலைநோக்கி புதிய படைப்புக்களை ஏற்படுத்துகையில், தவிர்க்கப்படவேண்டியவை பற்றிய விளக்கத்தை அவை கையளிக்கின்றன.

அனைவராலும் பயன் படுத்தப்பட்டு அரைத்த மாவை அரைக்கும் நிலையில் உள்ள ஓர் அளிக்கையை அடுத்த நகர்வை நோக்கி நகர்த்தாது, மீள மீளப் பயன் படுத்துகையில் அது தட்டையான (flat) படைப்பாக உருவெடுத்தல் தவிர்க்க முடியாதிருக்கும். படைப்பாக்கச் சோம்பல் நிலையில் அத்தகைய வெளிப்பாடு மேலெழும்.

தற்படையல் (originality) மிக்க ஆக்கங்கள் இயல்பாகவே கூறியது கூறல் என்ற அமுக்க நிலையில் இருந்து விடுபட்டவையாக அமையும்.

மனிதரை அடையாளப் படுத்தும் செயற்பாட்டில் எதிர்மறையான தேய்வியம்பல் ஆளுமைக்கு ஊறு விளைவிப்பதாக உளவியலாளர் சுட்டிக் காட்டுகின்றனர். அந்நிலையில் மாற்றத்தை நிகழ்த்த புதிய மாற்றுச் சொற்களும் உளவியலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

படிப்பில் தாமதமாகி நிற்கும் ஒரு மாணவரை 'பின்னடைந்தவர்' ( Backward), 'மெல்லக் ( SLOW)கற்பவர்' என அழைக்கும் சொற்கள் வழக்கில் இருந்தன. நவீன அணுகு முறையில் அந்தச் சொற்களுக்குப் பதிலீடாக 'முகிழ்த் தெழும் (EMERGING) மாணவர்'' என்ற சொல் பயன்படுத்தப்படுதல் குறிப்பிடத்தக்கது. புதிய சொற்கள் புதிய உளவியல் ஏற்றத்தைக் கொடுக்கின்றன.

ஒருவரை, 'மனநலப் பாதிப்புக்கு உள்ளானவர்' என்று அடையாளப்படுத்துதல் தவறானது என்பதை மிசேல் பூக்கோ பலமுறை குறிப்பிட்டுள்ளார். அத்தகைய அடையாளப் படுத்துதலும் தேய்வியம்பலும் அதிகாரத்தினதும் மேலாதிக்கத்தினதும் செயற்பாடு என்பது வலியுறுத்தலாகின்றது.

இலக்கிய வரலாற்றில் தேய்வியம்பல் அடைந்த கூறு பொருளும், இயம்பல் முறைகளும் முறியடிக்கப்பட்டு வந்துள்ளன. முன்னைய அமைப்பின் தொடர்ச்சியிலும் வளர்ச்சியிலும் அத்தகைய முறப்பாய்ச்சல் வெளிப்பாடுகள் தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கிய வளர்ச்சியில் நிகழ்ந்த மடைமாற்றுத் திருப்பங்கள் தேய்வியம்பலை விடுவிக்கும் ஆக்கச் செயற்பாடுகளுடன் இணைந்திருந்தன. பக்தி நெறிக்காலத்தில் நிகழ்ந்த பெருமளவிலான அந்த விடுவிப்பு, காவிய காலத்தில் மேலோங்கி எழுந்து, தலபுராண காலத்தில் அது மீள்சுழற்சிக்கு உள்ளானது.

கூறு பொருளிலும் இயம்பல் முறையிலும் நிகழ்ந்த தேய்வியம்பல் வலையமைப்பில் பெரும் உடைப்பை ஏற்படுத்தியவர் பாரதி. 'பாஞ்சாலி சபதம்' என்ற பழைய கூறு பொருளை இயம்பல் முறையாலும், புதிய தேவைக்குரிய குறியீட்டுப்படுத்தலாலும் நிலைமாற்றப்படுத்தியமை அக்காலத்தில் இடம்பெற்ற தேய்வியம்பலை நிலைமாற்றம் பெறச் செய்யும் ஆற்றுப் படுத்தலாயிற்று.

காண்பியக் கலையில் தேய்வியம்பல் பற்றிய ஆய்வுகள் பல நிலைகளில் நிகழ்ந்துள்ளன. குறித்த ஒரு சித்திரிப்பை அளவுக்கதிகமாகப் பயன்படுத்துகையில், அது தெவிட்டல் நிலைக்குச் சென்று விடுகிறது.

எழுத்து நிலை, கோட்டு வரைபு நிலை, வண்ணக் கலவை நிலை முதலாம் ஓவிய வழிகளில் காண்பியக்கலை அளிக்கைப்பேறு மேலெழுந்துள்ள நிலையில், அவற்றில் பதிவுற்று நின்ற தேய்வியம்பலை ஆற்றல் மிக்க மரபுவழி ஓவியர்களும் நவீன ஓவியர்களும் மாற்றியமைக்க முயன்றனர். மிகையான வண்ண அழுத்தங்கள் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துதல் தவிர்க்கப்பட்டது. கோட்டு வரைபில் அளவுக்கு மீறிய அழுத்தங்கள் தொடர்ச்சியாகவும் அதிக அளவிலும் பயன்படுத்தலில் நிகழ்ந்த சலிப்பு நிலை தவிர்க்கப்பட்டது. ஒரே வகையான வரைபு நிலையில் மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன.

நமது சூழலில் காண்பியக் கலையில் நிகழ்ந்த தேய்வியம்பலைத் தகர்ப்புக்கு உள்ளாக்கிய ஓவியர்களில் ரமணி சிவசுப்பிரமணியம் முக்கியமானவர். காண்பிய எழுத்துக்களில் மாற்று அசைவுகளையும், வினையூட்டல்களையும் மேற்கொண்ட அவரது ஆற்றல் தனித்துவமானது. கோட்டுவரைபுகளில் இடம்பெற்ற தேக்க நிலையும் அவரால் முறியடிப்புக்கு உள்ளாக்கப்பட்டது.

நாடகம் மற்றும் சினிமாத்துறைகளில் இடம்பெறும் தேய்வியம்பல், பார்வையாளரால் இலகுவாக உய்த்தறியப்படுகின்றன. கலைச் செறிவு மிக்க குறிப்பிட்ட ஓர் உடற் குறியீட்டை அல்லது காட்சித்துண்டத்தை முதலில் அறிமுகப்படுத்துகையில் அது அழகியற் செறிவு கொண்டதாக அமையும். பார்வையாளரிடத்துச் சுவைச் செறிவையும் நயப்பையும் ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டவையாய் அமையும்

அவற்றை மீள மீள அளவுக்கு அதிகமாகப் பயன் படுத்துகையில் அது கலைச் செறிவை இழந்து கருகல் நிலைக்குச் சென்று விடும். அதே நிலைவரம் ஆடற்கலையிலும் இசைக்கலையிலும் இடம் பெறுதலைக் காணலாம். தொடர்ந்து புதுமைகளையும், மாற்றங்களையும் புதிய கலை விசைகளையும் புகுத்தாவிட்டால் அவை தேய்வியம்பல் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.

பலே ஆடலிற் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்ட மாற்றங்களும் அளிக்கப் புதுமைகளும் அந்த ஆடலின் உயிர்ப்பு நிலைக்குத் தொடர்ந்து விசையூட்டிய வண்ணம் உள்ளன.

இந்திய அழகியற் கலைகளில் 'சம்பிரதாயம்' என்பது புதிய நகர்ச்சிகளுக்குச் செல்லவிடாத இறுக்கத்தைக் கொடுத்துள்ளது. அதேவேளை கதகளி ஆடலில் அதன் செவ்வியல்

அடிப்படைகளை மீறாது, புதிய உள்ளடக்கம் கலைச் செறிவு குன்றாது கட்டுமானம் செய்யப்பட்டு வருதல் குறிப்பிடத்தக்கது.

நாட்டார் கலைகளில் தேய்வியம்பல் இடம்பெறாது தடுப்பதற்கு அவர்கள் மேற்கொள்ளும் இணக்கல் ( IMPROVISATION) கைகொடுத்த வண்ணமிருக்கும். ஒவ்வொரு கலைஞரும் தத்தமது ஆற்றலையும் தனித்துவத்தையும் வெளிப்படுத்துவற்கு ஒரே ஓடுபாதையில் நகராது, தேவைகளுக்கு ஏற்றவாறு இணக்கலையும் தற்புதுமைகளையும் பெய்தவண்ணமிருப்பர்.

செவ்வியற் கலைகளிலே காணப்படும் இறுக்கமான சம்பிரதாயங்களும் வலிய கட்டுப்பாடுகளும் நாட்டார் கலைகளை ஒடுக்கிவிடுவதில்லை. எழுத்து வழியான விதிகளும் மீற முடியாத தொல்பனுவற் பின்னலும் நாட்டார் கலையாக்கங்களைத் தடுப்பதில்லை. செவ்வியற்கலைகளில் மீற முடியாத கட்டுப்பாட்டை தொல்பனுவற்பின்னல் ஏற்படுத்திவிடுகின்றது. நாட்டார் கலைகளோடு இணைந்த வாய்மொழி மரபு, இயல்பாகவே நெகிழ்ச்சி சார்ந்த ஆற்றுப்படுத்தலுக்கு இட்டுச் செல்கின்றது. புதிதாக ஒரு கலை அலகை உட்புகுத்தும் செயற்பாடு ‘சுயம்போடல்’ என்று அவர்களாற் குறிப்பிடப்படுகின்றது.

கிராமிய அரங்கின் பிறிதொரு பரிமாணம், பார்வையாளரும் அளிக்கையில் பங்காளிகளாக மாறுதல். ஆடலின் தொடர்ச்சியிலே தொய்வனவு ஏற்பட்டால் பார்வையாளர் உட்புகுந்து ஆடி வலுவேற்றம் செய்வர். அதனை ‘கும்மல்’ என அழைத்தனர்.

தேய்வியம்பல் அற்ற நிலையில் கூத்து இரவிரவாக நிகழும்வேளை பார்வையாளர் சோர்வடைந்து விடுவதில்லை.

தேய்வியம்பல் கட்டுரைக்கலையிலும் இடம்பெறுதல் உண்டு. மொழிப்பாடத்தில் கட்டுரை கற்பிக்கும் ஆசிரியர் மாணவரின் சொல் வளத்தைப் பெருக்கும் செயல் நீட்சிகளை முன்னெடுக்கையில், வாசிப்பை ஊக்கல் நிலைக்கு உள்ளாக்குதல் வேண்டும். வாசிப்பு, தேய்வியம்பலை விடுவிக்க வல்லது.

மாற்றங்கள் நிகழ்த்தப்படாத ஒரேநிலை அளிக்கை ஆக்கத்திறன் சோம்பலின் வெளிப்பாடாகின்றது.

❍❍❍



# அரச சாகித்திய விருதுகள் – 2021

## சாகித்திய விருது பெற்ற நூல்கள்

**சுயநாவல் இலக்கியம்** : அமார்க்க வாசம் – **எம். ஏ. அல். அஸுமத்**

**சுய சிறுகதை இலக்கியம்** : வேடத்தனம் – **மல்லிகை சி. குமார்**

**சுய கவிதை** : வரைபடமற்றவர்களின் காலடி – **முல்லை முஸ்ரிபா**

**சுய நானாவிதம்** : மேற்கத்திய நவீன வாதம்: ஓர் அறிமுகம் – **தா. சனாதனன்**

**சுய நாடக இலக்கியம்** : ஆனை – **வல்லிபுரம் எழுமலைப்பிள்ளை**

**சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு** : யாழ்ப்பாணத்துகல்வி வளர்ச்சியில் இந்திய ஆசிரியர்களின் பங்களிப்பு – **எஸ். சிவலிங்கராஜா**

**சுய சிறுவர் இலக்கியம்** : கூடி மகிழ்வோம் – **அழகப்பன் தனராஜ்** (அழகு தனு)

**மொழிபெயர்ப்பு நாவல் இலக்கியம் :**
தரணி (மூலம்: சிங்கள நாவல்) – **எம்.ரிஷான் ஷெரீப்**

**மொழிபெயர்ப்பு சிறுகதை இலக்கியம் :**
கிழக்கினை எதிர்கொண்டு – **கெக்கிறாவ ஸுலைகா**

**மொழிபெயர்ப்பு நானாவித இலக்கியம்** : இலங்கை - கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்ட கையேடு – **சா . திரிவேணி சங்கமம்**

# நாட்டுநடப்பு (குறும்பா)

தீயிலிட்ட புளுப்போல ஆச்சு
தீவிலது தானின்று பேச்சு
வாயிலிடப் பருக்கையில்லை
வயிறுவற்றிப் போனதன்றோ
ஓயாதோ மக்கள்பெரு மூச்சு!

அரிசிமா மரக்கறிகள் பொல்லா
ஆகாயந் தொடுநிலைகுச் செல்ல
பரிதாபம் பாலகரும்
பாலின்றி வாடுகிறார்
எரியுதுள்ளம் யாரிடத்தில் சொல்ல!

பெற்றோலின் விலைவிடம்போல் ஏறும்
பார்த்திருக்க "காஸ்சிலிண்டர்" சீறும்
உற்றதென்ன சாபமிது
ஒருபுறத்தில் கொரோனாநோய்த்
தொற்றுமன்றோ எகிறுதென்றோ நீறும்!

சம்பளத்தைக் கூட்டவென்றே எங்கும்
தெழில்நிறுத்தம் செய்வோரின் பங்கும்
சும்மைஉரம் இல்லையென்றுந்
தவிக்கின்றார் உழவர்கள்
அம்மக்கள் கிளர்ச்சியன்றோ பொங்கும்!

தலைக்குமேலே செல்கிறது வெள்ளம்
தடுக்குநிலை இலாதநிலை கொள்ளும்
நிலைக்காதிவ் ஆட்சியென
நல்லறிஞர் பேசுகிறார்
தலைபிழைப்பின் படுகுழியில் தள்ளும்!

**- ஜின்னாஹ்**

# உழவன் துயர்

உலகில் மானுடன் முதன்முதலாய்
உண்மையில் கற்ற தொழில் கமமே!
விலகாப் பசித்துயர் தனைப் போக்க
விளைவித்தான் பசும் நெல் அமுதை

காட்டினை அழித்து வயலாக்கி
கனிவுடன் எருதுகொண் டுழவு செய்து
நாட்டினில் பசியறத் தொண்டாற்றி
நலம்பெற மாந்தரை உயர்த்து பவன்

காட்டில் யானை பன்றிகளால்
கனதுயர் பட்டிவன் வருந்தி டினும்
வாட்டிடும் வறுமை தனைக் களைந்து
வாழ்ந்திடக் கழைப்பின்றி உழைத்திடுவான்

நீர் மழையின்றிப் பயிர் துவழ
நெஞ்சம் வருந்தி இறை தொழுவான்
ஏர் உழும் கரத்தால் இவன் வணக்கம்
ஏற்ற நல்லிறைவன் மழை சொரிவான்

சீர்மிகும் உழவன் இன்றெமது
தேசத் தெருக்களில் போராடி..
தீர்த்திடுவீர் எங்கள் துயர்என்றே
தினமும் அழுவதை எவர் தீர்ப்பார்..?

வாடும் மக்களை வாழ வைக்க
வளம் பெற்றவர்களை மிளிர வைக்க
"ஆடும் செங்கோல்" தனை நிமிர்த்தி
ஆள்பவர் உணர்ந்து செயற்படட்டும்

**– கவிஞர் நிலா தமிழின்தாசன்**



மொழிபெயர்ப்புச் சிறுகதை

# A Must-Write Story
# கட்டாயம் எழுத வேண்டிய கதை



- Book City [Dai Xi]

**டாய் ஜீ**

அசியா ஜேட் டாங் தனது தனிப்பட்ட அனுபவத்தை வகுப்பில் திரும்பவும் இணைந்தபோது எங்களிடம் ஒரு கதையைச் சொன்னாள் -

ஒரு நாள் அவளும் அவளுடைய தாயும் உறவினர் வீட்டில் இரவு உணவு அருந்திய பின்பு ஒன்றாக ஹொங்கொங்கின் அழகிய இரவு நேரக் காட்சிகளை ரசித்தபடி தம் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் நடந்து செல்லும்போது அசியாவின் தந்தைக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைக்கான பணத்தைக் கடன் கொடுக்க உறவினர் இணங்கியிருந்தமையால் அவர்களின் மனநிலை மகிழ்வுடையதாகவிருந்தது.

வீதியிலுள்ள சிறிய பாதை வழியே திரும்பும்வரை தங்களை இரண்டு காடையர்கள் மறிக்கப்போவதனை அவர்கள் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. காடையர்களில் ஒருவனது கையில் கூர்மையான கத்தி இருந்தது. மற்றவனிடம் மரத்தடி இருந்தது. பார்க்கும்போது கொலைகாரர்கள் போல் அவர்கள் தோற்றமளித்தார்கள்.

அப்போது தெருவில் நடமாட்டமெதுவும் தென்படவில்லை என்பதால் அசியா பீதியுற்றவளானாள். ஆனால் அவளின் தாயோ அமைதியாகவும் சாந்தமாகவும் இருந்ததோடு அசியாவின் மேலாடையின் விளிம்பைப் பிடித்து இழுத்து, “பயப்படாதே. ஒரு நெருக்கடி நிகழ்வைச் சந்திப்பது எங்கள் விதியாகிவிட்டது. எனவே முயற்சி எடுத்தாலொழிய அதிலிருந்து தப்ப முடியாது” என்று கிசுகிசுத்தாள்.



தாய் சொன்னதைக் கேட்டிருந்தபோதிலும் அசியாவின் பதற்றம் நீடித்தவாறு இருந்தது.

“இந்தா, நீங்கள் இருவரும் கேட்டுக் கொள்ளுங்கள்... நாங்கள் உங்கள் பணத்தை மட்டுமே எடுக்க விரும்புகிறோம். உங்களைக் கொல்லவோ அல்லது கற்பழிக்கவோ விரும்பவில்லை. உங்களுக்கு எது நல்லது என்று தெரிந்தால், உங்கள் பணத்தை வைத்துவிட்டு இந்தத் தெருவழியே போய்விடுங்கள்!” கத்தியை வைத்திருந்தவன் அவர்கள் பக்கம் கத்தியை நீட்டியவனாகக் கர்ச்சித்தான். மரத்தடியைப் பிடித்திருந்தவனோ புலி தன் இரையைப் பார்ப்பதுபோல் அவர்களின் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அசியாவுக்கு இது போன்ற ஒரு திகிலனுபவம் முன்னர் ஏற்பட்டிராதபடியால் பயத்தினால் வாயடைத்துப் போயிருந்தாள். ஆனால் தாயினது தோரணையில் ஏதும் மாற்றமில்லை. ஒரு போக்குவரத்து தடுப்பு போல தன் மகளின் முன் நின்றிருந்தாள்.

“நீங்கள் இளம் பையன்களாக இருக்கிறீர்கள்” என அவர்களிடம் தாய் மென்மையாக சொன்னார். “பணத்தைச் சம்பாதிக்க நீங்கள் இருவரும் வேறு ஏதாவது

**தமிழில் – சு.முரளிதரன்**

செய்ய முடியாதா? உங்கள் முகத்தில் இந்த ஊத்தைக் கறையை தடவிக்கொண்டு கொள்ளையடிக்க வீதிகளுக்கு வரத்தான் வேண்டுமா?”

“நாங்கள் வேறு என்ன செய்ய முடியும்?” தடியுடன் இருந்தவன் கூறினான். “எங்கள் கபட மனசு கொண்ட முதலாளி தனது தொழிற் சாலையைக் கைவிட்டு ஓடிப்போய் விட்டான். அவன் தரவேண்டிய பணத்திற்காக நாங்கள் ஒரு வருடம் முழுவதும் இரத்தத்தை வியர்வையாகக் கொட்டினோம். அது எல்லாம் போய்விட்டது. எங்கள் குடும்பங்களை எதிர்கொள்ள முடியாததால், இந்தப் புது வருசப் பண்டிகைக்கு வீட்டிற்கும் போக முடியவில்லை” என்றான் கத்தியுடன் இருந்தவன். “எங்களைவிட உங்கள் இருவரிடமும் அதிக பணம் இருக்கிறது. எங்களால் எங்கள் வீட்டிற்கு செல்ல முடியாதிருக்கிறது! நாங்கள் உங்களைக் கொள்ளையிடாவிட்டால் யார்தான் கொள்ளையிடுவது? நீங்கள் யாரையாவது குறை சொல்ல விரும்பினால் உங்கள் துரதிஸ்டத்தைக் குறை கூறிக்கொள்ளுங்கள்.... பேசியது போதும். இப்போதே உங்கள் பணத்தை எடுத்து வையுங்கள்! எங்களுக்கு உங்கள் பணம் மட்டுமே தேவை, உங்கள் உயிர் அல்ல.”

தயக்கமின்றி, அவளுடைய அம்மா தனது பணப்பையிலிருந்த பணத்தை உருவி எடுத்தார். ஹாங்கொங் டொலர் HK $ 700 மட்டுமே இருந்தது, அதற்கு சுமார் 90.00 அமெரிக்க டொலர் பெறுமதியிருக்கும். அம்மா அதை நிதானமாகப் பிடித்தவாறே மெதுவாகவும் தெளிவாகவும் சொன்னார், “பொடியன்மார்களே.. உங்களுக்கு ஏற்கனவே ஏகப்பட்ட பிரச்சனைகள் இருக்கிறது. அத்தோடு திருட்டுப் பட்டத்தையும் சேர்த்துக் கொள்ளக் கூடாது சரியா?”

“திருடக்கூடாதா?” தடியுடன் இருந்தவன் அதிர்ந்தவனாக. “உங்கள் பணத்தை நாங்கள் திருடுவதற்குப் பதிலாக, கருணை கொண்டு அதை எங்களுக்கு கொடுக்கப் போறீங்களா?” என்றான்.

“நிச்சயமாக!” தாய் தலையசைத்தாள்.



[ A Must-Write Story - **மூலம்** ]

*Asia Jade Tang told us a story at the class reunion, one from her personal experience —*

*One day she and her mother were walking home together after dinner at a relative's house. They were enjoying Hong Kong's beautiful nighttime scenery as they walked. They were in a good mood because the relative had agreed to lend her mother the money to pay for medical treatment that Asia's father needed.*

*They hadn't figured on encountering two gangsters shortly after they turned into a small side street. One of them had a pointed knife in his hand and the other held a wooden stick. They both looked murderous.*

*No one else was out walking on the street, and Asia panicked. Her mother, on the other hand, remained calm and composed. She tugged on the hem of Asia's blouse and whispered, "Don't be afraid. It was our destiny to meet with a calamity, and we couldn't have escaped it if we'd tried."*

*Asia was still anxious despite her mother's words.*

*"Listen, you two. We only want to take your money. We don't want to kill you or rape you. If you know what's good for you, leave your money and hit the road!" The one holding the knife pointed it at the women. The one with the stick stood off to one side like a tiger eying its prey.*

“அப்புறமென்ன.. அதைத் தாருங்கள், விசயத்தை முடித்திடுவோம்.!” என்றான் கத்தியுடன் இருந்தவன்.

“இல்லை!” அவள் அம்மா தலையை ஆட்டினாள். “நீங்கள் எனக்கு கடன் பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகுதான் நான் அதைத் தருவேன்.”

“ஏன்?” கையில் தடியோடு இருந்தவன் கடுப்புடன் கேட்டான்.

“எதற்கென்றால்,” என இழுத்துவாறே அவர்களிடம், “கொள்ளையடிப்பது ஒரு குற்றம், அது உங்களுக்குத் தெரியும்! நீங்கள் சட்டப்பூர்வ தண்டனையிலிருந்து தப்பிக்க முடிந்தாலும், உங்களில் இருவருக்குமே உங்கள் வாழ்க்கையின் அந்த பாவக்கறையை கழுவிக்கொள்ள முடியாது” என்றாள்.

“என்ன சொல்ல வாருகிறீர்கள்....” கத்தியை வைத்திருந்த கை கொஞ்சம் நடுங்கியது.

தாய் அந்த ஆண்களின் உடல் மொழியை அவதானித்தபடியே. “நான் உங்களுக்குப் பணத்தைக் கடனாகக் கொடுத்தால், அது எங்களுக்கு இடையே ஒரு சாதாரண கொடுக்கல் வாங்கலாக இருக்கும்.. உங்களுக்கு கொஞ்சம் பணம் வரும்போது, நீங்கள் விரும்பும்போது எனக்கு திருப்பித் தந்துவிடலாம்”

“அது வந்து....” காடையர்கள் இன்னும் தயங்கினர். அந்தத் தாய் தங்களை ஏதோ சிக்க வைக்கப் போவதாக யோசிக்கத் தொடங்கினார்கள்.

அதற்குமேல் எதுவும் பேசாமல், தாய் ‘பேக்’கிலிருந்து பேனாவையும் பேப்பரையும் எடுத்தார். ஒரு தெரு விளக்கில் இருந்து வழிந்த மங்கலான வெளிச்சத்தில் கடன் பத்திரத்தை எழுதி கையொப்பத்தை இட்டு தொடர்புகொள்ள வேண்டிய முகவரியையும் எழுதி புன்னகைத்த முகத்தோடு பேனாவையும் கடன் பத்திரத்தையும் கொடுத்து கடன் வாங்கியதற்கான கையொப்பத்தை வாங்க அவர்களிடம் நீட்டினாள்.

“அப்ப ..பொலிஸிடம் மாட்டிக்கொடுக்கத் தேவையான தகவலை எங்களை ஏமாற்றி வாங்கப் போறீங்க.. இல்லையா?” தடியுடன் இருந்தவன் உறுக்கிக் கேட்டான்.

“தம்பிமார்களே, நீங்கள் இன்னும் என்னை நம்பவில்லையா? நான் உங்களைப் பிடித்து கொடுக்கப் போகின்றேன் என நினைக்கிறீர்களா?

*Asia had never had such a confrontation and was so scared that she couldn't even speak, but her mother’s expression hadn’t changed. She stood in front of her daughter like a traffic barrier.*

*"You guys are young,” Her mother said calmly. “Can’t the two of you do something to earn your money? You have to smear dirt on your faces and come out on to the streets to rob people?"*

*"What else can we do?" said the one with the stick. "Our crooked boss quit the factory and ran off. We sweat blood for that money for a year and it was all gone. We couldn’t even go home for the Spring Festival because we couldn’t face our families!”*

*The one with the knife spoke up. "You two have more money than the two of us. We can't even go home. If we don't rob you, who else would we rob? If you want to blame someone, blame your own bad luck. That’s enough talk! Take your money out right now! We only want your money, not your lives."*

*Without hesitation, her mother fished money out of her purse. There was only HK$ 700, about US$ 90.00 She held it up leisurely and said, slowly and clearly, "Young men, since you already have enough problems, you don't need to add more my stealing, right?"*

*"Not steal?" The one with the stick was startled. "Instead of stealing your money, you’ll just give it to us out of the kindness of your hearts?”*

*"Of course!" Her mother nodded.*

*"Then hand it over and we’ll be done!" said the one with the knife.*

*"Nope!" Her mother shook her head. "I’ll only give it to you after you give me an IOU."*

*"Because," her mother said, staring at them, "robbery is a crime, you know! Even if you can escape legal punishment by some fluke, neither of you will be able to wash the stain of the crime off yourselves for the rest of your lives."*

*"That’s...." The hand holding the knife trembled a little.*

*Her mother was watching the men’s body language carefully. “If I give you the money as*

விரும்பினால், நீங்கள் கடன் வாங்குபவர்களாக கையெழுத்திடலாம். இல்லாவிடில் தேவையில்லை, இந்தக் கடன் பத்திரத்தை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். அது எல்லாவற்றையும் ஒரு வழிக்குக் கொண்டுவரும், சரியா?”

தடியுடன் இருந்தவன் தாயின் கையிலிருந்து கடன் பத்திரத்தை வெடக்கென வாங்கி தனது சட்டைப்பைக்குள் நுழைத்தான்.

அம்மா பணத்தை கத்தியுடனிருந்தவனிடம் கொடுத்தார்.

அவர்களுக்கு பணம் கிடைத்தவுடன், திரும்பி ஓடிப்போய் விரைவாக ஒரு சந்துக்குள் நுழைந்து மறைந்து போனார்கள்.

பின்னர் அசியாவும் அவரது அம்மாவும் வீட்டிற்கு நடந்து சென்றனர்.

“பட்ட காலிலேதான் மீண்டும் படுகிறது!” என அசியா குறைபட்டுக்கொண்டே, “அப்பாவுக்கும் ரொம்பக் காலமாக சுகமில்லை, நமது குடும்பத்திலும் இதுவரை… இந்த இரவுவரை பணம் இல்லை ... ”

“அந்த இரண்டு பொடியன்கள் மீது எதுவும் நம்பிக்கை வைக்க இயலாது இல்லையா” என அசியா கேட்டபோது, அம்மாவின் சாந்தமும் மௌனமும்தான் பதிலாக வந்தது.

“ஆனால்… அந்த இருவரும் உங்களுக்கு பணத்தை திருப்பித் தருவார்களா?” அசியா ஆர்வத்துடன் கேட்டார்.

“எனக்குத் தெரியாது” அம்மா தலையை சிலுப்பிக்கொண்டார்.

“சரி, அவர்கள் ஏன் கடன் பத்திரத்தில் கையெழுத்திட வேண்டும் என்று நீங்கள் ஆசைப்பட்டீர்கள்?” அசியாவின் குழப்பம் தீரவில்லை.

“பணத்தைக் கடன் வாங்குகிறார்கள் என்ற உணர்வு அவர்களுக்கு இருக்கட்டும் என்று தான்!” எனச் சொல்லிவிட்டு அம்மா சிரித்தார். “அவர்களுக்கு மனசாட்சி இருந்தால், அவர்களிடம் பணம் இருக்கும்போது அவர்கள் நிச்சயமாக எனக்குத் திருப்பித் தருவார்கள். அவர்களுக்கு மனசாட்சி இல்லையென்றாலும், தமது கருணை அவர்களை உறுத்திக்கொண்டே இருக்கும். அதைவிட அவர்கள் பணத்தை எடுக்கும்போது அவர்கள் பாதுகாப்பாக இருப்பதை உணர்விடுவதன் மூலம், எங்களை காயப்படுத்தும் எண்ணம் அவர்களிடம் ஏற்படவில்லை அல்லவா?”

*a loan,” she continued, “it’ll become a normal economic transaction between us. Once you have some money, you can repay me whenever you like."*

*"That’s...." The two gangsters still hesitated. They were worried that her mother was trying to put one over on them.*

*Without saying anything more, her mother quickly took a pen and paper out of her backpack. “Whish, whish, whish,” she wrote out an IOU in the dim light from a streetlamp. Her signature and contact information were on the IOU.*

*When she finished writing, she smiled and held the pen and the IOU out for the men to sign in the space for the borrower’s signature.*

*"You’re trying to trick us into giving you information you can use to file a police report, aren’t you?" the one with the stick asked perceptively.*

*Her mother snorted. "You still don’t trust me, young fellows? You think I’ll turn you in? In that case, you can either sign as borrowers or not sign, and keep the IOU yourselves. That’ll make it all OK, right?""*

*The one with the stick took the IOU from her mother's hand and shoved it in his pocket.*

*Her mother handed the money to the one with the knife.*

*Once they had the money, the two of them turned and ran. They soon disappeared into the depths of the alley.*

*Asia and her mother continued walking home.*

*"Really, it never rains but it pours!" Asia complained, "Dad's been sick for so long, and the family didn't have any money, and now, tonight..."*

*"Those two guys were between a rock and a hard place, too." Her mother was still cool and calm.*

*"But," Asia asked anxiously, "will those two pay you back?"*

*"I don't know." Her mother shook her head.*

*"Well, why did you want them to sign an IOU?" Asia was puzzled.*

*“To let them have a sense that they were borrowing the money!” Her mother smiled. “If*

அசியா ஆமென தலையசைத்த படி, “நீங்கள் சொல்வது சரி, அம்மா. - நீங்கள் செய்தது அவர்களைச் சட்டத்தை மீறுவதில் இருந்து தப்பிக்க உதவியது, இல்லையா?”

“நீ இப்படித்தான் பார்க்க வேண்டும்” என்று சொல்லிய அவளுடைய தாய் மேலும் “முதலில், அவர்களுக்கு பாடம் புகட்டியமைக்கு நாங்களே எங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர்கள் இந்தக் கொடுக்கல் வாங்கலை ஏற்றுக்கொண்டதால், அந்த விவகாரத்தின் சொரூபம் மாறியது. அவர்கள் செய்தது இனி குற்றமாக இருக்காது. இரண்டாவதாக, சட்டத்தை சொல்லிக்கொடுப்பது என்பது நிர்வாகத்தின் குறிக்கோள்களுக்கு மக்களை மதிப்பளிக்கச் செய்வதுதான். சட்டத்தின் படி, இறுதியில் மக்கள் தங்களை தாமே மேம்படுத்திக்கொள்ள முடியும். ஹொங்கொங் தற்போது தாய் நிலத்தோடு இணைந்துள்ளது. அதன் வளமான எதிர்காலத்துக்கு எங்கள் கடமையும் பொறுப்பும் இருக்கின்றது.

அசியா தனது தாயை நோக்கி கட்டை விரலை உயர்த்திக்காட்டி வாழ்த்தினாள்.

அரை வருடம் கழித்து, அம்மாவுக்கு HK$ 1,300 க்கு ஒரு காசுக்கட்டளை வந்தது. கடன் வாங்கியவரின் பெயர், கடனின் நேரம் மற்றும் இடம் ஆகியவற்றுடன் ஒரு பின்குறிப்பும் இருந்தது. அதில் மேலதிகமாக 600 டாலர்கள் என்பது வட்டி எனச் சொல்லி, நன்றி கூறப்பட்டிருந்தது.....

நான் கதையை எழுதவில்லை என்றால் நான் மகிழ்ச்சியாக இருக்க மாட்டேன், அதனால் நான் இதை எழுதித் தீர்த்தேன்.

*they have consciences, they'll definitely pay me back when they have the money. Even if they don't have consciences, they may still feel a sense of benevolence or duty. Besides, by letting them feel safe when they took the money, they wouldn't get the urge to hurt the two of us, would they?"*

*Asia nodded: "You're right, Mom. It's just – what you did, it lets them get away with breaking the law, doesn't it?"*

*"You have to look at it like this," her mother said. "First, thanks to our tutelage they completed the loan procedures, and the nature of the matter has therefore been changed. What they did no longer constitutes a crime. Second, the goal of legal propagation and administration is to teach people to respect and abide by the law, and ultimately to improve and better themselves! Now that Hong Kong has returned to the motherland, don't we all have the duty and responsibility to make Hong Kong's tomorrow better?"*

*Asia gave her mother a thumbs-up.*

*Half a year later, her mother received a money order for HK$1,300. The borrower's name was written in the remarks column along with the time and place of the loan, plus a one-sentence explanation: "The extra 600 dollars is interest and a thank you...."*

*I wouldn't feel happy if I didn't write the story down, so I dashed this off.*

❍❍❍

**பின் குறிப்பு:**

ஹொங்கொங் சீனாவோடு மீண்டும் இணைந்து 20 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடுவதற்காக 2017ஆம் ஆண்டு உலகெங்கும் அது குறித்து ஆக்கங்களை படைப்பாளர்களிடம் இருந்து கோரி World Chinese Mini-Speaking Essay Competition நடத்தியிருந்தது. நான் சேவையாற்றும் நிறுவனத்துக்கு கிடைத்த அழைப்பு எனக்கு அனுப்பப்பட்டிருந்தது. நான் அதில் பங்குபெறாவிடினும் ஒரு வருடத்தின் பின் இந்த போட்டியின் முடிவு குறித்து தேடிப்பார்த்தபோது “The “Bauhinia” World Chinese Micro-theory Essay Award Winning Collection”இல் முதற்பரிசுபெற்ற இந்த ஆக்கம் சீனா மற்றும் ஆங்கில மொழிகளில் கண்ணுக்குத் தட்டுப்பட்டது. ஒரு நாடு எவ்வாறு தேசப்பற்றுள்ள விழுமிய இலக்கியங்கள் தோன்றுவதை ஊக்குவிக்கின்றது என்பதைக் காட்டுவதற்கு இதனை உதாரணமாக பயிற்சி அமர்வுகளில் பயன்படத்தவது உண்டு. அதனை எழுத்து வடிவில் பகிர்ந்து கொள்கின்றேன். இதை எழுதியவர் டேய் ஜி (1965) (“புத்தக நகரம்” எனும் அர்த்தம் கொண்ட சீனமொழி புனைபெயர் பயன்படுத்துபவர்) சாங்டே மாவட்டத்தின் எழுத்தாளர் சங்க துணைத்தலைவர் மற்றும் ஹுனான் கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் என்பதோடு சிறிய புனைகதை (Mini-fiction) துறையில் விற்பனராக கருதப்படுகின்றார்.

# பூகோள தர்ப்பணம்: சில குறிப்புகள்



என்.செல்வராஜா
(நூலியலாளர் - லண்டன்)

1957இல் வெளிவந்த அமரர் F.X.C. நடராஜா அவர்களின் 'ஈழமுந் தமிழும்' என்ற சிறு நூற்பட்டியலின் 'செய்யுள் நூல்களும் ஆசிரியர்களும்' என்ற முதலாவது பகுதியில் 'பல்வகை நூல்கள்' என்ற பிரிவில் சி.சி. செரிமயா என்பவர் 1930இல் எழுதியதாக 'பூகோள தர்ப்பணம்' என்ற செய்யுள் நூல் பட்டியலிடப் பட்டிருந்தது. அந்த நூல் பற்றிய வேறெந்தத் தகவல்களும் அப்பதிவில் காணப்படாத நிலையில் பின்னாளில் எனது 'ஈழத்துத் தமிழ்க் கவிதையியல்' என்ற பெருந்தொகுப்பில் இந்நூல் செய்யுள் வடிவில் அமைந்த நூல் என்ற அடிப்படையில் 1930ஆம் ஆண்டுக்குரிய பதிவுகளுடன் அவ்வாண்டில் வெளிவந்ததாகக் கருதப்படும் பிற நூல்களில் ஒன்றாக பூகோள தர்ப்பணத்தினையும் எதிர்காலத்தில் தேடிப் பதியவேண்டிய நூலாகக் குறிப்பிட்டிருந்தேன்.

எனது நூலியல் தேடல்களை மிகுந்த ஆர்வத்துடன் படித்து வருபவர் சகோதரர் சத்தியதேவன் சற்குணம். பழம்பெரும் நூல்கள் பற்றிய தகவல்கள் தன் கைக்கெட்டும் வேளைகளில் என்னுடன் பகிர்ந்து கொள்பவர்களாக இவரையும் 'விருபா' குமரேசனையும் நன்றியுடன் குறிப்பிட்டாக வேண்டும். இவர்களின் உதவியால் முன்னையோர் விட்ட பல நூலியல் பதிவுத் தவறுகளை என்னால் திருத்தி ஆவணப்படுத்த முடிந்துள்ளது. அண்மைக் காலத்தில் ஒரு நாள் சத்தியன் என்னுடன் தொடர்புகொண்டு நான் தேடிக்கொண்டிருக்கும் 'பூகோள தர்ப்பணம்' தனக்கு PDF வடிவில் மின்நூலாகக் கிடைத்திருப்பதாகத் தெரிவித்ததுடன் 1889இல் வெளியிடப்பட்டதும் 45 பக்கம் கொண்டதுமான அந்த நூலின் இரண்டாம் பதிப்பின் இலத்திரனியல் வடிவத்தையும் மின்னஞ்சலில் அனுப்பிவைத்திருந்தார்.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் புவியியல் பாடத்தை பயிற்றுவிக்கும்போது ஊர்களினதும் நாடுகளினதும் பெயர்களை மாணவர்கள் நினைவில் வைத்திருக்கும் வகையில் செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட ஒரு நூல் இது. இலங்கையில் புவியியல் அல்லது பூமிசாஸ்திரம் எனப் பின்னாளில் அறியப்பட்ட இப்பாடத்தை பயிலும் தமிழ் மாணவர்களுக்காக இலங்கையில் உருவான முதல் தமிழ் நூல் என்ற பெருமையையும் இந்நூல் பெற்றிருக்கின்றது. இதற்கு முன்னர் இலங்கையில் புவியியல் துறையில் தமிழ் நூல்கள் எதுவும் வெளியாகியிருப்பதாக என்னிடம் தகவல் ஏதும் இல்லை.

அமரர் F.X.C. நடராஜா அவர்கள் 'ஈழமுந் தமிழும்' நூலில் அந்நூல் 1930ஆம் ஆண்டு வெளிவந்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் மூலநூலைக் கண்டவிடத்து, அதில் குறிப்பிடப்பட்டிருந்தபடி அந்த நூல் 1876இல் தனது முதற்பதிப்பைக் கண்டிருந்தமை எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. இந்நூல் தெல்லிப்பழை, Training and Industrial School Press மூலம் அச்சிடப்பெற்றுள்ளது. செய்யுள் வடிவில் இந்நூலை எழுதியவர் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலையின் (Training and Industrial School) தலைமை ஆசிரியராவார்.

'ஈழமுந் தமிழும்' பட்டியலில் எஸ்.எஸ். சேர்மையா என்ற எழுத்தாளரின் பெயரின்கீழ் 'விசிட்ட வாசகம்' என்ற வசன நூல் ஒன்றினை 1886ஆம் ஆண்டு எழுதப்பட்டதாக அமரர் F.X.C. நடராஜா பதிவு செய்திருக்கிறார்.

அதில் குறிப்பிட்டிருந்த எஸ்.எஸ். சேர்மையாவே 'பூகோள தர்ப்பணம்' நூலை எழுதிய எஸ்.எஸ்.ஜெரேமையா ஆக இருக்கலாம் என்று கருதுகின்றேன். 19ஆம் நூற்றாண்டின் இறுதிகளில் தமிழ் நூல்களின் தலையங்கப் பக்கத்தில் ஆங்கில மூலத்தில் நூலியல் தகவல்கள் அதிகம் காணப்படுவது வழமையாகும். பூகோள தர்ப்பணம் நூலின் தலைப்புப் பக்கத்திலும் நூலின் தலைப்பு 'பூகோள தர்ப்பணம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர ஆசிரியர் பெயர், பதிப்பகம், நூல் தலைப்பு (Geography in Verse) என அனைத்தும் ஆங்கில மொழியிலேயே அச்சிடப்பட்டுள்ளன. குடியேற்ற (ஆங்கிலேய)

ஆட்சியாளரின் சுதேச நூல்வெளியீடுகளைக் கண்காணிப்புக்கு உள்ளாக்குவதற்கு ஏதுவாக இந்த நடைமுறை வழக்கில் இருந்திருக்கக்கூடும். (இங்கிலாந்தின் பாராளுமன்றத்தினால் 1911இல் இயற்றப்பட்டபின், இலங்கையில் 1912இலேயே Ceylon Copyright Ordinance No.20 of 1912 என்ற சட்டமூலமாக அறிமுகப்படுத்தப்பட்டது).

இந் நூலின் நூலாசிரியரின் பெயர் S.S. Jeremiah என தலைப்புப் பக்கத்தில் காணப்படுகின்றது. இதனை 'எஸ்.எஸ். ஜெரேமியா' என்று அழைப்போம். 'கண்ணீரின் தீர்க்கதரிசி' யாக கிறிஸ்தவர்களால் போற்றப் படுபவர் தீர்க்கதரிசி ஜெரேமியா என்பது கிறிஸ்தவ வரலாறு. அவரது பெயரைக் கொண்ட எஸ்.எஸ். ஜெரேமியா, ஏரேமியா சின்னத்தம்பி என்றும் இந்நூலில் குறிப்பிடப் படுகிறார். பூகோள தர்ப்பணம் நூலுக்கு சிறப்புப் பாயிரத்தை யாழ்ப்பாண உதயதாரகை பத்திரிகையின் பத்திராதிபராகிய மானியம்பதி (மானிப்பாய்) அருணாசலம் சதாசிவம்பிள்ளை (J.R.Arnold) அவர்கள் வழங்கியிருக்கிறார். அதில் அவர் நூலாசிரியரை 'ஏரேமியா சின்னத்தம்பி' என்றே விழிக்கிறார். அவர் 13 ஜூன் 1876இல் வழங்கிய தனது சிறப்புப் பாயிரத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"பூகோளதர்ப்பணம் என்னும் புத்தகத்தை வாசித்தவுடன் ஓ! ஓ! இது போலொன்று ஏலவே இயற்றப்பட்டிருந்தாலோவென்று ஆசித்தேன். தமிழர் பாப்பிரியரென்றதை அறியாதார் யார்! பிள்ளைகள் நெடுங்கணக்கு முடித்தவுடன் 'அறஞ்செய விரும்பு', 'அன்னையும் பிதாவும்' எனப் பாட்டுகளோடேயே தொடங்குகிறார்கள். அப்பாற் போகப்போக எல்லாம் பாட்டே, படிப்பவைகளை மனசில் அவதானம் பண்ணப் பாக்கள் வாய்ப்பென்பது வெளிப்படை. இங்கிலிஸ்ப் பிள்ளைகளும் பாக்களில் அபிமானங்கொண்டவர்களே. 'சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்து' என்றது போலப் பாலியப் பிராயத்திற் பாக்களிற் பாடம்பண்ணப்படுவன மனசை விட்டுக் குடிபோகா. எமது பாலியப் பருவத்துக்கில்லாச் சலாக்கியத்தை இக்காலப் பாலர்க்கு எளிதில் வாய்க்கச் செய்த ஏரேமியா சின்னத்தம்பி ஆசிரியர்க்கு எம்மூர்ப் பாடசாலைகள் நெடுந்தூரங் கடமைப்பட்டிருக்குமென்று நம்புகிறோம். இப்புத்தகம் யாவராலும் பாராட்டப் படவேண்டுமென்று வாஞ்சிக்கிறேன்."

இந் நூலுக்கு 'சார்த்துகவி' வழங்கிய யாழ்ப்பாணம் வெஸ்லியன் மத்திய கலாசாலையின் சிரேஷ்ட ஆசிரியரான வட்டுக்கோட்டை முத்துக்குமாரா. சிதம்பரப்பிள்ளை (William Nevins) அவர்கள் நூலாசிரியரை 'சின்னத்தம்பி ஜெறிமய" என்று தன் சாற்றுகவியில் விழிக்கிறார்.

**'சொற்பொருணூல் கசடறக் கற்றதனையுளம் பேணி**
**மனந்தோயச்சாதித்**
**தற்கமிலா தொழுகவுயர் தமிழறிஞர் செயுநெறி**
**யப்பொருளையீவர்**
**கற்கலைநூல்பயிலு சின்னத்தம்பி ஜெறிமய**
**தரும்பூகோளசாகர**
**விற்பனமெய்ப்பொருள் வளநற்செயுணடையான்**
**மனனமிடமேயநூலே"**

ஊர்காவற்றுறை பொலீசுக்கோட்டு நீதித் துரையாகிய (Police Magistrate) குமாரசாமி முதலியார் கதிரவேற்பிள்ளையவர்கள் (C.W.Catheravelupillai) வழங்கிய வாழ்த்துப் பாவில் ஆக்கியோனை 'ஜெறிமிப் புலவர்" என விழிப்பதையும் காணமுடிகின்றது.

**'பூகோளதர்ப்பணந்தந்தான ஜெறிமிப்புலவனிது**
**வாகானசிந்தை நன்மைந்தர்கள் கற்றிட**
**வாய்ந்ததுகாண்**
**போகாதகீர்த்திச் சிதம்பரநாதன் புகழ்விளைந்த**
**மாகானமுளையிவன் செய்ததையாவரும்**
**வாழ்த்துகவே"**

எஸ்.எஸ்.ஜெரேமியா, ஏரேமியா சின்னத்தம்பி, சின்னத்தம்பி ஜெறிமய, ஜெறிமிப் புலவர் என பல்வேறு நாமகரணம் சூட்டி அழைக்கப்பெறும் இவர் Training and Industrial School பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியதன் காரணமாக, அக்காலங்களில் மிஷனரிக் கல்வித் திட்டங்களுக்குள் சிக்கித் தவித்து வந்த சுதேச தமிழ் மாணவர்களின் கல்வித்துறைச் செயற்பாடுகளில் மிகுந்த அவதானமும், அக்கறையுமுடையவராக அறியமுடிகின்றது. பூமிப்பந்தின் அண்டைய நாடுகள் பற்றியும் தன் தாய்நாடு பற்றியுமான கல்வியறிவை ஊட்டி, குறிப்பாகப் புவியியல் பாடத்தில் மாணவர்களின் அறிதலை அக்கால கட்ட கல்விச் செயற்பாடுகளில் ஒன்றாகவிருந்த மனனஞ் செய்யும் வழிமுறைக்கு இயைய, பாடல்களின் வாயிலாகவே பிஞ்சுகளின் மனதில் தகவல்களைப் பதியம் வைக்கும் ஒரு செயற் பாட்டினை புவியியல் பாடத்தை முன்வைத்து பரீட்சார்த்தமாக 1876இல் முயன்றிருக்கிறார்.

இது அந்நாளில் கல்வியுலகில் அவருக்கு நல்ல வரவேற்பை வழங்கியிருந்த காரணத்தினால் அச்சிறுநூலை விரிவாக்கி மீள் பதிப்பிடுமாறு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. இதனை 1889இல் வெளியிடப்பட்ட பூகோள தர்ப்பணத்தின் இரண்டாம் பதிப்பின் முகவுரையிற் காண முடிகின்றது. இதன் முக்கியத்துவம் தொடர்ந்து 1930களிலும் வழக்கிலிருந்திருக்கக்கூடும். 1930ஆம் ஆண்டு மேலும் ஒரு பதிப்பு வெளிவந்திருக்கலாம் என்பதையே அமரர் F.X.C.நடராசா அவர் களின் நூற்பட்டியல் குறிப்பின் வழியாக அறியமுடிகின்றது.

இந்நூலின் காப்புச் செய்யுள் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

**'பூகோள மீது பொருந்து மிடப் பெயர்கள்**
**வாகான சிந்தை வசப்படுத்தப் – பூகோள**
**தர்ப்பணத்தை நற்றமிழ்ச் செயுட்டொடுத்**
**துரைத்திடற்குக்**
**கர்த்தனித்த பொற்பதமே காப்பு."**

இந்நூலின் இரண்டாம் பதிப்பு ஒரு விரிவாக்கிய பதிப்பு என்பதை 2ஆம் பதிப்பின் முகவுரை பகர்கின்றது. பூகோளத்தைச் சிற்றுருவாக்கிச் சமீபத்தில் கொண்டுவந்து காட்டும் ஒரு கண்ணாடியாக இந்நூல் பற்றி அந்நாளில் விதந்து கூறப்பட்டுள்ளதாக முகவுரையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

'சிறுபிள்ளை மணற்சோறு கறிபோலும் விளையாட்டாகப் பாடி வெளிவிட்ட 'பூகோள தர்ப்பணம்" என்னுங் காரண நாமஞ்சூடிய நமது சிறிய புத்தகம், பாலிய வாலிப வித்தி யார்த்திகளாலும், பாலதேசிகர், ஆசிரிய சிரேட்டரென்னும் பலதிறக் கலை வினோதர் களாலுஞ் சிறிதும் அசூசையின்றிச் செவிக்கின்பம் பயக்குஞ் சிறு பாலகர்களுடைய மழலை வாசகம் போல நன்கு பாராட்டப் பட்டதென்பதைக் கண்ணாரக் கண்டு, காதாரக் கேட்டு, அன்னோர்க்கு மனதார நன்றிகூர்ந்து துதி செலுத்துகின்றோம்.

'காலாந்தர சுற்றோட்டத்தில் எங்கள் இலங்கை மன்னவரும், கூடிவந்த பரிசனரும், வித்தியாகர்த்தரும் வடமாகாண ஏசன்றர் முதலிய அதிபர்களும், அங்கிலோ அமரிக்க குரவர்களும், கப்பல் மாலுமிகளும், ஏனைய துரைமக்களும் நமது பாடசாலையைத் தரிசித்து, அங்ஙனம் மாணவர் இப்புத்தகத்திலுள்ள அவ்வத்தேச இடப்பெயர்களை வினோதமாகப் பாடி முறையே படங்களிற்காட்டிப் பரிமளித்த வகைகளை வியந்து கூறியது பல்லோரறிந்த காட்சி.

'பல வருடக்காலமாய் அமெரிக்க மிஷனுக் குரிய சகல சுதேச பாடசாலைகளுக்கும் அதிபரா யிருந்து, இப்புத்தகத்தின் உபயோகத்தை நன்குணர்ந்து, எவர்க்கும் வினோதத்தை விளைவிக்குங் காரணமாக எடுத்துக்காட்டி இனிது பாராட்டிய தாதாவாகிய கனம். தொமஸ் எஸ்.சிமிதையர் (Rev.T.S.Smith) இதனைப் பெருப்பித்து மீளவும் அச்சிற் பிரகடனஞ் செய்யுமாறு தூண்டினமையானும், பாலமாணாக்கர் மனசில் பூமிசாஸ்திர அறிவை யழுத்தற் கிதுவே ஏற்ற வழிவகையெனச் சொல்லிப் பல உபாத்தியாயர்கள் வேண்டிக் கொண்டமையானும் நாமும், முன்னரே இதனை இயற்றுதற்குக் கொண்ட அபிப்பிராயத்துக்கு மிஞ்சிய அனுகூலத்தைக் கண்டமையானும், பழைய ரூபத்தை மாற்றிக் காலவிருத்திக் கேற்க, காரியாதிகளைக் கூட்டி, கலித்துறை விருத்தம் என்றமட்டில் விடாது, மாணாக்கர் பிரீதிகொண்டுபாடுதற்கேற்ற கப்பற்பாட்டு முதலிய பல வேறு பாவினங்களாக்கி இந்த இரண்டாம் பதிப்பை இயற்றினோம்".

இந்நூலில் செய்யுள்கள் பூமியின் நிலை, உண்டை வடிவம், பரிமாணம், சலனம், நாராசம் (Axix), துருவங்கள், நிர்ச்சரேகை (Equator), அட்ச தேசாந்தர ரேகைகள், கோளார்த்தங்கள் (Hemispheres), இயற்கைப் பிரிவுகள், நிலப்பிரிவுகள், கண்டம், ஒடுக்கநாடு (Peninsula), தீவு, பூச்சந்தி (Isthmus), முனை, மலை, சமநிலம், பள்ளத்தாக்கு, சலப்பிரிவுகள், சமுத்திரம், கடல், குடாக்கடல், சலசந்தி, வாவி, நதி, மனுக்குலங்கள், துறைமுகம், வாவிகள், நதிகள், ஏற்றுமதிச் சரக்குகள், இறக்குமதிச் சரக்குகள், கைத்தொழில்கள், மின் தபாலிடங்கள் (Telegraph Stations), புகைரத ஸ்தானங்கள், கச்சேரி, உபகச்சேரி, மாகாணக் கோடுகள் (District Courts), கீழ்க்கோடுகள், மாகாணங்கள், தலைநகரங்கள், வடமாகாணம், யாழ்ப்பாணம்-மணியப்பிரிவு (Maniagar Division), கோவிற்பற்றுகள், வாவிகள், பாலங்கள், வன்னி- பிரிவுகளும் நகரங்களும், மன்னார் -பிரிவுகளும் நகரங்களும், வட- மத்திய மாகாணம்- பிரிவுகளும் நகரங்களும், வடமேற்கு மாகாணம்-பிரிவுகளும் நகரங்களும், மேல்மாகாணம்- பிரிவுகளும் நகரங்களும், தென் மாகாணம் பிரிவுகளும் நகரங்களும், கீழ் மாகாணம் பிரிவுகளும் நகரங்களும், நடு

மாகாணம் பிரிவுகளும் நகரங்களும், ஊவா மாகாணம் பிரிவுகளும் நகரங்களும், சப்பிரகாம மாகாணம் பிரிவுகளும் நகரங்களும் ஆகிய உப தலைப்புகளின் கீழ் செய்யுள்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

மாதிரிக்கொரு செய்யுளாக 'வாவிகள்' பற்றிக் குறிப்பிடும் ஏழாவது செய்யுள்,

**கட்டுக்கரைக்குளம் கந்தளாய் முல்லை**
**கவின் பதுவில்**
**கிட்டுந்தனிக் கொக்கிளாயேரி மின்னெரி கீழ்மடுவாம்**
**மட்டக்களப்புடன் நீர்கொழும்பும் வெண்வனசமுகை**
**வட்டித்தெழுங் கொழும்போடு கண்டிக்குளம் வாவிகளே**

என அமைந்துள்ளது.

மேலும் ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, வட அமரிக்கா, தென் அமரிக்கா, ஓஷானியா ஆகிய கண்டங்களின் கீழும் பரிமாணம், தேசங்கள், தலைநகரங்கள், தீவுகள், குடாநாடு, மலைகள், நதிகள், என உப பிரிவுகளின் கீழும் செய்யுள்களை இயற்றி வழங்கியுள்ளார்.

தென்அமெரிக்க பரிமாணம் பற்றிய செய்யுள்

**‘மருவிடுநாலாயிரத் தெழுநூறு நீளம்மயிலாம்**
**உரைதருமூவாயிரத் திருநூறாம் ஒளிர் அகலம்**
**தரைகொள் பரப்பும் எழுபதிலட்சஞ் சதுரமைல்**
**விரைபெறு தென்னமரிக்க நற்கண்டவிசாலமதே”** என அமைகின்றது.

ஜெறிமிப் புலவரின் மொழிப் புலமையும், கவிப்புலமையும், புவியியல் விரிதளப்புலமையும் ஒன்றுசேர்ந்து பூகோள தர்ப்பணமாக எம்முன்னை சிறார்களின் கைகளில் தவழ்ந்திருக்கின்றது. இந்நூலின் பிரதியொன்று தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இந்நூல் உருவாகிய இலங்கைத் தீவில் இதன் பிரதி கிடைக்குமா என்பது தெரியவில்லை. எமக்கென்றொரு தமிழ்த் தேசிய ஆவணக்காப்பகம் ஒன்று இருந்திருந்தால் அழிவின் விளிம்பிலிருக்கும் இத்தகைய வரலாற்றுப் பிரதிகளைத்தேடிப் பாதுகாத்துவைத்திருக்கலாம்.


“ஆறொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்”

○○○

# கண்ணீர் அஞ்சலி



## முதுபெரும் எழுத்தாளர் மார்க்சிய மனிதநேயவாதி, செ. கணேசலிங்கன்



முதுபெரும் இலக்கியவாதி செ.கணேசலிங்கன் அமரரானார் என்ற செய்தி ஈழத்து இலக்கிய உலகை பெரிதும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. கணேசலிங்கன், உரும்பிராய் என்னும் கிராமத்தில் 09.03.1928 அன்று, க. செல்லையா – இராசம்மா தம்பதியரின் இரண்டாவது மகனாகப் பிறந்தவர். 1950ஆம் ஆண்டு ‘மன்னிப்பு’ எனும் சிறுகதையை எழுதியதன் மூலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமானர்.

இவரது “நீண்ட பயணம்” என்ற நாவல் 1966இல் வெளிவந்தது. இந்த நாவலுக்கு இலங்கை அரசு 1966ஆம் ஆண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசு வழங்கியது. இந்த நாவலுக்குப்பின் சடங்கு என்ற நாவலையும் செவ்வானம் என்ற நாவலையும் எழுதினார். இந்த மூன்று நாவல்களும் முப்பரிமாண (TRIOLOGY) நாவல்கள் என கைலாசபதி குறிப்பிட்டுள்ளார். கணேசலிங்கன் படைப்புகளாக 63 நாவல்களும் 9 சிறுகதைத் தொகுதிகளும் 11 சிறுவர் நாவல்களும் 20 கட்டுரை நூல்களும் வெளிவந்துள்ளன.

இளமைக்காலத்தில் இவருக்கு சினிமா படம் எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. புகழ்பெற்ற இயக்குநர் பாலு மகேந்திராவுடன் இணைந்து, கன்னட மொழியில் கமலஹாசன் நடித்த கோகிலா என்ற படத்தை எடுத்தார்.

இவரது ‘மரணத்தின் நிழலில்’ என்னும் நாவலுக்கு 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பரிசு வழங்கிச் சிறப்பித்தது. மலேசிய பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பிற்கு ஒரு பாடநூலாக ‘சடங்கு’ நாவல் வைக்கப்பட்டுள்ளது. ‘அயலவர்கள்’ நாவல் சென்னைப் பல்கலைக் கழக முதுகலைப் பட்டப்படிப்பிற்கு பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. பொதுவுடைமைச் சித்தாந்தத்தை சாதாரணமானவர்களும் படித்து புரிந்து கொள்ளும் வகையில் குமரனுக்கு கடிதங்கள், குந்தவிக்கு கடிதங்கள், எனும் தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளார்.

ஈழத்து இதழியல் வளர்ச்சியில் செ.கணேசலிங்கனுக்கு முக்கிய இடமுண்டு. இவரது ‘குமரன்’ இதழ் 1979ஆம் ஆண்டு முதல் வெளிவந்தது. இச் சஞ்சிகையின் 77 இதழ்களும் பின்னர் தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது.

இவர், குமரன் பதிப்பகம் மூலம் நூற்றுக்கணக்கான நூல்களை தமிழ்நாட்டிலும், கொழும்பிலும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். கணேசலிங்கன் 1980களின் பிற்பகுதியிலிருந்து தமிழகத்தில் சென்னை நகரில் வசித்து வந்தார். இவர் 04-12-2021 அன்று அமரரானார்.

○ ○ ○

# ஒரு கைம்பெண்

அவள் ஒரு நொண்டி வாத்து
கணவனால் சபிக்கப்பட்ட
துரதிஷ்டசாலியாகவே வாழ்ந்தாள்

அவளுடைய மங்கள சூத்திரம்
அவளைப் பரிகசித்தபடி கழன்றது
அவள் வலப்புறத்தில் பூமி புதைந்தது
பாதி வானம் நிலத்தில் விழுந்தது
அவள் ஒரு மணற்சிற்பம் ஆனாள்

நீர் நிறைந்த கண்முட்களில்
ரோஜாக்கனவு இதழ்கள் விழும்
வெளிறிப் போன நிலவு அவள்
அவள் குழந்தை இறந்தபோது
நிலவால் சுற்றப்பட்டது
சீவியத்துக்கு
தொழிற்சாலை போன்ற பணிமனையில்
யந்திரமாய் அவள்

கணவனின் காவலிழந்த அவள்
இப்பொழுது பொது வெளியில்
மந்திரிக்கப்பட்ட நூல்களும்
ராக்கிகளும்
வெறும் கண்டனங்களாகின்றன

பணிமனைக் கடிகாரத்தின்
முள் துரத்தும் ஒவ்வொரு கணமும்
அக்கினிப் பரீட்சையில் தேறுகிறாள் அவள்
பாலைவனம் போன்ற பணிமனையில்
இளமை வீணாகும் ஒவ்வொரு நிமிடமும்
அவள் ஓர் எளிய இலக்கு


வீடு, வீதி, விரையும் நகரப் பேருந்து
பணிமனையில் எல்லோருக்கும் ஏவலாள்
மாலையில் வீட்டிலும் அதே நிலைமை
அவள் பணிக்கு
கடலாய்க் கரிக்கும் கண்ணீருக்கு
ஒரு பதிவும் கிடையாது
சக பணியாளப் பாம்புகளுக்காக
அவள் நெஞ்சில் நஞ்சு நிரம்பியுள்ளது
ஞாயிற்றுக் கிழமைகளிலும்
அவளைச் சிலுவைகளில் ஏற்றுகின்றன
செத்த கணவனை மீட்டுவர
அவள் சாவித்திரியல்ல
பறந்து செல்ல
அவளிடம் மந்திரப் பாதங்கள் இல்லை
அவள் மடியில்
பூகம்பங்கள் உறங்குகின்றன

கணவனோடு உடன்கட்டை ஏறி
எரியுண்டு போவது
ஒரு சமுதாயச் சீர்கேடு

ஒவ்வொரு படியிலும்
வேதாளம் விடுக்கும் புதிருக்கு
அவள்
விக்கிரமாதித்தனின்
சாமர்த்தியமான விடையாகிறாள்.

தெலுங்கு மூலம் : சாரிகொண்ட நரசிம்ம ராஜு
ஆங்கில வடிவம் : MO தமிழாக்கம் : சோ.ப

## கண்ணீர்-அஞ்சலி — அமரர் பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் குடும்பத்திலும் நயினை வரகவி நாகமணிப் புலவர் பரம்பரையிலும் உதித்தவர் நாகேஸ்வரன். இவர் நயினாதீவு கனகசபாபதி – கோகிலாம்பாள் தம்பதியின் மூத்த புதல்வனாக 05–08–1952இல் பிறந்தவர்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத்தில் கலைமாணி சிறப்புப் பட்டத்தை 1979இல் பெற்றவர். அதன்பின் முதுகலை மாணிப் பட்டத்தை 1988இல் பெற்றவர். பேராதனைப் பலகலைக்கழகத்தில் 2008ஆம் ஆண்டில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்.

1972இல் இவரது எழுத்துப்பணி ஆரம்பமாகியது. ஈழத்தில் வெளிவரும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் சிறப்புமலர்களிலும் இவரது ஏராளமான கட்டுரைகள் விமர்சனங்கள் ஏனைய ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. 1986ஆம் ஆண்டு முதல் 1996வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றியவர். அதன்பின்னர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மொழித்துறையில் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளராகவும் இணைப்பாளராகவும் பணியேற்றார். பதவி உயர்வு பெற்று பேராசிரியரானார்.

முத்தமிழிலும் பாண்டியத்தியமும் திறமையும் கொண்ட இவர், சமயச் சொற்பொழிவாளர், கதாப்பிரசங்கக் கலைஞர், பண்ணிசையுடன் திருமுறைகளைப் பாடவல்லவர், வில்லிசைக் கலைஞர், நாடக நடிகர் எனப் பன்முக ஆளுமை மிக்கவர். அத்தோடு தமிழ்க்கவிதை, கட்டுரை, விமர்சனம், மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர். இவர் பெற்றுக் கொண்ட பட்டங்கள் ஏராளம். இவற்றில் வாகீச கலாநிதி, அருள் மொழிச் செல்வர், அருட்கலை மாமணி, சித்தாந்த பண்டிதர், செஞ்சொல் வாரிதி போன்றன குறிப்பிடத்தக்கவை.

பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் 14–12–2021 அன்று அமரரானார்.

# நவீனமேலைத்தேய மெய்யியல் வரலாற்றில் மத்தியகாலத்தின் செல்வாக்கு

மெய்யியல் வரலாற்றிலே முக்கிய இடத்தினை வகிக்கும் மத்தியகாலத்தை எடுத்துக்கொண்டால், அது இருண்டகாலம் என அழைக்கப்படுகின்றது. இக்காலத்தில் அறிவு, விஞ்ஞான வளர்ச்சிக்கு இடம்கொடுக்காமல் சமயக்கருத்துகளுக்கும், சமய சிந்தனைகளுக்கும் இடம்கொடுத்த காலமாகக் காணப்படுகின்றது. எனினும் இக்காலத்திலும் நவீன மெய்யியலுக்கான அடித்தளம் இடப்பட்டமையினை காணக்கூடியதாக இருக்கின்றது. அந்தவகையில் கிறிஸ்தவத்தின் எழுச்சி மெய்யியலை முற்றிலும் சமயத்தோடு இணைத்து மத்தியகால மெய்யியலுக்கு வித்திட்டதாகக் காணப்படுகின்றது. உரோமப் பேரரசின் வீழ்ச்சியை ஒட்டி நவீனகால தோற்றம் (கி.பி. 14ஆம் நூற்றாண்டு) வரையான காலகட்டத்தை மத்தியகாலமாக வரையறை செய்யலாம். படைப்பு, விசுவாசம், உண்மை ஆகிய அம்சங்கள் முதன்மையாகக் கொண்ட மத்தியகால மெய்யியல் சமயத்திலிருந்து பிரிக்க இயலாததாக இருந்தது. தொன்மை மெய்யியலின் கருத்துக் கூறுகள் உள்வாங்கப்பட்டு பொருள் முதல்வாத சிந்தனைகள் பின்தள்ளப்பட்டன. அந்த அடிப்படையில் சமயத்தின் பணியாளியாக மத்தியகால மெய்யியல் செயற்பட்டது.

மேலும், மற்றைய காலங்களில் வாழ்ந்த சிந்தனையாளர்கள் மனிதனின் பகுத்தறிவிற்கும், விஞ்ஞானத்திற்கும் முக்கியத்துவம் வழங்கினர். ஆனால் மத்தியகாலத்தில் இவைகள் புறக்கணிக்கப்பட்டதுடன் இக்காலத்தில் சமயத்திற்கும், சமயத் தலைவர்களுக்கும் முக்கியத்துவமும் ஆதரவும் கொடுக்கப்பட்டிருந்தது. எல்லாம் இருளில் மூழ்கியது போல மெய்யியற் சிந்தனைகளும் இருளில் மூழ்கியதால் மத்தியகாலத்தை இருண்டகாலம் என அடையாளப்படுத்துவர். எனவே, இக்காலத்தில் மெய்யியல் வளர்ச்சி தடைப்பட்டது, மெய்யியற் சிந்தனைகளை வீழ்த்தியும், சிறைப்படுத்தியும் சமயம் பிரதானம் பெற்றது.

இலக்கியம், கலை, பண்பாடு, நாகரீக சிந்தனை, வாழ்க்கைநிலை ஆகியன சமயத்திற்குள் முடங்கிப்போன காலமாக காணப்படுகின்றது. அரசா? சமயமா? மண்ணுலகா? விண்ணுலகா? போப்பாண்டவரா? உடலா? உயிரா? போன்ற கேள்விகள் எழுந்தன. மெய்யியல் தேவாலயத்திற்குள் புகுந்திருக்கும் ஒன்றாகக் கருதப்பட்டது. மேலும், இவர்களின் நோக்கம் உண்மைகளை தேடிக்கொள்வதல்ல மாறாக தேவாலயத்தினால் உண்மை என ஏற்றுக்கொண்டவற்றை தெளிவுபடுத்துவதாகக் காணப்பட்டது. அத்துடன், மனித அறிவானது உண்மையைத் தேட வேண்டுமென்ற அவசியம் இல்லை எனவும் கடவுள் ஒருவரினாலேயே தேவவாக்கியம் வெளியிடப்படுகின்றது என்ற கருத்தும் மேலோங்கியது.

இவ்வாறான உண்மைகளை சந்தேகம் கொள்வதோ, வினா எழுப்புவதோ தண்டனைக்குரிய குற்றம் என கருதப்பட்டது. இதனை மீறுபவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. புருனோ என்பவர் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தமையினால்



**புலேந்திரன் நேசன்**
மெய்யியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

சிறையிலிடப்பட்டார். கலிலியோ கலிலி தனது கண்டுபிடிப்பை முன்வைத்தமையினால் அவர் திருச்சபைக்கு முரணான கருத்துக்களை முன்வைத்தவர் எனக் குற்றம் சாட்டப்பட்டார். இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்ற போதும் மத்தியகாலமே நவீனகாலம் அறிவொளிக் காலமாகத் திகழ வித்திட்டது என்றால் அது மிகையாகாது. இந்த அடிப்படையில் மத்தியகால சிந்தனையாளர்களின் கருத்துக்கள் நவீனகாலத்தில் புதிய கருத்துக்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது.

மத்தியகாலத்தை சேர்ந்த இஸ்லாமிய சிந்தனையாளரான அல்கிந்தி இவர் எல்லாத் தொன்மை விஞ்ஞானங்களிலும் அறிவு பெற்ற வராகக் காணப்பட்டார். அந்த அடிப்படையில் பொருள்களின் யதார்த்தம் தொடர்பான அறிவைப் பெறுதல் நாஸ்தீகவாதம் என்று கூறப்பட்ட கருத்தை நிராகரித்து அவ்வாறு கூறியவர்களை சமயவாதிகளல்ல சமயவியாபாரிகள் என கண்டித்ததன் மூலமாக அறியமுடிகின்றது. மேலும் ஒன்றுமில்லாததிலிருந்து இவ்வுலகம் படைக்கப்பட்டது என்று முஸ்லிம் இறையிய லாளர்கள் விவாதிப்பதற்குக் கூட மெய்யியல் அறிவு அவசியம் எனக்கூறியதன் வாயிலாக இதனை அறியக்கூடியவாறு அறிவு ரீதியாக ஆராய முற்பட்டனர். மேலும் தோமஸ் அக்கு வைனஸ் கடவுள் இருப்புப் பற்றிக் கூறிய கருத்துக்களிலிருந்து அறிவாராய்ச்சியலின் செல்வாக்கினைக் காணக்கூடியதாக இருக் கின்றது. அந்தவகையில் எல்லாவற்றையும் ஆய்வறிவால் அறியவோ, மறுதலிக்கவோ முடியாது என்று கூறினார் ஆய்வறிவால் எல்லைக்கும் அப்பாற்பட்ட உண்மையுண்டென நிரூபித்து மூல இயக்கக் காரணவாதம், காரண காரியவாதம், உள்பொருள்வாதம், பயன்வழிவாதம், இறுதி இயக்க காரணவாதம் என்பவற்றை முன்வைத்தார்.

இவரின் காரணகாரியவாதமே பின்னர் டேவிட்கியூமின் காரணகாரியக் கொள்கைக்கும், இன்மானுவெல்காண்டின் உள்பொருள்வாதக் கருத்துக்களுக்கும் வழிவகுத்ததாகக் கூறப் படுகின்றது.

மேலும் அன்சலத்தின் அறிவாராய்ச்சி யலுக்கான பங்களிப்பினை எடுத்து நோக்கு கின்றபோது நம்பிக்கை, பகுத்தறிவுக்கு எதிரானது என்றும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லா தவை என்றும் கருத்து நிலவிய காலத்தில் நம்பிக்கையும், பகுத்தறிவும் முரணானவை அல்ல நம்பிக்கையே அறிவின் முதற்படி என்று கூறியதன் வாயிலாக அறியமுடிகின்றது. மேலும் இக்காலத்தில் வாழ்ந்த இப்னூ சீனா புலன்களை தவறான பாதையில் கொண்டு செல்வதிலிருந்து பாதுகாக்க அறிவு, தர்க்கம் என்னும் ஆயுதங்களை திறமையாக பயன்படுத்துவதனைப் பற்றி தத்துவவியலில் வலியுறுத்துவதன் ஊடாகவும் மத்தியகாலம் இருண்டகாலம் சமயத்தின் பிடியில் இருந்த காலம் எனக் கூறப்பட்டாலும் அறிவாராய்ச்சியலுக்கான காரணிகள் காணப் பட்டதனை அறியக்கூடியதாக இருக்கின்றது.

மத்தியகாலத்தைத் தொடர்ந்து நவீன காலத்தில் மக்கள் சுதந்திர சிந்தனையைப் பெற்றிருந்தனர். மரபுகளுக்கும், பிராமணங் களுக்கும், அதிகாரங்களுக்கும் எதிரான கிளர்ச்சிகள் தோன்றின. மறுமலர்ச்சி வாதத் தினரும், சீர்திருத்த வாத்தினரும் ஆழமான கருத்து வெளிப்பாடுகள், அறிவு சீர்திருத்தம், சுதந்திர சிந்தனை என்பன இன்னும் பிரகாரம் உண்டாகி இருந்தன. தேவாலயத்திற்க்கும், அரசிற்குமிடையில் ஏற்பட்ட அரசியல் நெருக் கடியில் உருவான பிரச்சினை அதற்கு சார்பாக தீர்க்கப்பட்டது. அரசியல் யாப்பு ஜனநாயக நிறுவனங்கள் என்பன அரசியல் கலந்துரையாடல் களுக்கு உள்ளாகிக் கொண்டிருந்தன. இதேவேகம் பொருளாதாரத்திலும் வெளிப் பட்டன. அடிமைமுறை விதிமுறைகளும் படிப் படியாக மறைந்தன. தனிநபர் சுகந்திரமாக தமது பொருளாதார நடவடிக்கையை மேற் கொண்டனர்.

இந்த அடிப்படையில் மத்தியகாலத்தில் பலரினது சிந்தனைகள் சமயத்தின் பிடியில் முடக்கப்பட்டிருந்தாலும் இக்காலமே நவீன காலத்தில் பல்வேறுபட்ட கண்டுபிடிப்புக்களும், ஆராய்ச்சிகளும் இடம்பெற வழிவகுத்த காலமாகக் காணப்பட்டது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

❍❍❍

இறுங்கதை (நாட்டு நடப்பு)

# அந்தநாள் ஞாபகம்

கால் கடுக்கிறது. வரிசையில் இடம் பிடித்து மூன்று மணித்தியாலம் ஆகிறது. ஏனையோரின் ஒத்துழைப்புடன் அவ்வப்போது சிரம பரிகாரம்; அவர்களது நிலையும் அதேதான். சிலர் ஜோக் அடிக்கின்றனர், சிலர் அழுமூஞ்சியுடன்.

“காஸ் சிலிண்டர் இல்லையோ சமையல் இல்லை. இல்லையெண்டா சாப்பாட்டுப் பார்சலோட வாரும்,” மனைவியின் எச்சரிக்கை காதில் சங்கூதுகிறது. சாப்பாட்டுப் பொதியின் கட்டணம் கையை மீறுகிறது. அதுதான் போகட்டும், உணவின் அளவிலும் கறிகளின் எண்ணிக்கையிலும் வஞ்சிப்பு.

கிடைக்கும் மரக்கறிகளைக்கொண்டு வாழ்க்கையை ஓட்டும் முடிவில் பல்லைக் கடித்தபடி வரிசையில் நிற்கிறேன். சிலிண்டரின் எண்ணிக்கையும் குறைந்து வர மனதில் கிலி பிடிக்கிறது. அதிஸ்டவசமாக ஒன்று கிடைக்கவே உற்சாகமாக வீடு திரும்புகிறேன்.

அங்கே அடுத்த அதிர்ச்சி காத்திருக்கிறது.

“அது வேண்டாம். அதை எங்கையாவது பாதுகாப்பான இடத்தில வச்சிட்டு உடனடியா ஏதாவது மின்னடுப்பு இல்லாட்டி சூட்டடுப்பும் விறகுமாவது வாங்கி வாங்க,” ஒரு சொட்டுத் தேநீராவது தராது நெஞ்சில் சற்றேனும் ஈரமின்றி வெளியே விரட்டுகிறாள் ஆத்துக்காரி.

“உனக்கென்ன தலைகிலை பிசகிப்போச்சே? இவ்வளவு நேரமும் கால் நோக நிண்டு வந்திருக்கிறன். கலைக்கிறாய்,” சத்தமிடுகிறேன் நான்.

“பேஸ்புக் பேஸ்புக்கெண்டு உலகத்தை மறந்துபோய் இரும். நியூசைப் பாத்து நான் விறைச்சுப்போய் நிக்கிறன். காஸில கலப்படமாம். காஸ் எரிஞ்சு எத்தினை வீடு சேதமாயிருக்கு எத்தினை ஆக்களுக்குக் காயம். காஸ் வேண்டாம். ஓடும் ஓடும் சாப்பாடு வேணுமெண்டா என்னவாவது வாங்கி வாரும்.”

நாட்டு நிலைமை காரணமாக எல்லா அடுப்புகளுக்கும் தட்டுப்பாடு. தெரிந்த நண்பர்களின் உதவியுடன் ஒரு ஹொற்பிளேற்றுடனும் சூட்டடுப்புடனும் விறகுக் கட்டுடனும் வெற்றியோடு வீடு திரும்புகிறேன்.

மனைவி சமைக்க ஆரம்பிக்க அவள் அடுப்பூதும் அழகை இரசித்தவாறு நிற்கிறேன்.

“பொண்டாட்டியின்ர அழகை ரசிச்சது போதும். வந்து அடுப்பூதும்,” கலங்கிய கண்ணைக் கசக்கியவாறு ஆணையிடுகிறாள் மனைவி.

”அலையலையெண்டு அலைஞ்சிட்டு வந்திருக்கிறன். ராட்சசி,” என்று மனசுக்குள் திட்டியவாறு அடுப்பூத ஆரம்பிக்கிறேன்.

வரலாறு திரும்புகிறது. இளம் வயதில் அம்மா என்னைச் சமைக்க விடாவிட்டாலும் அடுப்பூதித் தேநீர் போட அனுமதித்ததுண்டு. எங்கள் வீட்டுக்கு வரும் கதிரேசன் மாமாவுக்கு கொதிக்கக் கொதிக்கத் தேநீர் வேண்டும். எனது தேநீரில் சூடு போதாது என்று என்மீது குற்றம் சுமத்தியதில் ஆத்திரமுற்று ஒருநாள் தண்ணீரை நன்கு கொதிக்க வைத்து மூக்குப் பேணியில் ஊற்றிய தேநீரை வெகு அவதானமாக பழந்துணியால் மூடிப்பிடித்து அவரிடம் சேர்க்க, அண்ணாந்து வாயில் தேநீரை ஊற்றிய அவர் ஐயோ என அலறியது ஞாபகத்துக்கு வர நான் என்னை அறியாமலே சிரிக்க ஆரம்பிக்கவும் கனிவுடன் என்னை நோக்கும் மனைவி அருகே குந்தி எனது முதுகை மெதுமெதுவாக நீவி விடுகிறாள்.



அதுபோதும், அடுத்த பாய்ச்சலுக்கு ஐயா தயார்.

**வே.தில்லைநாதன்**

# ‘சாந்தன் படைப்புலகம்’ தொகுப்பு — ஓர் அறிமுகம்


-பரன்-

“இந்த மண்ணின் அரைநூற்றாண்டு சரித்திரத்தின் இலக்கிய சாட்சியாக அமைபவை சாந்தனின் படைப்புக்கள்” என்ற முகவரியுடன் வெளிவந்துள்ளது, ‘சாந்தன் படைப்புலகம்’ என்ற புதிய தொகுப்பு. வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டுத்துறை, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் இத்தொகுப்பு இவ்வருடம் வெளியிடப்பட்டுள்ளது.

படைப்பு என்பது ஒருவகைத் தவம் என்பார், ‘என் கதைகளைப் பொறுத்தமட்டில், எனக்கு எப்போதும் ஒரு திருப்தி இருந்துகொண்டதான் இருக்கிறது. எனக்குச் சரியென்று பட்டவற்றை, நான் விசுவாசிக்கிறவற்றை - எவருக் காகவும், எதற்காகவும், எப்போதும், நெகிழ்த்திக் கொள்ளாமல் - அவை சொல்லிக் கொண்டிருக் கின்றன’ என்கிறார் சாந்தன். அதனால்தான் போலும் சாந்தனின் படைப்புகளில் வருகின்ற சொற்களும் வசனங்களும் அவரது படைப்பினை எமக்கு அணுக்கமாகக் கொண்டுவருகின்றன. தேவையற்ற வசனங்களையோ, சொற்களையோ சாந்தனின் படைப்புக்களில் காண்பதரிது. அந்தக் கட்டிறுக்கமான வசனங்கள், வாசகர் மனதில் ஓர் அருட்டலை ஏற்படுத்திவிடுகின்றன. உண்மையில், அதுதானே ஒரு படைப்பின் மகிமை. சாந்தன் படைப்புலகம் என்ற இத்தொகுப்பு, அத்தகைய மனக்கிளர்வுகளை ஒருசேர வாசகர்கட்குத் தந்து அவர்களைச் சிந்திக்க வைத்துவிடுகின்றது.

## உருவம்

இந்நூல், சாந்தனின் படைப்புக்களில் ஏறக்குறைய அரைப்பங்கிற்கு மேலாகத் தன்னுள் அடக்கியுள்ளது எனலாம். அமைச்சின் செயலாளர், திரு. இ.இளங்கோவன், தனது வாழ்த்துச் செய்தியில், ‘இன்று கிடைப் பதற்கு அரியனவாக உள்ள சாந்தனின் படைப்புக்களைத் தொகுத்துப் பெருந் தொகுப்பாகக் கொண்டுவருவது, காலத்தின் தேவை’ என்று குறிப்பிடுகிறார். அவ்வாறே, யாழ் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை சிரேட்ட விரிவுரையாளர், திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன், தனது பதிப்புரையில், ‘முழுமையாகத் தொகுக்கப் படும்போதே சாந்தனது ஆளுமையின் குறுக்கு வெட்டுமுகத் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், அவரது பல்துறை ஆளுமையின் விகசிப்பினையும் புரிந்துகொள்ளமுடியும்’ என்று கூறுகிறார்.




“வடபுலத்துப் பண்பாட்டம்சங்களைப் பேணிப் பாதுகாத்தல், பயில்நிலையில் வைத்திருத்தல், ஆவணப்படுத்துதல், அவற்றை எதிர்காலச் சந்ததிக்குக் கடத்துதல் என்ற அடிப்படையில் ஆக்க இலக்கியங்களையும் ஆவணப்படுத்தி. எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிப் பதற்காகவே ‘சாந்தன் படைப்புலகம்’ வெளியிடப் படுகிறது” என பிரதிப்பணிப்பாளர் திருமதி. சுஜீவா சிவதாஸ் தனது வெளியீட்டுரையில் குறிப்பிடுகின்றார். மேலும், “இந்நூலானது யாழ்ப்பாணச் சமூகத்திற்கு மட்டுமல்லாது உலகெங்கிலும் வாழும் மனிதகுலத்திற்கு எமது பண்பாட்டைப் பறைசாற்றி நிற்கும் என்பதுடன் ஆய்வுத்தேடலுக்கான அருமருந் தாகவும் அமையும்” என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

சிரேட்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன், வலி. தென் மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர், தக்சாயினி செல்வகுமார் என்போரின் பெருமுயற்சியின் பயனாக இத்தொகுப்பு வெளிவந்துள்ளது. வாழ்த்துச்செய்தி, வெளியீட்டுரை, பதிப்புரை, இணைப்பதிப்பாசிரியர் உரை, ஆசிரியருரை, பொருளடக்கம் என 35 பக்கங்களையும், அறிமுகங்கள், சாந்தன் ஆக்கங்கள் என 938 பக்கங்களையும் கொண்டு பிரமிப்பூட்டும் ஒரு பெட்டகமாக இது வெளிவந்துள்ளது. அதிக பக்கங்கள் கொண்ட இத்தொகுப்பில், ஆசிரியர்

உரை ஒரு பக்கந்தான் என்பது, இங்கு ஒரு சுவையான விடயம்.

இந்நூலுருவாக்கத்திற்கான அனுமதி யையும் நிதியுதவியையும் வழங்கிய வடக்கு மாகாண பிரதம செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் பணி விதந்து பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

தொகுப்பு என்பது ஒரு பாரிய முயற்சி. இத்தொகுப்பாக்கத்தின் மூலவேராக இருப்பவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை சிரேட்ட விரிவுரையாளரான திரு. ஈஸ்வரநாத பிள்ளை குமரன். தேர்ந்தெடுத்துள்ள சாந்தனின் படைப்புகள், சாந்தனின் முழுப்பரிமாணத்தையும் வெளிப்படுத்த வல்லன. 1960களின் பிற்பகுதியில் இருந்து ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து எழுதி வருபவர், சாந்தன். அதுவும், தமிழில் சிறுகதை, நாவல், குறுங்கதை, தெறிப்புக்கதைகள், நெடுங்கதை, குறுநாவல், அ-புனைவுகள், கட்டுரை என பல ஆக்கங்களையும், ஆங்கிலத்தில் மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் கவிதை நூலொன் றையும் மூன்று நாவல்களையும் எழுதிக்குவித்தவர் அவர். அவற்றில் பெரும்பகுதி, இத்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது தினக்குரல், மகுடம், ஞானம், ஆகிய சஞ்சிகைகளுக்கு சாந்தன் வழங்கிய நேர்காணல்களையும் இத்தொகுப்பில் காணலாம். அத்துடன், நீல பத்மநாதன், கலாநிதி சபா ஜெயராசா, எஸ்.இராமகிருஷ்ணன் முதலியோரின் விமர்சனங்கள், பேராசிரியர் க. கைலாசபதி, அசோகமித்திரன், கவிஞர் இ.முருகையன், கே.எஸ்.சிவகுமாரன் உட்பட பலரது பார்வைகள் என்பனவும் தொகுப்பின் அங்கங்களாக உள்ளன.

தொகுப்பின் 'அறிமுகங்கள்' பிரிவில், "2019ஆம் ஆண்டுக்கான சாகித்ய ரத்னா விருது பெற்ற ஈழத்தின் இருமொழி இலக்கியச் சாதனையாளர்" என்ற தலைப்பில் ஞானம் ஆசிரியர் திரு. தி. ஞானசேகரன், எழுதிய கட்டு ரையும், "சாந்தனின் ஆங்கில எழுத்துக்கள்" என்ற தலைப்பில் யாழ் பல்கலைக்கழக சிரேட்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. இவை, சாந்தனின் ஆரம்பகால எழுத்திலிருந்து இற்றைவரை அவர் எழுதிய தமிழ், ஆங்கில ஆக்கங்கள், பெற்ற விருதுகள், பட்டங்கள் என யாவற்றையும் தொகுத்துத் தந்துள்ளன.

விடயங்களின் பகுப்புமுறை, நேர்த்தியான ஒழுங்கமைப்பு, என்பவற்றுடன் தொகுப்பின் ஒட்டுமொத்த வடிவமைப்பும் மனதைக் கவர்கிறது.

**பதிப்புரை**

தொகுப்பாளரான, சிரேட்ட விரிவுரையாளர், திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரனின் விரிவான இருபது பக்கப் பதிப்புரை, இத்தொகுப்பிற்கு மேலும் அழகு சேர்க்கிறது. சாந்தனின் படைப் புலகம், இலக்கியக்கொள்கை, கருத்துநிலை, கலைத்துவம், என்பன குறித்த ஆழமான பார்வையை அவர் எம்முன் வைக்கிறார். 'தொகுப்பின் விரிவஞ்சி, சில படைப்புக்களின் சில பகுதிகள் மட்டுமே பதச்சோறாகத் தரப் பட்டுள்ளன' என்று கூறும் அவர், பிறிதொரு தொகுதியும் வரவிருப்பதாகத் தெரிவிக்கின்றார். இருபது பக்கங்களிலான பதிப்புரை, இத்தொகுப்புக்குள் நுழைவதற்கான ஒரு திறவு கோலாக அமைந்துள்ளது.

**வேறு**

சாந்தனின் நேர்காணல்கள், ஓர் எழுத்தாளு மையின் உள்ளக்கிடக்கையை வெளிப் படுத்துபவை. மஹாகவியின் (உருத்திரமூர்த்தி) கவிதைகள் போல எம்மனதில் கிடந்து உழன்று எம்மைச் சிந்திக்க வைப்பவை. உதாரணத்துக்கு, நேர்காணல்களின் சில பகுதிகளை இங்கு குறிப்பிடலாம்.

**கேள்வி: இன்றைய மொழிவழக்கு எப்படி?**

பதில்: இலங்கைத் தமிழ் கூர்ப்படையாமல் உறைந்துபோய்விட்டது என்று சிங்கப்பூர் எழுத்தாளர் ஒருவர், தமிழகச் சஞ்சிகை ஒன்றில் அண்மையில் கருத்துக் கூறியிருந்தார். அந்த அபத்தம் ஒருபுறம் இருக்க, எமது தமிழிலும் தேய்மானம் தென்படத் தொடங்கியுள்ளது என்பது கவலை தருகிறது. சொற்பிழைகள், வசனப்பிழைகள், உச்சரிப்புப் பிழைகள் எல்லாம் ஊடகங்களில்கூட முன்னெப்போதும் இல்லாதவாறு இடம்பெறுகின்றன. இளம் தலைமுறையினரை அது பெரிதும் பாதிக்கும்.

**கேள்வி: ஏன் பிரஜை என்ற சொல்லைப் பயன்படுத்துகிறீர்கள்?**

பதில்: ஏற்கனவே வழக்கில் இருக்கும் சொற்களை அகற்றும்போதும் புதியவற்றைப்

புகுத்தும்போதும் குழப்புதல் கூடாது. இப்போது பிரஜைக்குப் பதிலாக “பொதுமகன்” என்று எழுதுகிறார்கள். இதன் பெண்பால் என்ன?

**கேள்வி: யாழ்ப்பாணச்சமூகம் இப்போது எப்படி இருக்கிறது?**

பதில்: பெருங்காயம் இருந்த பானையாக இருக்கிறது. மாறும் விழுமியங்கள். சமூகத்துடனோ அறிவுடனோ தொடர்பில்லாத கல்வி, பணவீக்கம் போல பட்டம் பதவி வீக்கங்கள், வெற்றுச் சடங்குகளாயும் வைதிக மீட்பாயும் ஒலிபெருக்கி ஓலங்களாயும் மாறிவிட்ட சமயம்.... பல வேளைகளில் எலியட்டின் ‘த ஹொலோ மென்’ என்ற கவிதையை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பதில்களைப் பார்க்கும்போது, இன்று பெண் கவிஞர்களை ‘கவிதாயினி’ என்று அழைக்கையில், அதன் ஆண்பால் என்ன என்று என் மனதில் ஒரு கேள்வி எழுந்தது. அத்துடன் இன்றைய ஒலி ஒளி ஊடகங்கள் பற்றியும் இளைஞர்களின் சிந்தனை பற்றியும் சாந்தனுக்குத் தீர்க்கமான கருத்து உண்டு என்பதையும் அவை புலப்படுத்துகின்றன.

சாந்தனின் படைப்புக்கள் பலவற்றை நான் வாசித்திருந்தாலும், அவரை முழுமையாக எனக்கு இனங்காட்டியவர், சோவியத் தகவல் நிலையத்தில் அவருடன் பணிபுரிந்த, எனது நண்பர் திரு. இராஜகுலேந்திரன் அவர்களே. அவர் சாந்தனின் பல நூல்களை எனக்கு வாசிக்கத் தந்ததுடன், அவரது ஆளுமை பற்றிய புரிதலையும் ஏற்படுத்தினார். இத்தொகுப்பும் சாந்தன் பற்றியும் அவரது படைப்புலகம் பற்றியும் தெளிவானதும் விரிவானதுமான ஒரு புரிதலை உருவாக்கும்.

சாந்தன், இத்தொகுப்பிலுள்ள நேர்காணல் ஒன்றில், ‘பாரதியின் விண்டுரைக்க அறிய.... என்ற ஒரு பாடல் உண்டு. அதுதான் என் உணர்வும் அறிவும்’ என்று குறிப்பிட்டுள்ளார். சாந்தன் தனது ஆசிரியருரையிலும் பாரதியின் அக்கவிதையைத் தந்துள்ளார் என்பதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

**விண்டுரைக்க அறிய அரியதாய்**
**விரிந்த வான வெளியென நின்றனை**
**அண்ட கோடிகள் வானில் அமைத்தனை**
**அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை**
**மண்டலத்தை அணு அணுவாக்கினால்**
**வருவதெத்தனை அத்தனை யோசனை**
**கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை**
**கோலமே நினைக் காளியென்றேத்துவேன்**

‘வாழ்தல், வாசித்தல். எழுதுதல் என்ற மூன்றுந்தான் ஒருவனை எழுத்தாளன் ஆக்குகின்றன. வாழ்தல் என்பது இருத்தல் அன்று....’ என்ற அவருடைய வாக்குமூலம் இத்தொகுப்பினால் மெய்ப்படுகிறது.

❍❍❍

## தனிப்படங்கள் - ஜெ.ஈழநிலவன்

வீட்டின் பின்புறம்
அடர்ந்த வனம்போல்
கிடக்கும்.

முதுகின் மயிர்போல்
முகம்பாரற்ற பூவது.

அவள்
பெரியமனிசி ஆவதற்கு முன்
அதன் நிழல்நீரில்
கதகதப்புடன் நீச்சலடிப்பாள்.

அம்மாவின் கூக்குரலுக்கு
அதையே சாட்சி வைத்தாள்.

குழந்தை தனம் கடந்து
கணவனின் உலகத்தில்
கால் வைத்த நாளில்
புது வீடு
புது மரம்
புது நொடி
புது நேசம்
புது துயரம்
புது நிகழ்வு எல்லாம் மாறிப்போனது.

ஆகாதா பூவாய்
போகும் பூக்களுக்கு
ஆகாதா அலரிப்பூ
கடலென விரியும் கண்ணில்
ஒற்றை பூவென
ஒரு விதையை பரிசளித்தது

தற்கொலை.

# தமிழ் பேசும் முஸ்லிம்களின் நிலை என்ன?

“ஞானம்” துவக்கிவிட்ட ‘இலக்கணத்தமிழா – பேச்சுத்தமிழா?’ என்ற கருத்துப் பரிமாற்றம் தொடர்பாக, “ஞானம்” 259ஆவது இதழில் ‘இலக்கணத் தமிழைக் காப்போம்’ என்ற தலைப்பில் சகோதரர் கலைமாமணி கா. தவபாலன் ஆக்கப்பூர்வமான சில நல்ல கருத்துக் களை வாசகராகப் பேசினார். கடைசியாகக் கூறிய அவரின் இருவரிகள் (“உலகத் தமிழர்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்க் கல்வியாளர்கள் அதிகமாக வாழும் பிரதேசம் இலங்கையின் வடகிழக்குப் பிரதேசங்களும் மலைநாடும் ஆகும் என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்த வேண்டும்.”) மனங்களை சிணுங்கச் செய்தன. தமிழ்ப் பேசும் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமைப்பட வேண்டும், முஸ்லிம்களின் பிரச்சினைகளை தமிழர்கள் பேசுவது போல, தமிழர்கள் பிரச்சினைகள் பற்றி முஸ்லிம்களும் பேசவேண்டும் என எதிர்பார்க்கப்படும் இக்காலக் கட்டத்தில், நாலு விஷயங்களையும் நல்லபடியாக அறிந்த நல்லவர்கள் இப்படிச் செய்யலாமா? அப்படி என்னதான் செய்து விட்டார்?

வடக்கில் பண்டு தொட்டு தமிழ்ப்பேசும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்ந்து வந்தனர். இப்போது 31 வருடங்களுக்கு முன் முஸ்லிம்கள் வடக்கிலிருந்து விரட்டப்பட்டு விட்டனர். கிழக்கில் முஸ்லிம்கள் கணிசமானளவு வாழ்கின்றனர். மலையகத்தில் ஓரளவு முஸ்லிம்கள் வாழ்கின்றனர். வடகிழக்கு, மலையகம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் முஸ்லிம்கள் கணிசமானளவு வாழ்கின்றனர். இவர்களும் தமிழையே பேசி – வளர்த்து வருகின்றனர். இவர்களை சகோதரர் கலைமாமணி கா. தவபாலன் குறிப்பிடவில்லையே! ஏன்? இது புறக்கணிப்பா? இருட்டடிப்பா? மறதியா?



சத்திய எழுத்தாளன்
கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர்கனி

சிங்களக் கிராமங்களுக்கு – ஊர் - நகரங்களுக்கு நடுவே, இவர்கள் தழிழைத் துணிந்து பேசி வளர்த்து வருகின்றனர். வடக்குக்கு எந்தத் தமிழ்த் தலைவரும் செய்யாதவொன்றை வடக்கிற்கு ஒரு பல்கலைக் கழகத்தை தந்தவர் முன்னாள் கல்வி அமைச்சர் மர்ஹூம் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத். இவர் ஒரு முறை “சிங்கள கிராமங்களுக்கு மத்தியில் ஒரேயொரு முஸ்லிம் கிராமமாக வாழ்ந்து முஸ்லிம்கள் தமிழைப் பேசி வளர்த்து வருகின்றனர். தமிழர் நடுவே, தமிழை வளர்ப்பதை விட, சிங்களவர்கள் மத்தியில் தமிழை வளர்ப்பதே சிறந்த தமிழ்ப் பணியாகும்” என மேடையில் பேசி, வடகிழக்கு – மலைநாட்டுக்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் தமிழ்ப்பணியை விதந்துரைத்தார். இதனை அப்போதைய ‘தினபதி’ நாளிதழில் அதன் ஆசிரியரான தமிழ்ப்பத்திரிகை ஜாம்பவான் மறைந்த எஸ். டி. சிவநாயகம் தலையங்கத்தில் எழுதி பாராட்டினார். தொடர்ந்து பலரும் இதனைப் பாராட்டி ‘தினபதி’யில் எழுதினர். என்பது குறிப்பிடத்தக்கது.

சகோதரர் கலைமாமணி கா. தவபாலன் தமிழ்க் கல்வியாளர்கள் அதிகமதிகமாக வாழும் பிரதேசங்களாகக் குறிப்பிட்ட மேற்படி பகுதிகளை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் அதிகமதிகமாக வாழும் முஸ்லிம் களில் தமிழ்ப்பணிகள் செய்த தமிழ்க் கல்வியாளர்களை சற்றே திரும்பிப் பார்ப்போம். அது புதிய தலைமுறையினருக்கும் பயன்படும்.

இலங்கையில் வாழும் ஒட்டு மொத்த முஸ்லிம் சமுதாயமும் கல்வி உட்பட, பல வழிகளில் விடியலைக் காண விரும்பிய ஒரு தமிழ்க் கல்வியாளரும் - சமுதாயத் தலைவருமான மர்ஹூம் அறிஞர்

சித்திலெப்பை இலங்கை தமிழிலக்கிய வரலாற்றில் முதற் தமிழ்நாவலான "அசன்பேயின் சரித்திரம்" என்ற நூலை 1887இல் எழுதி வெளியிட்டவர். இந்நூல் இக்காலத்தவருக்கு தெரியாது – கிடைக்காது என்பதால், "ஞானம்" இதழின் அபிமான வாசகரும், முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சருமான மர்ஹூம் ஏ. எச். எம். அஸ்வர் மறுபதிப்பாக அதனை வெளியிட்டார். இந்த அறிஞர் சித்திலெப்பைதான் இலங்கை முஸ்லிம்களுக்கென "முஸ்லிம் நேசன்" என்ற தமிழ்ப் பத்திரிகையை 1882இல் முதன் முதலில் வெளியிட்டார். அறிஞர் சித்திலெப்பை மத்திய மாகாணத்தின் 'கலகெதர' என்ற சிங்கள கிராமத்தில் பிறந்தவர். இத் தகவலை நம் சகோதரர் கலைமாமணி அறிந்திருக்க வில்லையா?

இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றினை எழுதிய மறைந்த கனக செந்திநாதன் முதல் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை ஜாம்பவனாகத் திகழ்ந்த மறைந்த எஸ். டி. சிவநாயகம் வரை (சுயாதீன பத்திரிகா சமாஜம் வெளியிட்ட தமிழ்த் தினசரியான "தினபதி" வெளியான முதல் நாள் அதன் ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் எழுதி வெளிவந்த "செய்தியின் கதை" நூலில்) ஒப்புகொண்ட – ஒரு செய்திப் பத்திரிகைக்கான இலக்கணம் தழுவி இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ்த் தினசரியான "தினத்தபால்" மர்ஹூம் மீரான் முஹிதீன் என்பவரை ஆசிரியராகவும் - வெளியீட்டாளராகவும் கொண்டு 1928இல் வெளிவந்தது. இது கொழும்பில் தமிழ் வளர்த்த இன்னொரு மதுரையாகிய வாழைத்தோட்டம் என்ற பகுதியின் மார்டீஸ் லேன், 06ஆம் இலக்க முகவரியிலிருந்து வெளிவந்தது. இது சகோதரர் கலைமாமணி குறிப்பிட்ட பிரதேசங்களைச் சாராத – முஸ்லிம்களும் சிங்களவர்களும் வாழும் தலைநகரின் வாழைத்தோட்டம் என்ற பகுதியிலிருந்து வந்தமை கவனிக்கத்தக்கது.

மத்திய மாகாணத்தின் 'கல்ஹின்ன' என்ற சிங்கள ஊரில் உருவான தமிழ்மன்றம் தமிழ் எழுத்தாளர்களுக்கு உதவும் நோக்கில் இலவசமாக வெளியிட்ட சுமார் 100 தமிழ்ப்புத்தகங்களையும், தமிழ்மன்றத்தின் ஸ்தாபகரான மர்ஹூம் எஸ். எம். ஹனீபாவையும் தமிழுலகம் மறக்காது, மறக்கத்தான் முடியுமா?

மக்கள் திலகம் எம்ஜியார் தமிழ்நாட்டின் முதல்வராக வந்தபின், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய தமிழிலக்கி யத்திற்கென ஒரு பீடத்தை துவக்கி, அதற்கு பொருத்தமான பீடாதிபதியாக நம் நாட்டி லிருந்து ஒருவரை தெரிவுசெய்து அமர்த்தினார். அவர்தான் சிங்கள கிராமம் பாணந்துறையைச் சேர்ந்த மர்ஹூம் அல்லாமா ம. மு. உவைஸ் என்பதை தமிழிலக்கிய உலகறியும். இந்த உவைஸ் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக, சுமார் 6000 தமிழ் முஸ்லிம்கள் படைத்த இலக்கியங்களை தேடித் துழாவி, 6 நூல்களாக (Volume) வெளியிட்டார். இப்போதும் பிரஸ்தாப பல்கலைகழகத்தில் மேற்படி நூல்களை பார்வையிடலாம். இந்த உவைஸ் சகோதரர் கலைமாமணி குறிப்பிடாத பிரதேசமொன்றில் - சிங்கள கிராமத்தில் பிறந்தவர், சிறந்தவர்.

இவை போன்று இன்னும் எத்தனையோ!

இத்தகைய தகவல்களை எல்லாம் சீர்த் தூக்கிப் பார்க்கும்போது, ஏனைய பகுதி வாழ் முஸ்லிம்களின் தமிழ்ப்பணிகளைப் புறந்தள்ள முடியுமா? அதைத் தமிழ்த்தாய்தான் பொறுப் பாளா? சிந்திக்கவும்.

○ ○ ○

# சுடலை போவதற்கு...

சுடலை போவதற்கு
முன்னேயே கொள்ளி
சுலபமாய்ப் போடுகிறான்
சகலதுக்கும் விலையை அள்ளி
குடலும் சுருங்கி
மனதும் நொறுங்கிக்
கூற்றுயிராய்க் கிடக்கின்றோம் ஒடுங்கி
படலையும் திறவாதே கிடக்குதே இறுகி

**– மனோகரி ஜெகதீஸ்வரன்**
**கொழும்பு**

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

## பாரதியின் குடும்ப வாழ்க்கை

மகாகவி பாரதி பற்றி, அவரது நினைவு நூற்றாண்டான 2021 முழுவதும் எழுதவேண்டும் என்று தீர்மானித்திருந்தேன். ஆனால், எதிர்பாராதவிதமாக இரண்டு மாதங்கள் என்னால் பத்தியை எழுத முடியவில்லை. அதனை ஈடுசெய்யும் முகமாக இந்த ஆண்டில் இரண்டு மாதங்களை, என்னைக் கவர்ந்த அந்த மகாகவியின் நினைவுகளுக்காக அர்ப்பணிக்க விரும்புகிறேன்.

பாரதியைப் பற்றிப் பலரும் பல கோணங்களில் எழுதியிருக்கிறார்கள். ஆனால், அவரது குடும்ப வாழ்க்கை பற்றி, இயன்றளவு தகவல்களை, அவரது குடும்பத்தோடு நெருங்கிப் பழகிய யதுகிரி அம்மாள் தமது பாரதி நினைவுகள் என்ற நூலில் தந்திருக்கிறார். பாரதி பற்றிய பிறிதொரு பக்கத்தை, அவரது நூல் சுவாரசியமாகத் தருகிறது.

மாதக்கடைசியில் ஒருநாள் மாலை. யதுகிரி பாரதி வீட்டுக்கு வழக்கம் போலப் போனார். செல்லம்மா சோர்வாக இருந்தார். யதுகிரி அவரின் சோகத்துக்கான காரணத்தை விசாரித்தார். செல்லம்மா இப்படிச் சொல்லி, யதுகிரியிடம் தமது மன ஆதங்கத்தைக் கொட்டித்தீர்த்தார்: "இவர் பார். இன்றைக்குச் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு அனுப்பவேண்டிய கட்டுரையை அனுப்பவே இல்லை. அவன் எப்படிப் பணம் அனுப்புவான்? இன்று காலையிலே குளித்து, காப்பி குடித்து, வெற்றிலை பாக்கு எல்லாம் கிரமமாக ஆனபிறகு எவ்வளவோ சொல்லி மேஜைமேல் காகிதம், பேனா, இங்கி புட்டி எல்லாவற்றையும் கொண்டுபோய் வைத்துவிட்டு, அரிசியைப் பொறுக்கி வைத்தேன். பிறகு மடி உடுத்திக்கொள்ளப் போனேன். இவருக்கு எழுத முடியவில்லை. முறத்தில் இருந்த அரிசியில் ஒரு பங்கை எடுத்து முற்றத்தில் இறைத்துவிட்டு அதைத் தின்ன வரும் குருவிகளைக் கண்டு பாடிக்கொண்டிருந்தார். அரிசியைக் களைந்து உலையில் போடுவதற்காக வெளியில் வந்து பார்க்கிறேன். அரிசியில் கால் பங்கு இல்லை. எனக்கு அழுகை வந்துவிட்டது. இதைப் பார்த்த அவர், 'வா செல்லம்மா, இந்தக் குருவிகளைப் பார்! எவ்வளவு சந்தோஷமாக இருக்கின்றன! நாமும் அதைப் போல ஏன் இருக்கக்கூடாது? நீயும் சதா தொந்தரவு செய்கிறாய் நானும் எப்பொழுதும் எரிந்துவிழுகிறேன். நமக்கு இந்தக் குருவிகள் ஒற்றுமை கற்றுக் கொடுக்கின்றன. நாம் அதைக் கவனியாமல் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறோம். நம்மைக் காட்டிலும் மூடர்கள் உண்டா?' என்றார். எனக்குப்பொறுக்கவில்லை. 'என் கோபத்தை ஏன் கிளப்புகிறீர்கள்?... பொறுக்கின அரிசியைக் குருவிக்குப் போட்டுவிட்டீர்களே? திரும்பப் பொறுக்கப் பத்து நிமிஷம் ஆகும். உங்களுக்குப் பணம் வர இன்னும் எவ்வளவு நாள் ஆகுமோ!... பால்காரன் மானத்தை வாங்குகிறான்... நீங்கள் இதை யோசிக்க வேண்டாமா? என்னைக் குருவியைப் போல் சந்தோஷமாக இரு என்கிறீர்களே. கடவுளுக்குக் கண்ணே இல்லை. இந்தக் குழந்தைகளைக் கொடுத்து வதைக்கிறார்' என்று சொல்லிக்கொண்டே போய் ஒருவிதமாகச் சமையல் வேலையைச் செய்துமுடித்தேன். வெளியே வந்தால் இவர் சகுந்தலா பாப்பாவுக்கு 'விட்டுவிடுதலையாகி' என்று துவங்கும் பாட்டைப் பாடிக்காட்டிக்கொண்டிருக்கிறார். குழந்தை சந்தோஷத்தால் குதிக்கிறாள்! இவர் பாட்டு ஆனந்தத்தால் மெய்மறந்திருக்கிறார். குருவிகளோ அரிசியைக் கொத்தித் தின்ற வண்ணமாய் இருக்கின்றன."

இன்னொரு நாள் பாரதிக்கும், செல்லம்மாவுக்கும் இடையே சின்னச் சண்டை. ஒரு விடயத்தில் பாரதி செல்லம்மாவிடம் கோபத்துடன், "நீ என்ன, என்னை அடிமையாக்குகிறாயே. என் கையில் இருந்ததை உன் கையில் கொடுத்துவிட்டேன். என்னைக் கட்டாயப்படுத்தாதே" என்றார். செல்லம்மா, "நான் உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை. புத்தகம் போடுவதாகச் சொன்னீர்கள். கையில் பணம் இருக்கும்போது போட்டுவிட்டால் நல்லது" என்று சொன்னார். பாரதியோ, "இதோ பார், தொந்தரவு பண்ணினால் நான் தலைமேல் துணியைப் போட்டுக்கொண்டு போய்விடுவேன்" என்றார். பதிலாகச்

செல்லம்மா, ‘‘நீங்கள் இந்தப் பக்கம் போனால் நானும் அந்தப் பக்கம் போய்விடுகிறேன். இந்தக் கஷ்டம் எதற்கு? குழந்தைகளை யாராவது வளர்த்துக்கொள்ளட்டும்’’ என்று கூறினார். பாரதிக்குக் கோபம் வந்துவிட்டது. ‘‘என்ன! என் குழந்தைகளைக் காப்பாற்றத் திறமை இல்லையா? யாரோடு பேசுகிறாய்?’’ என்று கூறினார். செல்லம்மா பணிவாக, ‘‘உங்களைப் போல் என்னால் பராசக்தியை வரம் கேட்க முடியாது. உங்களைத்தான் வரம் கேட்பேன். இதில் கோபம் எதற்கு? தப்புத்தான் என்ன?’’ என்றார். பாரதி, ‘‘என்னிடம் சொன்ன பிறகு என் பொறுப்பு எனக்குத் தெரியாதா? குழந்தைகளின் பேச்சை எடுக்கிறாய். அவை ஒரு பாவமும் அறியாதவை’’ என்றார். செல்லம்மா பதிலாக, ‘‘நான் அவைகளை ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் துணியைப் போட்டுக்கொண்டு போனால் நானும் போகிறேன் என்றேன்’’ என்றார். பாரதி, ‘‘என்னைக் கிளறாதே. என்பொறுப்பு எனக்குத் தெரியும். பாக்கி விஷயங்களைக் கவனி’’ என்று கூறி முடித்தார். செல்லம்மா தம் காரியங்களைக் கவனிக்கச் சென்றார். இவ்வாறு பாரதிக்கும், செல்லம்மாவுக்கும் இடையே அவ்வப்போது இவ்வாறு வாக்குவாதங்கள் இடம்பெறுவதுண்டு.

பாரதி சிலவேளைகளில் மௌனவிரதம் அனுட்டிப்பதுண்டு மௌனவிரதம் அனுட்டிக்கும் நாட்களில் பேசமாட்டார். ஆனால், கவிதைகளைப் பாடுவார். ஒருமுறை அவர் பதினைந்து நாள் மௌனவிரதம் ஆரம்பித்திருந்தார். செல்லம்மா அப்போது வருத்தத்துடன் யதுகிரிக்கு இவ்வாறு சொன்னார்: ‘‘யதுகிரி, இதுவரை விதியின் விளையாட்டைப் பார்த்தாகிவிட்டது. இனி இந்தச் செய்கையின் விளையாட்டைக் கேள். தெய்வம் பாதி கெடுத்தால் மனிதர் பூராவும் கெடுத்துக்கொள்ள வேண்டுமா? இவர் ‘எள்ளத்தனைப் பொழுதும் பயனின்றி இராதென் நாவினிலே’ என்று பாடிவிட்டு இப்படி ஊமையைப் போல் அபிநயிப்பதைக் கண்டு என் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறதே! இந்தக் கஷ்டம் என் பகைக்கும் வேண்டாம். என்ன வழியோ! என்ன விதியோ! இந்தக் கோலம் சகிக்க முடியவில்லையம்மா!’’ பாரதியோ, ‘நான் மந்திரச் சொல்லைக் கண்டுபிடிக்கப் பேசாமல் இருந்தால் செல்லம்மா கலாட்டா செய்கிறாள்’ என்று எழுதிக்காட்டினார்.

ஒருமுறை பாரதிக்கும், யதுகிரிக்கும் இடையே பெண் அடிமை தொடர்பாகக் கருத்துப் பரிமாறல்கள் ஏற்பட்டன. யதுகிரி இப்படிச் சொன்னார்: ‘‘பெண்கள் அடிமைத்தனம் நீங்கினால் அவர்களும் தைரியத்தோடு நாலு பேருடன் பேசுவார்கள். இப்போதோ தலையில் அடித்தால் தலைவணங்கி, எதிரே வரும் வண்டி, ஆடு, மாடு முதலியன தெரியாமல் போகிறார்கள்!’’ பதிலாகப் பாரதி, ‘‘இதோ பார் யதுகிரி, நான் பெண் விடுதலை பற்றிப் பெரிய கட்டுரை எழுதப் போகிறேன். பாட்டுகளும் செய்கிறேன். நீங்கள் பழைய வழக்கங்களை உதறிவிட வேணும்’’ என்றார். ஆனால், யதுகிரி பாரதியுடன் எதிர்வாதம் செய்தார். ‘‘நீர் விடுதலை கொடுத்ததாக ஆகவில்லையே! நீர் புதுவிதமான அடிமைச் சட்டம் செய்கிறீர். இதில் விடுதலை எங்கே வந்தது?’’ என்று கேட்டார். பாரதி – செல்லம்மாவின் குடும்ப வாழ்வை மனத்தில் கொண்டே யதுகிரி அவரை இவ்வாறு கேட்டார். தமது நூலின் ஓரிடத்தில் யதுகிரி பின்வருமாறு எழுதுகிறார்: ‘‘பாரதியார் வாயால் பெண்கள் சுதந்திரம் பாடினாரே ஒழியச் செல்லம்மாவைத் தம் நோக்கத்தின்படியேதான் நடக்கும்படி செய்தார். செல்லம்மா தமதிஷ்டப்படி நடப்பது வெகு அபூர்வமே.’’

**இருபெரும் இழப்புகள்**

அண்மையில் தமிழ் உலகில் இருபெரும் இழப்புகள் ஏற்பட்டுவிட்டன. ஒருவர், தமிழ்கூறு நல்லுலகம் நன்கறிந்த முற்போக்கு எழுத்தாளர். இன்னொருவர், நாடறிந்த நல்ல கல்விமான். இருவரின் இழப்புகளும் மிகுந்த சோகத்துக்கு உரியவை.

செ. கணேசலிங்கன் யாழ்ப்பாணத்தில் எனது ஊரான உரும்பிராயைச் சேர்ந்தவர். இலங்கைத் தமிழ் நாவல் வரலாற்றில் கணேசலிங்கனின் வகிபாகம் மிகவும் முக்கியமானது. இலங்கைத் தமிழ் நாவலின் போக்கை ஒரு புதிய தடத்துக்குத் திருப்பிய பெருமை அவருக்கு உரியது. செ. கணேசலிங்கனுக்குத் தமிழ் இலக்கிய உலகில் நிரந்தர வாழ்வு உண்டு.

பேராசிரியர் நாகேஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவராக விளங்கியவர். அவர் இருக்கும் இடம் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். சிறந்த சமயச் சொற்பொழிவாளராகவும் விளங்கி, அனைவரையும் தமது வாக்குச் சாதுரியத்தினால் கவர்ந்தவர். அவர் இன்னும் வாழ்ந்திருக்கவேண்டியவர்.




## இலக்கிய ஆளுமைகள் – சிறப்பு மலர்கள்

சிறு சஞ்சிகைகள் காலத்துக்குக் காலம் பலதரப்பட்ட சிறப்பு மலர்களை வெளியிடுவது வழக்கம். ஆண்டு மலர், பிரதேசச் சிறப்பு மலர், இளம் எழுத்தாளர் சிறப்பு மலர், சிறுகதைச் சிறப்பு மலர், கவிதைச் சிறப்பு மலர், பெண்ணியச் சிறப்பு மலர் என்றவாறு இச்சிறப்பு மலர்கள் அமையும். இலக்கிய நிகழ்வுகளையொட்டியும் சிறப்பு மலர்கள் வெளியிடப்படுவதுண்டு.

ஞானம் சஞ்சிகையைப் பொறுத்தவரையில் சிறப்பு மலர்களை வெளியிடுவதில் நாம் ஒரு தனித்துவத்தைப் பேணி வந்திருக்கிறோம். ஈழத்து இலக்கிய வரலாற்றுடன் தொடர்புபட்ட சிறப்பு மலர்களையே வெளியிட்டு வந்துள்ளோம். இக்கட்டுரைத் தொடரின் முன்னைய அத்தியா யங்களில் அவை தொடர்பான விபரங்களை வாசகர்கள் அறிந்திருப்பர்.

அந்த வகையில், ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்களிப்பினை நல்கிய ஆளுமைகள் சிலருக்கும் நாம் சிறப்பு மலர்களை வெளிட்டுள்ளோம். இலக்கிய ஆளுமைகளுக்கு சிறப்பு மலர்கள் வெளியிடும் முறையை முதன் முதலில் மேற்கொண்ட சஞ்சிகை தமிழக சஞ்சிகையான 'எழுத்து' ஆகும். 1959ஜனவரியில் சி. சு. செல்லப்பாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவரத் தொடங்கிய எழுத்து சஞ்சிகை, தனது 5ஆவது இதழில் எழுத்தாளர் கு. ப. ரா. வுக்கு நினைவு மலர் வெளியிட்டது. அதன் ஏழாவது இதழ் புதுமைப்பித்தன் நினைவு மலராக வெளிவந்தது. பின்னர் பிச்சமூர்த்தி சிறப்பு ஏடு, பி.எஸ்.இராமையா மலர் என்பவை வெளிவந்தன. எழுத்து இதழின் 117ஆவது இதழ் சங்கு சுப்பிரமணியத்தின் நினைவு ஏடாக வெளிவந்தது. எழுத்து சஞ்சிகையின் பின், தமிழகத்தில் 1970இல் தோன்றிய 'கசடதபற' என்ற சிற்றிதழும் தனது 17ஆவது இதழை 'க.நா.சு. சிறப்பிதழா'க வெளிக்கொணர்ந்தது.




ஞானம் சஞ்சிகை தனது 31ஆவது (2002 டிசம்பர்) இதழை கே. கணேஷ் சிறப்பு மலராக வெளிக்கொணர்ந்ததன் மூலம் இலக்கிய ஆளுமைகளை கௌரவிக்கும் பணியை ஆரம்பித்தது. கே. கணேஷ் அவர்களுக்கு முதன் முதலில் சிறப்பு மலர் வெளியிட்ட பெருமை ஞானம் சஞ்சிகைக்கே உரியது.

### கே. கணேஷ் சிறப்பு மலர்

கே. கணேஷ் அவர்கள் ஈழத்தின் முதலாவது இலக்கியச் சஞ்சிகையான "பாரதி"யை வெளிக்கொணர்ந்தவர். ஈழத்தின் முதலாவது எழுத்தாளர் சங்கத்தை உருவாக்குவதில் முன்னின்றுழைத்தவர். 'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' உருவாகுவதற்குக் காரணராய் இருந்தவர். ஈழத்து இலக்கியத் தடத்தை, அதன் காத்திரமான செல்நெறியை உருவாக்கியவர்களுள் முக்கியமானவர்.

கே.கணேஷ் அவர்கள் தனது உயர் கல்வியை மதுரைத் தமிழ்ச்சங்கத்திலும் திருவையாறு ராஜாக்கல்லூரியிலும் பெற்றவர். தமிழகத்தில் கல்வி கற்றபோது அவருக்கு இடதுசாரிகளின் தொடர்புகள் ஏற்பட்டன.

1939இல் அவர் தமிழ்நாட்டில் இருக்கும்போது மணிக்கொடி சஞ்சிகையில் எழுதத்தொடங்கினார். அவர் எழுதிய ஆசாபாசம், அதிர்ஷ்டசாலி ஆகிய சிறுகதை

களும் மொழிபெயர்ப்புகளும், மணிக் கொடியில் வெளியாகியுள்ளன.

*1934*இல் கல்விகற்க இந்தியாசென்ற கே.கணேஷ், அங்கு கம்யூனிச சித்தாந்த அறிவையும் இந்திய சுதந்திர வீரர்களின் தொடர்பையும் தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் நட்பையும் பெற்று *1938*இல் இலங்கை திரும்பினார்.

பெரியார் ஈவேராவுடன் சேர்ந்து கம்யூனிஸ இயக்கத்தைக் கட்டியெழுப்பிய ப.ஜீவானந்தம் அவர்களுடன் கே. கணேஷ் மிகநெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

கே.கணேஷ் அவர்கள் உலக இலக்கியங்கள் பலவற்றை மொழிபெயர்த்து 22 நூல்களை வெளியிட்டுள்ளார். பாரதத்தில் வெளிவந்த தலித் இலக்கியத்தின் முதல் நாவலாகக் கருதப்படும் முல்க்ராஜ்ஆனந் எழுதிய 'தீண்டத்தகாதவர்கள்' (Untouchables) என்ற நாவலை முதன்முதலாக மொழிபெயர்த்து தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் கே. கணேஷ்.

*1958*இல் ஜப்பான் சக்கரவர்த்தியின் பிறந்த தினத்தையொட்டி உலகரீதியில் நடத்தப்பட்ட கவிதைப்போட்டியில் 'மேகங்கள்' என்ற கவிதையை எழுதி ஜப்பானிய சக்கரவர்த்தியின் 'ஹீராஹிட்டோவின்' அரசவைக் கவிஞர்களின் பாரட்டுவிருதைப் பெற்றார்.

உக்ரேனிலும் பல்கேரியாவிலும் நடை பெற்ற உலக மொழிபெயர்ப்பாளர் மாநாடு களில் *1984*இலும் பின்னரும் இருதடவைகள் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.


கே.கணேஷ் அவர்களுக்கு கனடா இலக்கியத் தோட்டத்தின் இயல்விருது *2003*ஆம் ஆண்டில் வழங்கப்பெற்றது.

### வரதர் சிறப்பிதழ்

ஈழத்தின் முதலாவது தமிழ் எழுத்தாளர் சங்கம். *13-06-1942*இல் தோன்றியது. தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' என்ற இந்தச் சங்கத்தை தோற்றுவிப்பதில முழுமூச்சுடன் இயங்கியவர் வரதர்.

இந்தச் சங்கத்திலிருந்து 'மறுமலர்ச்சி' என்ற சஞ்சிகை *1946*இல் வெளியிடப்பட்டது. இந்தியாவில் 'மணிக்கொடிகாலம்' போன்று ஈழத்தில் 'மறுமலர்ச்சிக்காலம்' விளங்கியது என ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

*1940*இல் ஈழகேசரி ஆண்டு மலரில் 'கல்யாணியின் காதல்' என்ற சிறுகதையினை




எழுதி *16* வயதில் இலக்கியப் பிரவேசம் செய்தவர் வரதர்.

சாதிக்கொடுமை, பெண்விடுதலை பற்றி ஈழத்து எழுத்தாளர்கள் விரிவாகச் சிந்திப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே இவைபற்றித் தனது எழுத்துக்களில் ஓங்கிக் குரல் கொடுத்த புரட்சி எழுத்தாளர் இவர். இவரது **'கற்பு'** என்ற சிறுகதை ஐம்பது வருடங்களுக்கு முன்னரே வெளிவந்த பெண்ணியச் சிந்தனை கொண்ட சிறுகதையாகும்.

ஈழத்தில் புதுக்கவிதை பற்றிப் பேசுவதற்கு முன்னரே அதற்குச் செயல்வடிவம் கொடுத்தவர் வரதர். ஈழகேசரியில் அவர் எழுதிய **'ஓர் இரவிலே'** என்ற கவிதையே ஈழத்தின் முதலாவது நவீன கவிதை எனப் போற்றப்படுகிறது.


*1955*ல் கவிதைக்கென ஒரு மாதஇதழை **'தேன்மொழி'** என்ற பெயரில் வெளியிட்டுப் புதுமை செய்தவர். இதுவே ஈழத்தின் முதலாவது கவிதைச் சஞ்சிகையாகும்.

ஆனந்தன் *(1952)*, வெள்ளி *(1957)*, புதினம் *(1961)*, அறிவுக்களஞ்சியம் (மாணவர்களுக்கான இதழ் *1992)* போன்ற பல்வேறு சஞ்சிகைகளை வெளியிட்டு ஈழத்து இதழியல் வரலாற்றில் தனது சுவடுகளை ஆழமாகப் பதித்தவர்.

'வரதரின் பலகுறிப்பு' என்ற பெயரில் இவர் முதன் முதலில் தமிழ் டிரெக்டரியை வெளியிட்டவர்.

இலங்கையில் முதன்முதலில் இலக்கியத் துக்காக அரச உயர் விருதான சாகித்திய இரத்தினா விருதை *2002*இல் பெற்றவர் வரதர்.


வரதர் *80* வயதை எய்தியபோது ஞானம் இலக்கியப் பண்ணையின் ஏற்பாட்டில் அவருக்கு பாராட்டுவிழா கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்றது. ஞானம் பதிப்பகத்தினால் வெளிக் கொணரப்பட்ட வரதர் *80* என்ற நூலும் அவ் விழாவில் வெளி யிடப்பட்டது.




அவர் மறைந்தபோது ஞானம் *2007* ஜனவரி இதழ் வரதர் நிறைவு மலராக வெளியிடப் பட்டது.

## கா. சிவத்தம்பி பவள மலர்

ஞானம் 84ஆவது (2007 மே) இதழ் பேராசிரியர் சிவத்தம்பி பவளவிழா மலராக வெளிவந்தது. சிவத்தம்பியின் பவளவிழாவை ஞானம் தமிழ்ச்சங்கத்தில் பெரிய அளவில் கொண்டாடியது. பவளவிழா மலரும் வெளியிட்டது. ஞானம் சஞ்சிகை வெளியிட்ட பேராசிரியரின் நேர்காணல் நூலும், பவளவிழா மலரும் பேராசிரியரைப் பற்றி அறிந்து கொள்ளப் போதுமான ஆவணங்களாகத் திகழ்கின்றன.




பெர்மிங்காம் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் தொம்சனின்கீழ் 'பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்' என்ற ஆய்வினைச் செய்து பட்டம்பெற்று, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராகப் பணிபுரிந்தவர் சிவத்தம்பி.

பழந்தமிழ் இலக்கிய இலக்கணம், நவீன இலக்கியம், மொழியியல், தமிழ் நாடகம், இலக்கியவரலாறு, தமிழர் பண்பாடு, அரசியல், பொருளாதாரம், தொடர்பாடல், இதழியல், நாட்டாரியல், வானொலி, இசைத்துறை, சமூகவியல் ஆகிய துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டவர் இவர்.

கொம்யூனிஸ்ட் கட்சிச்சார்பு, பேராசிரியர் சிவத்தம்பியின் எழுத்துக்கு சித்தாந்தத்தை நல்கியது. 1962 இறுதியில் ஆரம்பித்து 1963இல் ஈழத்தமிழ் இலக்கியத்தின் திருப்பு முனையாக அமைந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மரபுப் போராட்டத்தில் பேராசிரியர் கைலாசபதியுடன் இணைந்து இவர் ஆற்றிய பணி மகத்தானது. மார்க்சிய ஒளியில் தமது விமர்சனப் பார்வையைச் செலுத்திய பேராசிரியர், தமிழ் விமர்சனத் துறையிலும் பல புதிய கோணங்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியவர். மார்க்ஸிய இலக்கியநோக்கை விளக்கியுரைக்கும் தத்துவ வாதியாகவும் முற்போக்கு இலக்கிய அணியின் தளகர்த்தாவாகவும் அவர் செயற்பட்டு நின்றார்.

அவர் தஞ்சைப் பல்கலைக் கழகம், ஸ்கன்டினேவியா பல்கலைக் கழகம், உப்சலா பல்கலைக் கழகம், அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா, பெர்கிளி, விஸ்கான்ஸியன், ஹாவார்ட் பல்கலைக்கழகங்கள் ஆகிய வற்றிலும் வருகைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

ஏறத்தாழ நாற்பத்தாறு நூல்கள், பிரசுரங்கள், ஐம்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், உட்பட 11 ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார்.

வெளிநாடுகளில் நடைபெற்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வு மாநாடுகளில் பங்குபற்றி அவர் எமது நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

பிற்பட்ட காலத்தில் பேராசிரியரின் கருத்தியலில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அவர் தமிழ்த்தேசியக் கருத்தியலின் ஆதரவாளரானார். 84-86 காலப்பகுதியில் வடக்கு கிழக்கு பிரதேசத்தின் பிரஜைகள் கண்காணிப்புக் குழு ஒன்றியத்தின் தலைவராகப் பணியாற்றினார்.

பேராசிரியரின் இலக்கியப் பணிகளுக்காக, 1998இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு டி.லிற். பட்டம் வழங்கிப் பெருமை பெற்றது. அதே ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணசபை ஆளுனர் விருதைப் பேராசிரியருக்கு வழங்கியது. அதேபோன்று, இலங்கை ஜப்பான் நட்புறவுக்கழகத்தின் பங்கா விருது (BANKA) 1998இல் வழங்கப்பட்டது. அனைத்துக்கும்மேலாக தமிழ்நாடு அரசு பேராசிரியருக்கு திரு.வி.க.விருதினை 2000ஆம் ஆண்டு வழங்கிப் பெருமை கொண்டது. இவ்விருதினைப் பெற்ற ஒரே இலங்கையர் பேராசிரியர் சிவத்தம்பி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசின் இலக்கியத்திற்கான உயர்விருதான சாஹித்யரத்னா விருது இவருக்கு 2004ஆம் ஆண்டு வழங்கப் பெற்றது.

## சிற்பி சிறப்பிதழ்

1958ஆடி முதல் 1966 ஆவணி வரை எட்டு வருடகாலம் இலக்கிய உலகில் கலைச்செல்வி பவனி வந்தது. இக்காலகட்டம் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மிக முக்கியமானதோர் காலகட்டமாகும்.

மரபு, பண்டிதப்போக்கு, இழிசினர் இலக்கியம், யதார்த்தம், மண்வாசனை

முதலியவை பற்றி பகிரங்கமாக விவாதிக் கப்பட்ட காலம். இவை சம்பந்தமான தம் சிந்தனையின் அடிப்படையில் எழுத்தாளர்களில் பலர் இருவேறு அணிகளாகப் பிரிந்து செயற்பட்ட காலம். அணிசேரா எழுத்தாளர்களாகவும் சிலர் இயங்கிய காலம்.



தமிழ் இலக்கிய மரபு என ஒன்று இருப்பதை ஏற்றுக் கொண்டு தேவையான சந்தர்ப் பங்களில் அந்த மரபை மீறும் உரிமை எழுத்தாளர்களுக்கு உண்டு என்பது கலைச்செல்வியின் நிலைப்பாடாக இருந்தது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிகூடிய புகழ்பூத்த எழுத்தாளர்களைத் தனது கலைச் செல்வி மூலம் உருவாக்கியவர் சிற்பி.

தமிழக மக்களால் ஈழத்து நவீன இலக்கியங்களும் அறியப்படவேண்டும், போற்றப்படவேண்டும் என்ற தேசியப் பற்றுக் காரணமாக சிற்பி அவர்கள் **ஈழத்துச் சிறு கதைகள்** என்ற ஈழத்தின் முதலாவது சிறுகதைத் தொகுதியை 1958இல் வெளிக்கொணர்ந்தார்.

சிற்பி அவர்கள் எழுதிய முதற்சிறுகதை 'மலர்ந்தகாதல்' 1952இல் சுதந்திரனில் வெளிவந்தது. 1955இல் உதயம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப்போட்டியில் இவரது 'மறுமணம்' என்ற சிறுகதை முதற் பரிசினைப்பெற்றது. இருந்தபோதிலும் தான் வெளிக்கொணர்ந்த ஈழத்தின் முதலாவது சிறுகதைத் தொகுப்பில் அவர் தனது சிறுகதை எதனையும் சேர்த்துக்கொள்ளவில்லை என்பது சிற்பியின் இலக்கியப் பண்புக்குச் சிகரமிடுவதாய் அமைந்தது.

இவர், சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் கலைமாணி பட்டம்பெற்றவர். பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தின் முதுமாணி பட்டம் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில் புலமையுள்ளவர். ஈழத்துச் சஞ்சிகையாளர் வரிசையில் இவரே அதிகூடிய கல்வித்தகைமை கொண்டவர்.

இவர், சிறுகதை, நாவல், கவிதை கட்டுரை, விமர்சனம், நாடகம், வானொலி நாடகம் ஆகிய துறைகளில் எழுதியவர்.

ஞானம் 97ஆவது (2008 ஜுன்) இதழ் சிற்பி பவள விழா சிறப்பிதழாக வெளிவந்தது. அவருக்கான விழா யாழப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.

ஞானம் சஞ்சிகையில் அவர் தொடராக எழுதிய 'கலைச்செல்விக் காலம்' பின்னர் நூலாக வெளிவந்து அரச தேசிய சாகித்திய விருதினை 2017இல் பெற்றுக்கொண்டது. அவர் அமரராகிய நிலையில் அவ்விருதை அவரது மனைவி சரஸ்வதிஅம்மா பெற்றுக்கொண்டார்.

### எஸ்.பொ. சிறப்பிதழ்

நவீன தமிழ் இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆழத் தடம்பதித்த பேராளுமை எஸ்.பொ. சிறுகதை, நாவல், நாடகம், வானொலி நாடகம், கட்டுரை, உருவகக் கதை, கவிதை, Creative essays, ஆய்வு, மொழிபெயர்ப்பு, பத்தி எழுத்து, விமர்சனம், பதிப்பு முயற்சிகள் என இவர் சகலதுறைகளிலும் தடம் பதித்தவர்.

இவரது எழுத்துநடை சிறப்பு வாய்ந்தது. சொற்களைச் செதுக்கியும் புதுக்கியும் வீரியம் ஏற்றும் வல்லாளர் இவர். இத்தகைய பெருமைவாய்ந்த எஸ்.பொ.வை ஓரங்கட்ட முயன்றவர்கள் முற்போக்கு அணியினர். ஆனாலும் அவர் தனது எழுத்து வல்லபத்தால் தன்னை இலக்கிய உலகில் திடமாக நிறுத்திக் கொண்டவர். அறுபதுகளில் முற்போக்கு அணியினருடன் முரண்பட்டு இவர் முன்வைத்த **'நற்போக்கு'** இலக்கியக் கோட்பாடு பெருஞ் சர்ச்சைக்கு உள்ளாகியது.

இவரது நீண்ட நேர்காணல் ஞானம் 50ஆவது இதழிலிருந்து 71ஆவது இதழ்வரை தொடராக வெளிவந்தது. பின்னர் அந்த நேர்காணல் தொகுப்பு **"தீதும் நன்றும்"** என்ற மகுடத்தில் நூலாக வெளிவந்தது.



இவர் உயர் கல்வியை சென்னை கிறித்தவக்கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பெற்று பி.ஏ. பட்டம் பெற்றவர்.

2000 பக்கங் களைக் கொண்ட இவரது 'வரலாற்றில்

வாழ்தல்' என்ற நூல் தமிழில் வெளிவந்த அதிக பக்கங்களைக் கொண்ட சுயசரிதையாகும்.

"புலம்பெயர்ந்தோர் இலக்கியம்" என்ற பதப்பிரயோகத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமை எஸ்.பொ. அவர்களையே சாரும். 1989இல் இந்தக் கனதியான சொற்றொடரை அவர் மெல்பனில் நடந்த இலக்கிய விழாவில் முன்மொழிந்தார். புலம்பெயர்ந்தோர் இலக்கியம்தான் 21ஆம் நூற்றாண்டின் சர்வதேசத் தமிழ் இலக்கியத்திற்குத் தலைமை தாங்குமெனத் தன் குரலை ஓங்கி ஒலித்தார்.

இவர் பத்துக்கம் மேற்பட்ட புனைபெயர்களில் எழுதியுள்ளார். இவரது (1)தீ, (2) சடங்கு, உட்பட எட்டு நாவல்களும், சிறுகதைத் தொகுதிகளாக, எட்டுச் சிறுகதைத் தொகுதிகளும், கட்டுரைத் தொகுதிகளாக, பன்னிரண்டு நூல்களும், கவிதைத் தொகுதிகளாக அப்பையா, அப்பாவும் மகனும் ஆகியனவும், நாடக நூல்களாக எட்டு நூல்களும் வெளியாகியுள்ளன.


இவரது பணிகளைப்பாராட்டி கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வாழ்நாள் சாதனை இயல்விருது 2010இல் வழங்கப்பட்டது. ஞானம் 115 ஆவது (2009 டிசம்பர்) இதழை எஸ்.பொ. சிறப்புமலராக வெளியிட்டு அவரைக் கௌரவித்தது.

## தெளிவத்தை ஜோசப் பவளமலர்

ஞானம் சஞ்சிகையின் 120ஆவது (மே 2010) இதழ் தெளிவத்தை ஜோசப் பவள மலராக வெளிவந்தது

மலையகம் என்னும் உணர்வுக்குத் தமது எழுத்தாற்றலால் உருவம் கொடுத்தவர் தெளிவத்தை ஜோசப். ஐம்பது வருடங்களுக்கு மேலாக இலக்கிய வாழ்வு வாழ்ந்து மலையக இலக்கியத்தின் அடையாளத்திற்கும் தனித்துவத்திற்கும் இவரது எழுத்துக்களும் தொகுப்புக்களும் ஆய்வுப் பணிகளும் பெரும் பங்கு ஆற்றியுள்ளன.

ஆரம்பத்தில் சிறுகதைகள் எழுதுவதோடு தனது இலக்கிய முயற்சிகளை ஆரம்பித்த ஜோசப் காலப்போக்கில் குறுநாவல், நாவல், விமர்சனம், ஆய்வு, திரைப்படக் கதை, தொலைக்காட்சி, வானொலி நாடகம் எனப் பல தளங்களில் தனது உழைப்பை விஸ்தாரப்படுத்தி மலையக இலக்கியத்தை அதனூடாக




ஈழத்து இலக்கியத்தை வளம் படுத்தியதோடு உலகத் தமிழ் இலக்கியதிற்கு உரம் சேர்த்தவர்.

வீரகேசரி நடத்திய சிறுகதைப் போட்டிகளில் 'பாட்டி சொன்ன கதை', 'பழம் விழுந்தது' ஆகிய கதைகள் மூலம் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் முதற்பரிசைப் பெற்றதோடு கலைமகளில் சிறந்த சிறுகதைகள் எழுதியதன் மூலமும் பல்வேறு இலக்கியச் செயற்பாடுகள் மூலமாகவும் தன்னை ஓர் தவிர்க்க முடியாத தலைமைப் படைப்பாளியாக நிரூபித்துக்காட்டிய பெரும் எழுத்தாளர் இவர்.

இவரது முதல் நாவலான 'காலங்கள் சாவதில்லை' 1974இல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது.இவரது நாமிருக்கும் நாடே சிறுகதைத் தொகுதி 1979இல் வெளியாகி அவ்வாண்டின் சாகித்திய மண்டலப் பரிசிசைப் பெற்றது.

இவரது மலையகச் சிறுகதை வரலாறு 2000ஆம் ஆண்டு வெளிவந்து இவரை ஓர் சிறந்த ஆய்வாளர் ஆக்கியது. ஆவ்வாண்டின் சாகித்திய விருதினையும் பெற்றுக் கொண்டது. துரைவி பதிப்பகத்னூடாக இவர் வெளிக் கொணர்ந்த மலையகச் சிறுகதைகள், உழைக்கப் பிறந்தவர்கள் ஆகிய இரு தொகுப்புகளும் மலையக இலக்கியத்திற்கு இவர் அளித்த அரிய செல்வங்களாகும். எழுபது வருட காலத்துக்குரிய கதைகளைத் தேடிச் சேகரித்து இரண்டுவருட கால எல்லையுள் இப்பணியைச் செய்து சாதனை படைத்தவர் இவர்.

இவரது குறு நாவல்களான பாலாயி, ஞாயிறு வந்தது, மனம் வெளுக்க ஆகிய மூன்றும் ஒரே தொகுப்பாக 1997இல் வெளியாகியது. தமிழ் நாட்டின் சுபமங்களா சஞ்சிகையும் தேசிய இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்திய குறுநாவல் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றது நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் (குறுநாவல்). மலையக நாவல் வரலாறும் வளர்ச்சியும், இருபதாம் நூற்றாண்டு ஈழத்து

இதழியல் (ஆய்வுகள்) எனபன இவரது ஏனைய படைப்புகளாகும்.

இவரது பவள விழாவை 16-05-2021இல் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் ஞானம் கொண்டாடியது. அதன் பின்னர் மலையக குயில்வத்தை தோட்டத்திலும் கொண்டாடியது. இலக்கியத்திற்கான "அரச சாகித்திய ரத்னா" உயர் விருது இவருக்கு 2014இல் வழங்கப் பெற்றது.

### அ. முத்துலிங்கம் சிறப்பிதழ்

இன்றைய தமிழ் இலக்கிய உலகின் முன்னணி எழுத்தாளராகத் திகழ்பவர் அ.முத்தலிங்கம்

புலம்பெயர் எழுத்தாளர்களில் அதிக சிறுகதைகளை எழுதியவர், அதிக சிறுகதைத் தொகுதிகளைத் தந்தவர், அவற்றிற்காக அதிக விருதுகளையும் பரிசில்களையும் பெற்றவரும் அ.முத்துலிங்கம்தான்!

அ. முத்துலிங்கம் சிறுகதை, நாவல், பத்தி, விமர்சனம், நேர்காணல், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், புத்தக மதிப்புரைகள், நாடக - சினிமா விமர்சனங்கள் எனப் பல்துறைசார்ந்து அதிகமாக எழுதியவர். இவர் இருபதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு ஆங்கில எழுத்தாளர்களுடனான நேர்காணல்களை மேற்கொண்டுள்ளார். இப்படியாக அதிகமான இலக்கிய வகைமைகளுள் தன்னை ஈடுபடுத்தி இயங்குவதன் மூலம் ஏனைய எழுத்தாளர்களின் இலக்கியச் செயற்பாடுகளைவிட அதிகமான துறைகளில் இவர் இயங்கிவருகின்றார்.

முத்துலிங்கம் எமக்குக் காட்டும் உலகம் தமிழ் இலக்கியத்துக்குப் புதியது. வித்தியாசமான நிலவமைப்புடைய நாடு களின் அனுபவங்களை வெவ்வேறு பட்ட இனத்தவர்களின் வாழ்க்கை முறை களை அவர்களின் பண்பாட்டை தமது கதைகளில் கொண்டுவருகிறார். அவரது விரிவான உலகப் பயணங்களும் அதன் விளைவான மானுட தரிசனங்களும் அதனைச் சாத்தியமாக்கியிருக்கிறது. இவரது புலம்பெயர்வாழ்வு புதிய பல காட்சிகளையும் வாழ்வியல் அம்சங் களையும் புதிய பல சொற்பிரயோ கங்களையும் தமிழுக்குக் கொண்டு வந்திருக்கிறது.




அ. முத்துலிங்கத்தின் எழுத்துக்களில் அங்கதச் சுவை கலந்திருக்கும். இவரது படைப்புகளைத் தனித்துவப்படுத்தும் மற்று மொரு அம்சம், அவர் உவமான உவமே யங்களை அதிகம் பயன்படுத்தி விவரணங்களை மேற்கொள்வார். அது மட்டுமன்றி தொன்மக் குறியீடுகளையும் தனது கதைகளில் அநாயாசமாகப் பயன்படுத்துவார். இத்தகைய தொன்மக் குறியீடுகள், பிறநாட்டுக்கதைகள் என்பதை மறக்கச் செய்து தமிழ் வாசகருக்கு அந்நியப்படாமலும் தீவிரம் சிதைக்கப்படாமலும் இருக்க உதவுகின்றன! தம்நாட்டுக்கதைகளை வாசிப்பது போன்ற உணர்வினைத் தமிழ் வாசகனுக்குத் தந்து வாசகனைக் கதையுடன் ஒன்றிப் போகச் செய்கின்றன.

அ. முத்துலிங்கம் அவர்கள் தான் ஓர் இலக்கியப் படைப்பாளி என்ற நிலையிலிருந்தும் ஒருபடி மேலே சென்று இலக்கியச் செயற்பாட்டாளராகவும் இயங்குகிறார். கனடாவில் இயங்கிவரும் **"தமிழ் இலக்கியத் தோட்டம்"** என்னும் அறக்கட்டளை குழுமத்தின் முக்கிய உறுப்பினராக இயங்கிவருகிறார். இந்த அமைப்பு வருடா வருடம் உலகின் சிறந்த தமிழ்ப்பணியாளர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு விருதளித்துக் கௌரவித்து வருகிறது.

அத்தோடு 2015ஆம் ஆண்டிலிருந்து "ஹார்வாட்" தமிழ் இருக்கை அமைப்பின் உறுப்பினராகச் செயலாற்றுகிறார்.

அ. முத்துலிங்கம் ஈழத்தவர் என்ற நிலையில் ஈழத்தவர் யாபேருக்கும் பெருமை! உலகின் முன்னணித் தமிழ் எழுத்தாளர் என்ற நிலையில் உலகத் தமிழர் யாபேருக்கும் பெருமை! அவர் தனது 60 ஆண்டுகால இலக்கியச் சேவையை நிறைவு செய்திருக்கும் தருணத்தில், ஞானம் அவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக "அ. முத்துலிங்கம் -60" சிறப்பு மலராக 215ஆவது (2018 ஏப்ரல்) ஞானம் இதழை, கனடா ஸ்காபுறோவில் இடம்பெற்ற அவரது பாராட்டுவிழாவில் வெளியிட்டு வாழ்த்தி மகிழ்ந்தது.

❍ ❍ ❍

(தொடரும்)

**கலாபூஷணம் கே.பொன்னுத்துரை**

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்















**கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அமரத்துவம் அடைந்தோர்க்கான நினைவுப் பகிர்வு.**

கொழும்பு தமிழ்ச்சங்க உறுப்பினர்களாக இருந்து அண்மையில் அமரத்துவம் அடைந்த வ. சிவச்சந்திரதேவன், க. க. உதயகுமார், சட்டத்தரணி கௌரிசங்கரி, அ. இராமலிங்கம், பத்மா சோமகாந்தன், ஜெ. திருச்சந்திரன், கலாநிதி மரியசேவியர் அடிகளார், இராஜேந்திரன், அரியகுட்டி நடராசா, வைத்தீஸ்வரன் சிவசோதி, சைவப்புலவர் சு. செல்லத்துரை, போராசியர் கனகசபாபதி நாகேஸ்வரன் ஆகிய பன்னிருவரின் நினைவுப்பகிர்தல் தமிழ்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை மாலை மருத்துவர் தி.ஞானசேகரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்கள் தீபம் ஏற்றி, மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து மருத்துவர் தி. ஞானசேகரன், ஆழ்வாப்பிள்ள கந்தசாமி, திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா, சங்கத்தலைவர் ந. காண்டீபன், திருமதி. வசந்தி தயாபரன், க. குமரன், சட்டத்தரணி சோ. தேவராசா, ஐயாத்துரை கஜமுகன், சைவப்புலவர் சா. பொன்னுத்துரை, உடுவை தில்லைநடராசா, பேராசிரியர் வ. மகேஸ்வரன், கலாநிதி. க. இரகுபரன், திருமதி லீலாவதி மோகனசுந்தரம் ஆகியோர் நினைவுப்பகிர்தல் உரையாற்றினர்.

நிகழ்வில்அமரர் அ. இராமலிங்கம் அவர்களின் புதல்வன் இராதாமனோகரன் நினைவாக ஒரு லட்சம் ரூபாய் வழங்குவதையும், மாலை அணிவித்து தீபம் ஏற்றியவர்களையும் படங்களில் காணலாம்.

●●●





**கொழும்பு பல்கலைக்கழகம்–இலங்கை முகாமைத்துவம் மற்றும் நிதியியல் பீடத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான பட்டமளிப்பு விழா**

மேற்படி பட்டமளிப்பு விழா, கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 18.12.2021 சனிக்கிழமை நண்பகல் நடைபெற்றது. சுரேந்திரன் சையோளிபவன் 3 தங்கப் பதக்கங்களை பெற்று அனைவரின் பராட்டுதல்களைப் பெற்றார்.

தங்கப்பதக்கம்-01 : சந்தைப்படுத்தல் பட்டப்படிப்பு திட்டத்தில் வணிக நிர்வாகத்தில் இளங்கலை சிறந்த செயல்திறனுக்காக பட்டய கணக்காளர் சந்தைப்படுத்தல் நிறுவனம் வழங்கியது.

தங்கப்பதக்கம்-02 : இளங்கலை வணிக நிர்வாகப் பட்டப்படிப்பில் நிதிக் கணக்கியலில் சிறந்த செயல்திறனுக்காக. (ACCA) பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்களின் சங்கம் வழங்கிய தங்கப்பதக்கம்.

தங்கப்பதக்கம்-03: சந்தைப்படுத்தலில் BBA இல் சேவைகள் சந்தைப்படுத்தலில் செயல்திறனில் மிகச் சிறந்தவர்களுக்கு வழங்கும் அமானா (Amana Bank) வங்கியின் தங்கப் பதக்கம்.

●●●

கொழும்பு தமிழ்ச் சங்க பொதுச் செயலாளராக நீண்ட காலம் பணிபுரிந்த தமிழவேள் க.இ.க கந்தசாமி அவர்களின் "பிறந்தநூற்றாண்டு நினைவுப்பகிர்வு" 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சட்டத்தரணி சுகந்திஇராஜகுலேந்திரா(கொழும்பு தமிழ்ச்சங்க இலக்கியக்குழுச் செயலாளர்) தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சாயலன் முகுந்தன் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாட திருமதி.நிர்மலா தேவராஜா ஈகைச்சுடர் ஏற்றினார், செ. மனோகரன் உருவப் படத்திற்கு மாலை அணிவித்ததைத் தொடர்ந்து துணைத் தலைவர் மா. கணபதிப்பிள்ளை, நிர்வாக்குழுஉறுப்பினர்களான க. குமரன், இரகுபதி பாலஸ்ரீதரன், மற்றும் உறவினர் செ. மனோகரன் ஆகியோர் நினைவைப் பகிர்ந்து உரையாற்றினார்.



(படப்பிடிப்பு :- எஸ். எம். சுரேந்திரன்)

❍ ❍ ❍



# கண்ணீர் அஞ்சலி

## நகைச்சுவை இலக்கிய முன்னோடி பொ. சண்முகநாதன்



சங்குவேலியைச் சேர்ந்த பொன்னையா பவானி தம்பதியின் மகனாக 12–02–1939இல் பிறந்த சண்முகநாதன் கந்தரோடையில் வாழ்ந்தவர்.

"றிப்போட் தயாரிப்பது எப்படி?" என்ற இவரது முதலாவது நகைச்சுவைக் கட்டுரை 1961ஆம் ஆண்டில் வீரகேசரியில் வெளிவந்தது. பின்னர் கொழும்புப்பெண், கொழும்புப்பெண் வேண்டாம், கந்தர் புராணம், சிறுகதை எழுதுங்கள், எழுத்தாளன் ஆகிய கட்டுரைகளையும் றிச்சேட்கிழவன் என்ற சிறுகதையையும் கலைச்செல்வியில் எழுதி கலைச்செல்வி எழுத்தாளர் குழுவில் சேர்ந்துகொண்டார்.

"சோறும் தண்ணீரும்" என்ற இவரது குறுநாவல் சிரஞ்சீவியில் தொடராக வெளிவந்து வாசகரின் பெரும் அபிமானத்தைப் பெற்றது. 2003–2005 காலப்பகுதியில் உதயன் இதழில் "சண் அங்கிள்" என்ற பெயரில் வாரந்தோறும் இவர் எழுதிய பத்தி எழுத்துக்கள் மிகப்பெரிய வாசகர் வட்டத்தை இவருக்குப் பெற்றுக் கொடுத்தது.

இலங்கை வானொலியின் கலைக்கோலம், கலைப்பூங்கா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தன்னுடைய கட்டுரைகள் சிலவற்றை வாசித்துள்ளார்.

இவரது எழுத்துப் பணிகளைப் பாராட்டி வலிகாமம் தெற்குப் பிரதேச கலாசாரப் பேரவை "ஞான ஏந்தல்" விருதை 2008ஆம் ஆண்டு வழங்கிக் கௌரவித்தது. இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் அதே ஆண்டில் கலாபூஷணம் விருது வழங்கியது. உலகப் புத்தக தினத்தை ஒட்டி சுன்னாகம் பிரதேசபை 2009ஆம் ஆண்டு நடத்திய விழாவில் இவருக்கு "தமிழ்ச்சுடர்" விருது வழங்கப்பட்டது. ஞானம் சஞ்சிகை 2011 மார்ச் இதழில் இவரை அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்தது. பொ.சண்முகநாதன் 15–12–2021 அன்று அமரரானார்.

# வாசகர் பேசுகிறார்

ஞானம் 259வது இதழ் கிடைத்தது. அதில் எனது கவிதையை அழகியமுறையில் பிரசுரித்தமைக்கு தங்களுக்கு எனது நன்றிகள்.

தங்களது "ஞானம் சஞ்சிகைக் காலம்" பகுதியை வாசித்தபோது ஞானம் 1ஆவது இதழில் இடம்பெற்ற 'இலக்கியப் பணியில் இவர்'என்ற தொடரில் முதல் மரியாதை வழங்கப்பட்டவர் எமது திருமலை மண்ணின் கலை இலக்கிய முன்னோடியாக இருந்து மறைந்தும் மறையாதுவாழும் அமரர் சித்தி அமரசிங்கம் என்பதையறிந்து பெருமகிழ்வடைந்தேன்.

ஆம், உண்மையில் அவரைப்போல அர்ப்பணிப்புடன் இங்கு கலை இலக்கியப்பணியாற்றியவர் எவருமே இல்லையென அடித்துக்கூறலாம். இன்றுவரை அன்னாரின் வெற்றிடம் நிரப்பப் படாமலேயே உள்ளது.

அதேபோன்று 3ஆவது இதழில் வ.அ. கௌரவம் பெற்றதையும் அறிந்துபெருமைகொண்டேன். சிறுகதை உலகில் தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்து கிழக்கு மண்ணுக்கு பெருமை சேர்த்த ஒருவர் வ.அ என்றால் மிகையாகாது. இவர்களையெல்லாம் எடுத்த எடுப்பிலேயே இனங்கண்டு கௌரவித்த ஞானத்துக்கும் இப்படியான ஒரு பகுதியை முதலாவது ஞானம் இதழிலேயே பிள்ளையார் சுழிபோட்டு ஆரம்பித்துவைத்த ஞானம் இணையாசிரியராய் விளங்கிய திரு.ந.பார்த்திபன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இன்றும் பல்வேறு இலக்கியப்பணிகளில் தன்னை அர்ப்பணித்துவரும் வித்தகரும் பேரறிஞராகவும் திகழும் அவர்களை பாராட்ட வார்த்தைகளில்லை. என்றும் 'பசுமை'யாய் அவர் பணி தொடரட்டும்.

இதே வேளை பேராசிரியர் துரை மனோகரனின் எழுதத்தூண்டும் எண்ணங்கள் பற்றியும் சில வரிகளை எழுதாமல் நகர முடியவில்லை. பாரதி பற்றிய யதுகிரி அம்மாவின் நூலைக் குறிப்பிட்டு தன்னை எப்போதும் கவர்ந்த நூல்களில் ஒன்றாக அது விளங்குகிறதெனவும் விதந்துரைத்து எம்மிடையேயும் அந்த நூலை கட்டாயம் வாசிக்கவேண்டும் என்ற ஒரு எண்ணப்பாட்டை விதைத்தும் விட்டதுடன் பாரதி பற்றிய சுவையான பல தகவல்களையும் எமக்கு சுருக்கமாகவும் சுவையாகவும் அறியத்தந்த பேராசிரியரின் நல் எண்ணங்கள் எங்கள் சிந்தனைக்கு எப்பொழுதும் ஒரு தூண்டுதலாக அமையட்டும்.

பொதுவாக மார்கழி ஞானம் குளிர்ச்சியான சிறுகதைகள் கவிதை கட்டுரைகள் கலை இலக்கிய நிகழ்வு தகவல்களுடன் சிறப்பாக அமைந்துள்ளது.ஆசிரியருக்கும் அவருடன் இணைந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அனைவருக்கும் வரும் புத்தாண்டு சிறப்பாக அமைய எனது நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். **– ஷெல்லிதாசன், திருகோணமலை.**

●●●

"தமிழ்மணி" மானா மக்கீனின் பத்தி எழுத்தைப் பார்த்ததுமே மனதில் இன்ப அதிர்ச்சி. பாரதியை இந்தக் கோணத்தில் சிந்தித்தது புதுமை, இனிமை. அவனது "முஸ்லிம் நேசம்" பற்றி எழுத முனைவோருக்கு உசாத்துணையாகக் கொள்ளக்கூடிய பல தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன கட்டுரையில். நம் மத்தியிலிருந்த இருக்கும் தமிழறிஞர்கள் இந்த ஆய்வில் தவறியிருப்பது கவலை தருகிறது.

புதுமைப்பித்தனின் "ஆற்றங்கரை பிள்ளையார்" சிறுகதை பற்றிய கிறிஸ்டி நல்லரெத்தினத்தின் "வாசிப்பு அனுபவம்" அறியாத பல விடயங்களை அறியவைத்தது. நல்லதொரு ஆக்கம்.

மேமன்கவியின் "முதல் கல்" கவிதை சிந்திக்க வைத்தது. இயேசுநாதர் கூறியதையும், அகலிகையையும் இணைத்த விதம் அருமை. வாழ்த்துகள்.**– எம்.எஸ்.அப்துல் லதீப், கொழும்பு 3.**

●●●

எனது சிறுகதை ஒன்றை பரிசுக்குரிய கதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு நன்றி!!மேலும் இந்த மாதம் பிரசுரமான கதை பரவலாக கவனம் பெறுகிறது. கதைக்கான ஓவியம் மிக அருமை. நன்றி, தொடர்ந்து பணிப்போம். **– அண்டனூர் சுரா**

●●●

ஞானத்தின் தொடர்ச்சியான வருகையும் அது ஈழத்து தமிழ் இலக்கியப் புலத்தில் செய்துவரும் மாற்றங்களும் பாராட்டுக்குறியவை. கொவிட் பெருந்தொற்று காலத்தில் கூட ஞானத்தை நிறுத்திவிடாமல் வெளியிட்டு வாசகர்களுக்கு அனுப்பி வைத்தமை மனங்கொள்ளத்தக்க விடயமாகும். ஞானத்தின் தொடர்வருகைக்கு எனது இதயத்து வாழ்த்துகள். **– நாச்சியாதீவு பர்வீன்**

●●●

வாழ்த்துகிறோம் ஞானமே
ஒவ்வொரு மாதமும்
உந்தன் பிறப்பு
இருபத்தோரண்டுக் கடப்பு
இடைவிடா இணைவுச் சிறப்பு
உருவாக்கத்திலே குறையிலாக் கச்சித நிறைவு
தருவதோ அதையுந்தன்
வடிவச் செதுக்கல்
வருபவர் வரிகளால் நுழைபவர்
ஏறுவர் களம்
பெறுவர் முழுமுகம்
ஆளுமைகளும் பலவிதத்தில்
இனமதத் தடுப்பு இல்லா
உந்தன் எடுப்பே
தோழமைக்கு வித்து
விழிப்புணர்வு விருப்பே
உந்தன் பெரும் சொத்து
பழிப்பின்றி நிறைவுகளைத்
அளித்துநீ தொடர்ந்தும்
இதழ் விரித்துச் சிரித்திட
வாழ்த்துகிறோம் ஞானமே! **–மனோகரி. ஜெகதீஸ்வரன், கொழும்பு.**

---

## வலம்புரி கவிதா வட்டம் மறைந்த வகவம் ஸ்தாபக பொதுச்செயலாளர் கவிஞர் கவின்கமல் ஞாபகார்த்தமாக நடத்திய சர்வதேச கவிதைப் போட்டி–2020

முதலாம் பரிசு - ரூபா 25000.00 பணப்பரிசும் விருதும் சான்றிதழும்
**புலவர் எஸ். மோகன்குமார்– தமிழ்நாடு**

இரண்டாம் பரிசு - ரூபா 12500.00 பணப்பரிசும் விருதும் சான்றிதழும்
**கவிமணி அ. கௌரிதாசன்–கிண்ணியா**

மூன்றாம் பரிசு - ரூபா 7500.00 பணப்பரிசும் விருதும் சான்றிதழும்
**பாலமுனை பாரூக்– பாலமுனை**

**பத்து ஆறுதல் பரிசுகள் – தலா ரூபா 1000.00 பணப்பரிசும் சான்றிதழும்**

1.எஸ்.சுதாகரன் - சாவகச்சேரி
2.மெய்யன் நடராஜா - வத்தளை
3.எம்.ஐ.அச்சி மொஹமட்- சம்மாந்துறை
4.ரீ.எல்.ஜவ்பர்கான்-காத்தான்குடி
5. திருமதி ரி.விஷ்ணு குமார்- திருகோணமலை
6.எச்.எம். அப்துல் ஹலீம்-ஏறாவூர்
7.ஏ,எச்.எம்.ஜிஹார்- புதிய காத்தான்குடி
8. எச்.எப். ரிஸ்னா- கல்கிசை
9.ஜி. கங்கனா-மட்டக்களப்பு
10.மூர்த்தி தினு- மட்டக்களப்பு.

**பரிசளிப்பு விழா விபரம் விரைவில் அறிவிக்கப்படும்.**

**ஸ்தாபக குழு இயக்கம்**
**வலம்புரி கவிதா வட்டம்**